
இஸ்லாமிய வரலாறும் நாகரிகமும்—03

# நான்கு கலீபாக்கள்

மௌலவி எஸ்.எச் ஆதம்பாவா MA



கலமுஷ் ஷர்க் வெளியீடு - 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய வரலாறும் நாகரிகமும் -03

MARUTHAMUNAI
PUBLIC LIBRARY

# நான்கு கலீபாக்கள்

மௌலவி எஸ்.எச் ஆதம்பாவா M.A

LENDING SECTION

கலமுஷ்-ஷர்க் வெளியீடு -06

2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title : ISLAMIYA VARALARUM NAHARIHAMUM -03
**NAANKU KHALIPHAKKAL**

Author : Moulavi S.H.ATHAMBAWA
B.A. Hons (S.L) B.A (SP) Madina,K.S.A,
M.A(S.L)
Former Lecturer (Visiting )
South Eastern University -Oluvil.

Address : 72,Al-Hilal Road,
Sainthamaruthu-11,

Phone : +94672221965
+94777839527

Email : athambawahameed@yahoo.co.uk

First Edition : 20.10.2011

Copy right : Author

Price : 200/=

Published by : Kalamush-sharq Publication Bureau
72,Al-Hilal Road,
Sainthamaruthu-11,

Printed by : A.J. Printers (Pvt)Ltd, Dehiwala.

ISBN : 978-955-1407-03-2

Bar corde : 9789551407032

297.641/ஆதம்
109 80

التاريخ الإسلامي وحضارته
إسم الكتاب: الخلفاء الأربعة

إسم المؤلف : الشيخ ادم باوا بن شاه الحميد
ليسانس من الجامعة الإسلامية بالمدينة المنورة
بكالوريوس(سريلانكا) ماجستير(سريلانكا)

الناشر : قلم الشرق للنشر



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
**DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS**


දුරකථන / தொலைபேசி / Telephone
අධ්‍යක්ෂ / பணிப்பாளர் : 2675367 / Director :
කාර්යාලය / அலுவலகம் : 2672646 / Office :
Fax : 2692147
E-mail : dir@muslimaffairs.gov.lk
Website : www.muslimaffairs.gov.lk


මගේ අංකය :
எனது இல. :
My Ref. No. :

ඔබගේ අංකය :
உமது இல. :
Your Ref. No. :

بسم الله الرحمن الرحيم

# அணிந்துரை

மௌலவி எஸ்.எச். ஆதம் பாவா அவர்கள் எழுதிவரும் இஸ்லாமிய வரலாறும் நாகரிகமும் தொடரில் "நான்கு கலீபாக்கள்" என்ற நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். "அல்ஹம்துலில்லாஹ்"

இஸ்லாம் நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு மார்க்கமாகும். ஆதிபிதா ஆதம் (அலை) முதல் இன்றுவரை அதன் வரலாறு நீண்டு செல்கின்றது. தமிழ் மொழியில் இஸ்லாமிய வரலாறு தொடர்பாக எழுதப்புட்ட நூல்கள் மிகக் குறைவாகும். அவ்வாறு எழுதப்பட்ட நூல்களுள் பெரும் பாலானவை மேற்கத்தைய நாட்டவர்களால் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட நூல்களை உசாத்துணையாகக் கொண்டு எழுதப்படிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. இதனால் வரலாற்று நிகழ்வுகள் சில சந்தர்ப்பங்களில் திரிபு படுத்தியும் சில போது பிழையாகவும் எழுதப்பட்டிருப்பதனைக் காணக் கூடியதாயுள்ளது. உதுமான் (ரலி) அவர்கள் காலத்தில் நடைபெற்ற குழப்பங்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகக் கூறமுடியும்.

வரலாற்றை எழுதுபவர்கள் பக்கம் சாராது உள்ளதை உள்ளபடி கூறவேண்டியவர்கள். அந்த வகையில் மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா எம்.ஏ. அவர்கள் சுமந்துள்ள இப்பொறுப்பு மிகவும் பொறுப்புவாய்ந்த அமானிதமாகும்.

இந்த பொறுப்பைச் சுமந்துள்ள மௌலவி அவர்கள் இஸ்லாமிய வரலாற்றில் நீண்ட அனுபவம் கொண்டவர் அவர் இந்த பணியை சிறப்பாகச் செய்து முடிப்பார் என நம்புகின்றேன்.

மேற்படி பணியை சிறப்பாக செய்து முடிப்பதற்கு அல்லாஹ்வின் மேலான உதவியும் அருளும் கிடைக்க பிராத்திக்கின்றேன்.

வை.எல்.எம். நவவி
பணிப்பாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

வை.எல்.எம். நவவி
பணிப்பாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்
180, ரி.பி. ஜாயா மாவத்தை
கொழும்பு - 10


තැපැල් පෙට්ටිය / தபால் பெட்டி / P.O. Box : 543
180, ටී.බී. ජයා මාවත, කොළඹ - 10. / 180, ரி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு – 10. / 180, T.B. Jayah Mw., Colombo - 10.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

## அணிந்துரை

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே, அவனின் தூதுவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர் வழி நிற்போர் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தி நிலைத்து நிற்பதாக.

"எனக்குப் பின் முப்பது வருடங்கள் நேர்மையான கிலாபத் ஆட்சி இடம் பெறும்" (திர்மிதி) என்ற நபிமொழிக்கமைய ஹிஜ்ரி 11 ம் ஆண்டு முதல் 40 ம் ஆண்டு வரை இஸ்லாமிய உலகை அலங்கரித்த, உலகத்துக்கே முன்மாதிரியாக அமைந்த இஸ்லாமிய கிலாபத் வரலாறு, "நான்கு கலீபாக்கள்" என்ற தலைப்பில் ஒரு நூலாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மௌலவி எஸ். எச். ஆதம் பாவா (மதனி) எம். ஏ. அவர்கள் இந்நூலை அழகு தமிழில் இலகு மொழியில் முன்வைத்துள்ளார்கள். இஸ்லாமிய நாகரீகத்துறையில் பட்டப்பின்படிப்பு கற்கை நெறியைப் பூரணப்படுத்தியுள்ள நூலாசிரியர், அத்துறை சார்ந்ததாகவே இந்நூலை முன்வைத்திருப்பது பொருத்தமானதாகும். நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய நாகரிகத்தில் முதுமானிக்கற்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின் முதன் முதல் எம்,ஏ பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய வரலாறு, குர்ஆன், ஹதீஸுடன் இணைந்து வளர்ந்த வரலாறொன்றாகும். அது தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளது. மனித இனத்தின் வரலாற்றையே மாற்றியமைத்த பெருமையும் அதற்குண்டு. இஸ்லாமிய வரலாற்றில் இடம் பெற்ற சம்பவங்கள் அனைத்தும் நம்பகமான அறிவிப்பாளர்களின் தகவல்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை அதன் சிறப்பம்சமொன்றாகும்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட போதனைகள் வெறும் ஏட்டில் அமைந்ததல்ல. அவை நடைமுறையில் உலகில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரலாறு படைத்தவைகளாகும். நபியவர்களால் மதீனாவில் ஸ்தாபிக்கப்பட்ட இஸ்லாமிய அரசை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றதில் முதல் நான்கு கலீபாக்களும் சிறப்பிடம் பெற்றுள்ளனர். இவர்கள் எதிர்கொண்ட சவால்கள் ஒன்றிரண்டல்ல. இஸ்லாமிய கிலாபத்தையே ஆட்டங்காணச் செய்த அந்த சவால்களுக்கு மத்தியில் இஸ்லாத்தை நிலைபெறச் செய்ததில் அவர்களது தியாகங்கள் என்றும் நினைவு கூரத்தக்கவையாகும். இந்த சவால்கள் இஸ்லாம் அல்லாத வேறு கொள்கைகளால் எதிர்கொள்ளப்பட்டிருந்தால் அவை அன்றே தமது முகவரிகளை இழந்திருக்கும். ஆனால் இஸ்லாம், அதன் தூய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனைகளாலும். அதனைப் பின்பற்றியவர்களின் தியாக செயற்பாடுகளினாலும் அங்கொன்றிங்கொன்றாக சில பின்னடைவுகளைச் சந்தித்திருந்தாலும் அது என்றும் தலை நிமிர்ந்தே இருந்து வருகின்றது. இஸ்லாத்தின் இந்த ஸ்தீரமான வரலாற்றை, மௌலவி ஆதம்பாவா அவர்கள் தனது நூலில் ஆதாரபூர்வமாக எடுத்தியம்பியுள்ளார்கள். இந்நூலின் ஐந்தாம் அத்தியாயமான கலீபாக்கள் காலம் ஒரு கண்ணோட்டம் என்ற பகுதி, இஸ்லாமிய கிலாபத்தின் நிர்வாக ஒழுங்கு முறையை முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத சகலரும் சரிவர விளங்கிக் கொள்வதற்கு துணை செய்கின்றது.

இந்நூலைத் தொகுத்துத் தந்த நூலாசிரியர் அவர்களுக்கு எனது நன்றிகள். பாடசாலை மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வியைத் தொடர்பவர்களுக்கும் இஸ்லாமிய கிலாபத் பற்றி அறிந்து கொள்ள விரும்புபவர்களுக்கும் இது பயன்மிக்க நூலாகும். நூலாசிரியர் அவர்களின் எழுத்தாக்க முயற்சிகள் மென்மேலும் தொடர வல்ல அல்லாஹ் அருள்பாலிப்பானாக.

அஷ்ஷெய்க் எம்.எஸ்.அப்துல் பாரி M.Phil
சிரேஷ்ட விரிவுரையாளர், முன்னாள் தலைவர்.
அறபு -இஸ்லாமிய நாகரிகத்துறை,
கலைப்பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

# முன்னுரை

எல்லாப்புகழும் ஏக வல்ல அல்லாஹ்வுக்கே! சலவாத்தும் சலாமும் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் கிளையார்கள்,தோழர்கள் அனைவர் மீதும் உரித்தாகுக!

" இஸ்லாமிய வரலாறும் நாகரிகமும் " என்ற தலைப்பில் இன்ஷா அல்லாஹ் நான் எழுத உத்தேசித்துள்ள தொடரில் மூன்றாம் பகுதியான " நான்கு கலீபாக்கள் " என்ற நூலை வெளிக்கொணர்வதில் பெருமகிழ்வெய்துகின்றேன்; அல்ஹம்துலில்லாஹ்.

ஏற்கனவே என்னால் வெளியிடப்பட்ட இஸ்லாமிய வரலாறு என்ற நூல் ஜாஹிலிய்யாக்காலத்தை முதலாம் பகுதியாகவும் நபி (ஸல்) அவர்கள் வாழ்க்கையை இரண்டாம் பகுதியாகவும் கொண்டு வெளியாகியது.

இந்நூல் வாசகர்களிடையே குறிப்பாக உயர்கல்வி பெறும் மாணவரிடையே பெற்ற வரவேற்பு குறிப்பிடத்தக்கது. இதன் இரண்டாம் பதிப்பு வெளிவந்த போதும் மூன்றாம் பதிப்பை வெளியிட வேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

இதன் மூலம் இஸ்லாமிய வரலாறு தொடர்பான நூல்களை மாணவர்கள் தேடிப்படிக்கின்றனர் என்பது தெளிவாகின்றது. எனவேதான் இஸ்லாமிய அறிவு உலகிற்கு என்னாலான ஒரு சேவையைச் செய்யவேண்டும் என்ற உந்தலில் இத்தொடரை எழுத முன்வந்துள்ளேன்; அல்லாஹ் போதுமானவன்.

1975ம் ஆண்டு கல்முனை சாஹிறாக்கல்லூரிக்கு ஆசிரியராக நான் பொலநறுவை மாவட்டத்திலிருந்து இடமாற்றம் பெற்றுவந்தபோது க.பொ.த.ப உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இஸ்லாமிய நாகரிகம் கற்பிக்கப் பணிக்கப்பட்டேன். எனது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற அங்கலாய்ப்பில் போதனையை மேற்கொண்டேன்; முயற்சியில் வெற்றியும் பெற்றேன்.

பின்னர் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்ற போதும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டப்பரீட்சைக்காகவும் இஸ்லாமிய நாகரிகத்தை ஒரு பாடமாகப்படிக்கவேண்டி இருந்தது.

அதன்பின் மதீனாப்பல்கலைக்கழகம் சென்று அறபு இலக்கியத்துறை மாணவனாகப்பயின்ற போது ஜாஹிலிய்யாக்காலம் முதல் இன்றைய காலம் வரை அறபு இலக்கிய வரலாறு ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டது. தலைசிறந்த விரிவுரையாளர்களால் வரலாறும் இலக்கியமும் போதிக்கப்பட்டது. அது தவிர இஸ்லாமிய வரலாறு என்ற ஒரு பாடமும் எமக்குப்போதிக்கப்பட்டது. இதனால் அப்பாடத்தில் உள்ள சிறப்பான நூல்களை அறிந்து கொள்ளவும் வழி ஏற்பட்டது.

பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைத்துறையில் எம்.ஏ. பட்டத்துக்காகப்பயின்ற போது அங்கும் இஸ்லாமிய வரலாறு எமக்குப்போதிக்கப்பட்டது.

மேலும் மஹறகம தேசிய கல்வி நிறுவனத்தின் ( N.I.E ) தொலைக்கல்வி மூலம் ஆசிரியர் பயிற்சி வழங்கும் செயற்றிட்டத்தின் இஸ்லாம் பாட போதனாசிரியராக நான் நியமிக்கப்பட்டதால் பயிற்சி ஆசிரியர்கட்கு இஸ்லாமிய வரலாற்றைப்போதிக்க வேண்டி ஏற்பட்டது.

மேலும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அறபு இலக்கிய வரலாறை நான் போதித்த வேளை வரலாற்றையும் இலக்கியத்தையும் இணைத்துப்போதிக்க வேண்டிய அவசியம் இருந்தது. இலங்கை வானொலி முஸ்லிம் சேவையிலும் இஸ்லாமிய வரலாறு எனும் தலைப்பில் தொடர் பேச்சுக்களை நான் நிகழ்த்தியதையும் வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

எனவே எமது பாடசாலைகளிலும் அறபுக்கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயிலும் மாணவர்களின் நன்மை கருதி நான் பெற்ற கல்வியில் அவர்களும் நன்மைபெறவேண்டுமெனக்கருதியே இத்தொடரை எழுத முன்வந்துள்ளேன். எல்லாம் வல்ல அல்லாஹ் அதற்கான ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் தரப்பிரார்த்திக்கின்றேன்.

இவ்வாறான முயற்சிக்கு என்னைத்தூண்டியது மற்றொரு முக்கிய விடயமாகும். தமிழ் மொழியில் நாம் பெறுகின்ற இஸ்லாமிய வரலாற்று, நாகரிக நூல்கள் மேற்கத்திய வாதிகளால் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட நூல்களை உசாத்துணையாகக்கொண்டே எழுதப்பட்டுள்ளன.

அறபுமொழியில் புகழ் பூத்த இஸ்லாமிய வரலாற்றாசிரியர்களான இப்னுஹிஷாம், இப்னு கதீர், இப்னு ஜரீர் தபறி, இப்னுல் அதீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்களின் புகழ்மிக்க இஸ்லாமிய வரலாற்று நூல்கள் இஸ்லாமிய நூல்நிலையங்களை நிறைத்துள்ள நிலையில் அவற்றையெல்லாம் புறந்தள்ளி எமது வரலாற்றை அறிய நாம் ஏன் மேற்கத்திய வாதிகளிடம் தஞ்சம் புகவேண்டும்?

எனவேதான் இந்நூலும் எனது முந்திய வரலாற்று நூலும் அறபு மொழியிலான இஸ்லாமிய அறிஞர்களின் நூல்களை உசாத்துணையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளன. இன்ஷா அல்லாஹ் இனிவரும் நூல்களும் இந்த அடிப்படையிலேயே எழுதப்படவுள்ளன.

இந்நூலில் நபி (ஸல்) அவர்களின் பின் ஆட்சி செய்த நான்கு கலீபாக்கள் பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளது. ஐந்தாம் பாடத்தில் கலீபாக்கள் கால நாகரிக வளர்ச்சி தெளிவாக்கப்பட்டுள்ளது. இக்கால இலக்கியம் பற்றியும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அக்கால இலக்கிய வரலாறுகள் ஓரளவு தெளிவாக விளக்கப்படும்.

## வேண்டுகோள்

இந்நூலை வாசிக்கும் சகோதரர்கள் நபி(ஸல்) அவர்களின் பெயருக்குப்பின்னால் உள்ள (ஸல்) என்ற அடையாளத்தைக் கண்டவுடன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்றும் சஹாபாத்தோழர்களின் பெயர்கள் வரும்போது றழியல்லாஹு அன்ஹு என்றும் ஸஹாபாப் பெண்கள் பெயர்களை றழியல்லாஹு அன்ஹா என்றும் பூரணமாகக்கூறுமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

## நன்றிகள்

இந்நூலை எழுதி அச்சிட உதவிபுரிந்த வல்ல அல்லாஹ்வுக்கே முதற்கண் எனது நன்றிகள் உரித்தாகுக! அவனது உதவி இல்லையென்றால் இவ்வாறான ஒரு முயற்சியை என்னால் செய்திருக்க முடியாது. அடுத்து எனது நன்றிக்குரியவர்கள் வாசகர்களாகிய நீங்களே! உங்களது ஒத்துழைப்பு இல்லையென்றால் இதனை எழுதும் தேவை எழுந்திருக்காது.

இந்நூலுக்கு வாழ்த்துரைகள் வழங்கியுள்ள முஸ்லிம் சமய கலாசார திணைக்களப்பணிப்பாளர் அஷ்-ஷேக் வை.எல்.எம்.நவவி அவர்களும் பேராதனைப்பல்கலைக் கழக முன்னாள் அறபு-இஸ்லாமிய நாகரிக பீடத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான நண்பர் எம்.எஸ்.அப்துல்பாரி அவர்களும் எழுத்துப்பிரதிகளை டைப் செய்து உதவிய எனது அன்பு மாணவர்களான மௌலவி ஏ.ஏ.எம்.பர்ஸாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஹாமி) ,மௌலவி யு.எல் அஹ்மத் றாஸிம் (ஹாமி) ஆகியோர்களும் பிரதிகள் செய்து உதவிய எனது அன்பு மகன் நீதியமைச்சில் பணிபுரியும் அஸ்லம் முஹம்மது ஐஸ்லி அவர்களும் பிரதிகளை சரிபார்த்துதவிய நண்பர் எம்.எம் ஆதம் பாவா அவர்களும் இதனை அச்சிட்ட தெஹிவளை ஏ.ஜே பிரிண்டர்ஸ் நிறுவனத்தினரும் குறிப்பாக சகோதரர் M.J.M. சியாட் அத்தாரி அவர்களும் எனது நன்றிக் குரியவர்கள்.

ஏற்கனவே என்னால் எழுதப்பட்ட ஏழு நூல்களுக்கும் ஆதரவு நல்கியது போல் இந்நூலுக்கும் வாசகர்கள் ஆதரவு நல்குவர் என நம்புகிறேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் எனது இந்த முயற்சியை அவனது த.்.வாப்பணியிலொன்றாக ஏற்று அருள் பாலிப்பானாக!

மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா

72,அல் ஹிலால் வீதி

சாய்ந்தமருது-11

20.10.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொருளடக்கம்

| | |
|---|---|
| கலீபாவும் கிலாபத்தும் | 01 |
| அபூபக்ர் (றழி) | 02 |
| ஸகீபது பனீ ஸாயிதா | 03 |
| பதவியேற்பும் பிரசங்கமும் | 07 |
| தகைமைகள் | 08 |
| சவால்கள் 01. உஸாமாவின் சேனை | 14 |
| 02. ஸகாத் மறுப்பாளர்கள் | 16 |
| 03. பொய் நபிகள் | 19 |
| இஸ்லாமிய வெற்றிகள் | 27 |
| அல்குர்ஆன் நூலுருவிலாதல் | 33 |
| நிருவாக ஒழுங்கு | 35 |
| மரணம் | 38 |
| கலீபா உமர் (றழி) | 38 |
| இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளல் | 39 |
| சிறப்புக்கள் | 42 |
| யுத்தங்களும் வெற்றிகளும் | 44 |
| பொதுச்சொத்தும் பேணுதலும் | 52 |
| கலீபா கொல்லப்படல் | 55 |
| ஒரு கண்ணோட்டம் | 57 |
| கலீபா உஸ்மான் (றழி) | 64 |
| சிறப்புகள் | 65 |
| மஷூறா சபையும் கலீபாத்தேர்வும் | 67 |
| யுத்தங்களும் வெற்றிகளும் | 69 |
| குழப்பங்களும் பிரச்சினைகளும் | 72 |
| வீடு முற்றுகை | 77 |
| கலீபா அலி (றழி) | 81 |
| சிறப்புகள் | 82 |
| கலீபாவாகப்பதவியேற்பு | 83 |
| ஜமல் யுத்தம் | 88 |
| ஸிப்பீன் யுத்தம் | 93 |
| கவாரிஜ்கள் தோற்றம் | 97 |
| கலீபா கொல்லப்படல் | 101 |
| ஹஸன் (றழி) பதவியேற்பு | 102 |
| கலீபாக்கள் காலம் ஒரு கண்ணோட்டம் | 104 |
| அரசாங்க வருமானம் | 106 |
| பாதுகாப்பு, சட்டம், ஒழுங்குகள் | 108 |
| நகரங்கள் உருவாக்குதல் | 112 |
| இலக்கியம் | 116 |
| சமூக நிலை | 120 |
| உசாத்துணை | 124 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரம்பரைப் பட்டியல்

குறைஷிக் கோத்திரம் தந்த கலீபாக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MARUTHAMUNAI
PUBLIC LIBRARY

# கலீபாவும் கிலாபத்தும்

கலீபா எனும் அறபுச் சொல்லுக்கு பிரதிநிதி என்பது பொருள். இஸ்லாமிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நபி(ஸல்) அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துபவரை கலீபா என அழைக்கப்படும். ஆட்சி செய்யும் அதிகாரம் கலீபாவுக்குள்ளது போல் அவர் 'ஷரீஆ' வுக்குட்பட்டு நடக்கும் காலமெல்லாம் அவரைப் பின்பற்றி நடக்க வேண்டிய பொறுப்பு உம்மத்தினருக்குண்டு. அம்மக்களை மார்க்கத்தின்பால் நடத்தவும் தண்டனைகளை நிறைவேற்றவும் ஷரீஆ விதிமுறைகளை அமுல் நடத்தவும் அதிகாரம் அவருக்குண்டு.மேலும் மக்களின் உலக விவகாரங்களுக்கும் அவர் பொறுப்பாக இருப்பார்.சமூகத்தின் தலைமைத்துவம் அவர் கைகளிலேயே இருக்கும்.

எனவே கிலாபத் என்பது இஸ்லாமிய ஆட்சி முறையையும் கலீபா என்பது இஸ்லாமிய ஆட்சியாளரையும் குறிக்கின்றது.

கலீபா என்னும் அறபுச் சொல்லின் பன்மைச்சொல் 'குலபாஉ' என்பதாகும். றாஷிதூன் என்றால் நேர் வழி சென்றவர்கள்.

அல் குலபாஉர் றாஷிதூன் என்றால் நேர்வழியில் சென்ற கலீபாக்கள் எனப் பொருள்படும்.

'எனக்குப்பின் முப்பது வருடங்கள் நேர்மையான கிலாபத் ஆட்சி நடைபெறும்'

(திர்மிதி)

என்ற ஹதீஸுக்கு ஏற்ப அக்கால எல்லையில் அதாவது ஹிஜ்ரி 11 முதல் 40 வரை ஆட்சி செய்த நபித்தோழர்கள் 'குலபாஉர் றாஷிதூன்' என அழைக்கப்படுகின்றனர்.

அபூபக்ர் சித்தீக் (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் முதல் கலீபாவாக நியமனம் பெற்றார்கள்.அவர்களைத் தொடர்ந்து கலீபாக்களாக உமர் (றழி), உதுமான் (றழி) , அலி (றழி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் குறைஷிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் நால்வர் பற்றியும் இந்நூல் விபரமாக ஆராய விருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01 அபூ பக்ர் சித்தீக் (ரழி)

இவரது பெயர் அப்துல்லாஹ்,தந்தை பெயர் உதுமான், தாயின்பெயர் உம்முல் கைர் சல்மா. ஜாஹிலிய்யாக்காலத்தில் அப்துல் க.்.பா,அதீக் எனும் பெயர்களால் அழைக்கப்பட்ட இவரின் தந்தை உதுமான் 'அபூகுஹாபா' எனும் பெயரில் அழைக்கப்பட்டார். இவர்கள் குறைஷிக் குலத்தில் 'தைமி' கிளையைச் சேர்ந்தவர்கள்.அபூபக்ர் என்ற காரணப் பெயரைக் கொண்ட இவர் நபி(ஸல்)அவர்களை சகல வற்றிலும் உண்மைப்படுத்தியதால் 'சித்தீக்' என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

நபி(ஸல்) அவர்களைவிட இரண்டு வருடங்கள் இளையவரான இவர் சிறுவயது முதலே நற்பண்புகள் நிறைந்த ஒருவராகத்திகழ்ந்தார்.

## திருமணமும் குழந்தைகளும்

இஸ்லாத்துக்கு முன் முதன் முதலாக அப்துல் உஸ்ஸாவின் மகள் கதீலா என்பவரைத் திருமணம் செய்தார்.இவர் மூலம் அப்துல்லாஹ்,அஸ்மா ஆகிய இரு குழந்தைகளுக்குத் தந்தையானார். இரண்டாவதாக ஆமிருடைய மகள் உம்மு றூமானை மணம் செய்து அப்துர் ரஹ்மான், ஆயிஷாஆகிய குழந்தைகளையும் பெற்றார்.
இஸ்லாத்தைத் தழுவி மதீனாவுக்கு ஹிஜ்ரத் வந்த பின் அன்சாரிப் பெண்ணான ஹபீபா என்பவரை மணந்தார். அவர் மூலம் உம்மு குல்தூம் என்ற பெண் குழந்தை பிறந்தது.

பின்னர் மு.்.தா யுத்தத்தில் ஷஹீதான ஜ.்.பர் பின் அபீதாலிப் (ரழி) அவர்களின் விதவையான அஸ்மா பின்து உமைஸ் என்பவரை மணமுடித்து அவர் மூலம் முஹம்மத் எனும் ஆண் குழந்தைக்குத் தந்தையானார்.

## பண்புகள்

வெள்ளை நிறமும் ஒல்லியான தோற்றமும் உடைய அபூபக்ர் (ரழி) அவர்கள் தாடிக்கு மருதோண்டி போடுபவர். வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்டிருந்த இவர் 'ஷாம்' போன்ற தூர தேசங்களுக்கும் அபூதாலிப் போன்றோருடன் சேர்ந்து சென்றுள்ளார்.

ஜாஹிலிய்யாக்காலத்திலோ அதற்குப் பின்னரோ அவர் மது அருந்தியதில்லை. அதே போல் சிறு பிராய முதலே அவர் விக்கிரக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கத்தில் ஈடுபடவுமில்லை. இவரது தந்தை இவரை ஒருமுறை அவர் வணங்கும் சிலையடியில் கொண்டு போய் 'இது உனது தெய்வம் இதை வணங்கு' எனக் கூறிவிட்டுச் சென்று விட்டார்.அப்போது அச்சிலையிடம் சென்று நான் பசியோடிருக்கின்றேன் எனக்கு உணவு தா! என்றேன், எவ்வித பதிலும் கிடைக்க வில்லை நான் உடையின்றி இருக்கின்றேன் ஆடை எனக்குத் தா! என்றேன் அதற்கும் எவ்வித பதிலும் கிடைக்க வில்லை, உடனே நான் ஒரு கல்லை எடுத்து அதன் முகத்தில் எறிந்து விட்டு வந்தேன்,என்கிறார்.

வீரமும் வள்ளல் தன்மையும் கொண்ட இவர் உறுதியான முடிவுகளை எடுப்பவர். மார்க்க அறிவு நிரம்பிய இவர் அறபிகளின் கோத்திரங்கள் பற்றி பூரண அறிவு பெற்றவர்.அல்லாஹ் மீது உறுதியான நம்பிக்கை கொண்டவர்.

சிறுபிராயமுதலே நபி (ஸல்)அவர்களுடன் நட்பாக பழகிய இவர் தமது செல்வங்களை இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு வாரி இறைத்தார். அவர் மரணித்த போது எமக்காக ஒரு தங்க நாணயத்தையோ அல்லது வெள்ளி நாணயத்தையோ விட்டு வைக்க வில்லை என அவரது புதல்வி ஆயிஷா(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

## ஸகீபது பனீ ஸாயிதாவும் பதவியேற்பும்

இஸ்லாமிய அரசின் தலைவராக விளங்கிய நபி(ஸல்)அவர்கள் தமது மரணத்தின் பின் தலைமைப் பொறுப்பு யாருக்கு என்பதைத் தெளிவாகக் குறிப்பிடாததால் மதீனாவாசிகள் தகுதியான தலைவர் ஒருவரைத் தமக்குள் தெரிவு செய்ய வேண்டுமென முடிவெடுத்தனர். இவ்வாறு அவர்கள் அவசரப்பட்டதற்கு இஸ்லாமிய ஆட்சிப் பலத்தினால் அடங்கியிருந்த நாட்டறபிகள், அறபுக்கோத்திரத்தினர், இஸ்லாத்தின் எதிரிகள் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி மதீனாவைப் பிடித்து விடுவார்களோ என்ற பயம் அவர்களுக்கு! நபி தூதர் (ஸல்) அவர்களின் வபாத்துக்கு முன்னர் சில தூரப்பிரதேசங்களில் ஏற்பட்ட மதமாற்ற (றித்தத்) நிகழ்வுகளையும் இவர்கள் கவனத்திற் கொண்டனர். மக்காவிலிருந்து வந்த முஹாஜிர்கள் தொடர்ந்து மதீனாவில் இருப்பார்களோ அல்லது மீண்டும் மக்கா திரும்பிவிடுவார்களோ என்ற சந்தேகமும் மதீனாவாசிகளுக்கேற்பட்டது. எனவேதான் நபி(ஸல்) அவர்கள் அடக்கம் செய்யப்படும் முன்பே கலீபாவைத் தெரிவு செய்வதில் மதீனாவாசிகள் அவசரம் காட்டினர். மதீனத்து அன்சாரிகள் அவ்சு, கஸ்ரஜ என இருபெரும் கோத்திரத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவர்கள்.இவர்களில் பெரும்பான்மையினர் கஸ்ரஜ் கிளையினரே! இவர்களின் தலைவர் பெயர் ச:.து பின் உபாதா என்பதாகும். இவரது வீட்டு முற்றமே 'ஸகீபது பனீ சாயிதா' என அழைக்கப்பட்டது.இங்குதான் மதீனா வாசிகள் கலீபாவைத் தெரிவு செய்வதற்கு கூடியிருந்தார்கள்.

இவ்வாறு அன்சாரிகள் கூடியிருக்கும் செய்தியை அறிந்த முஹாஜிர்கள் உமர் (ரழி)அவர்களிடம் விடயத்தைக் கூறி விரைந்து அவ்விடம் செல்லுமாறு கேட்டுக் கொண்டனர்.இதன்பேரில் அபூபக்ர்(ரழி),உமர்(ரழி),அபூஉபைதா பின் ஜர்ராஹ்(ரழி) ஆகிய முஹாஜிர்கள் ஸகீபது பனீஸாயிதா வந்தடைந்தனர்.

அன்சாரீன்கள் மத்தியில் நோய்வாய்ப்பட்டுள்ள தமது தலைவர் ச:.து பின் உபாதா அவர்களை கிலாபத் பதவிக்கு நியமிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் பலமாக நிலவியது.இது தொடர்பாக ஓர் உரையையும் அவர் ஆற்றியிருந்தார்.

அங்கு மற்றுமோர் அன்சாரிச்சகோதரர் எழுந்து எமக்குள் பிரச்சினை இல்லாமல் இருவர் சார்பிலும் இருவரை நியமித்துக் கொள்வோம் எனப் பேசினார்.

உமர்(ரழி)அவர்கள் கூறுகின்றார்கள் 'இவ்வாறு அன்சாரி சகோதரர் பேசி முடிந்ததும் நான் எழுந்து பேச விரும்பினேன்.அப்போது அபூபக்ர்(ரழி) அவர்கள் அவர்களை கோபப்படுத்த வேண்டாமென கூறி என்னைத் தடுத்து விட்டு அவர் பேச எழுந்தார். அன்சாரிகளின் சிறப்புக்களை ஒவ்வொன்றாக அவர் விபரித்தார். நான் சொல்ல நினைத்ததை விட மிக அழகான தோரணையில் அபூபக்ர் (ரழி)அவர்கள் பேசினார். குர்ஆனும் ஹதீஸூம் அன்சாரிகள் பற்றி கூறியதை ஒவ்வொன்றாகக் கூறினார்.

நீங்கள் கூறிய அனைத்து நல்ல விடயங்களுக்கும் நீங்கள் பொருத்தமானவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் அறபிகள் இவை அனைத்தையும் அறியாதவர்கள், அவர்கள் குறைஷியர்களுக்கு மட்டும் கட்டுப்பட்டுப் பழகியவர்கள்.

எனவே இங்கிருக்கும் இருவரில் ஒருவரை நீங்கள் தெரிவு செய்து கொள்ளுங்கள் என எனது கையையும் அபூஉபைதா அவர்களின் கையையும் பிடித்தார்.

அபூபக்ர்(ரழி) பேசி முடித்ததும் ஓர் அன்சாரி எழுந்து அல்லாஹ் மீது ஆணையாக! உங்கள் மீது பொறாமைப் படமாட்டோம் உங்களை விட விருப்பமானவர் எவருமில்லை உங்களை நாம் நேசிக்கின்றோம் .இன்று உங்களில் ஒருவரை தெரிவு செய்தால் அவர் மரணித்த பின்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களில் ஒருவரைத் தெரிவு செய்யலாம் எனக் கூறினார்.

இப்பேச்சைக் கேட்ட உமர் (ரழி) அவர்கள் குறைஷி அல்லாத ஒருவர் தலைமைப் பதவிக்கு வருவதை அறபிகள் விரும்ப மாட்டார்கள்.தலைமைப் பதவிக்கு உரித்தானவர்கள் அவர்களே என்று அவர்கள் பார்க்கின்றார்கள்.இதற்குமாறு செய்பவர்களை வெட்டிக் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்றார்.

இவ்வேளையில் அன்சாரியான ஹப்பாப் பின் முன்திர்(ரழி) எழுந்து 'எங்களில் ஒருவர்,உங்களில் ஒருவர்,இருவரும் தலைவராகட்டும்'என்றார்.அப்போது உமர்(ரழி)அவர்களும் 'ஒரே காலத்தில் இருவர் தலைவராக இருக்க முடியாது. நபி(ஸல்)அவர்கள் இல்லாத கோத்திரத்தை அறபிகள் ஏற்கவே மாட்டார்கள் என்ற போதும் ஹப்பாப் பின் முன்திர் தனது நிலைப்பாட்டில் உறுதியாக விருந்தார். இதனை ஏற்குமாறு அன்சாரிகளை வேண்டி நின்றார்.அப்போது அபூஉபைதா பின் ஜர்ராஹ்(ரழி) எழுந்து 'அன்சாரிகளே! நீங்கள் இஸ்லாத்துக்கு உதவி செய்வதில் முதன்மை பெற்றவர்கள்.அதற்கு மாற்றம் செய்வதில் முதன்மையாளராக நீங்கள் ஆகக் கூடாது என்றார்.

அப்போது அன்சாரியான பஷீர் பின் ஸஃது (ரழி) எழுந்து அன்ஸாரிகளே! நாங்கள் அந்நியர்களுக்கெதிராக யுத்தம் செய்து சிறப்படைந்தவர்களில் முதன்மையானவர்கள், இந்த மார்க்கத்திற்கு முந்தியவர்கள். இவற்றுக்குக் கூலியாக அல்லாஹ்வின் பொருத்தத்தையும் அவனது நபியை வழிப்படுவதையுமே விரும்புகிறோம் இப்பிரச்சினை நீண்டு செல்வது கூடாது. உலக வாழ்க்கையை முடிவாகக் கருதக்கூடாது. நபி முஹம்மது(ஸல்) அவர்கள் குறைஷி: அவரது கூட்டத்தினரே தலைமைக்கு பொருத்தமானவர்கள். இதில் நாம் முரண்படக் கூடாது. அல்லாஹ்வைப்பயந்து கொள்ளுங்கள்" என உருக்கமான ஒருவேண்டுகோளை விடுத்தார்.

அப்போது அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த உஸைத் பின் ஹுளைர் என்பவர் எழுந்து

'அன்ஸாரிகளான நாம் இவ்விடயத்தில் முஹாஜிர்களுக்கு விட்டுக்கொடுக்கவேண்டும். அன்ஸாரிகள் பொறுப்பெடுக்கும் போது எம்மத்தியில் அவ்ஸிக்கா அல்லது ஹஸ்ரஜிக்கா என்ற பிரச்சினை எழும். எனவே நாம்அனைவரும் சேர்ந்து முஹாஜிர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்வோம் என அழைத்தார்.

அப்போது உமர் (றழி) அவர்கள் அன்ஸாரிகளைப் பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி(ஸல்) அவர்கள் அபூபக்ர் அவர்களை தொழுகைக்கு முற்படுத்தியதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? என்றதற்கு ஆம் என்றனர். பின்னர் அன்ஸாரியான ஸைது பின் தாபித்(றழி) எழுந்து நபி தூதர் (ஸல்) அவர்கள் ஒரு முஹாஜிர். எமது தலைவர் ஒரு முஹாஜிராகவே இருக்க வேண்டும்.நாங்கள் நபி (ஸல்) அவர்களுக்கு அன்ஸாரிகளாக இருந்தது போல் தொடர்ந்தும் அன்ஸாரிகளாக இருப்போம் என்றார்.

பின்னர் அபூபக்ர் (றழி) எழுந்து எல்லோருக்கும் நன்றி கூறிவிட்டு உமரைப் பார்த்து உங்கள் கையை விரியுங்கள் நாங்கள் 'பைஅத்' செய்யப்போகிறோம் என்றார். அப்போது உமர் (றழி) நீங்கள் என்னை விட மேன்மையானவர் எனக்கூற அபூபக்ர் (றழி) நீங்கள் என்னை விட பலமானவர் என்றார். அப்போது உமரும், அபூ உபைதாவும் சேர்ந்து அபூபக்ர் அவர்களே நபி தூதர் (றழி) அவர்கட்குப்பிறகு உங்களைவிட யாரும் உங்களுக்கு மேலாக இருக்க முடியாது. நீங்கள் அவரோடு குகையில் ஒன்றாக இருந்தீர்கள், அவர்கள் நோயுற்ற போது உங்களை தொழுகை நடத்த நியமித்தார்கள் என்றார்.

உடனே எழுந்து உமர் (றழி) அபூபக்கர்(றழி) அவர்களின் கையைப்பிடித்து பைஅத் செய்யமுற்படுகையில் அன்ஸாரிகளான உஸைத் பின் ஹுளைர், பஷீர் பின் ஸஃது பாய்ந்து சென்று 'பைஅத்' செய்வதில் முந்திக் கொண்டார்கள். சகீபாவில் கூடியிருந்த அனைத்து அன்ஸாரிகளும் பைஅத் செய்தனர். நோயுற்றிருந்த ஸஃது பின் உபாதா மட்டும் பைஅத் செய்யவில்லை.

ஸகீபது பனீ ஸாயிதாவில் பதவிப்போராட்டம் நடைபெற்றது போல் சில வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகின்ற போதும் இங்கு எந்த முரண்பாடோ, போராட்டமோ நடைபெற வில்லை என்பதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். மதீனாவாசிகள் நிறைந்திருந்த ஒருகூட்டத்தில் மூன்று முஹாஜிர்கள் மட்டும் சென்று நிலைமையைத் தெளிவுபடுத்தியதும் மதீனாவாசிகள் ஏற்றுக்கொண்டார்கள் என்றால்அவர்கள் பதவிப்போராட்டம் நடத்தவில்லை என்பது தெளிவாகின்றதல்லவா! உண்மையில் அன்ஸாரிகள் கருத்துக்கள் தெரிவித்தனரே தவிர கலகம் விளைவிக்கவில்லை. இல்லையென்றால் மூவரின் கருத்துக்களைப்புறந்தள்ளிவிட்டு பெரும்பான்மையான அவர்கள் தமக்குள் ஒரு கலீபாவை தேர்ந்திருக்கலாம் அல்லவா? உண்மையில் அங்கு ஏற்பட்டது முரண்பாடல்ல; அவசரமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MARUTHAMUNAI
PUBLIC LIBRARY

## பதவியேற்பும் பிரசங்கமும்

நபி(ஸல்) அவர்கள் வபாத்தான ஹிஜ்ரி 11 றபீஉல் அவ்வல் பிறை 12 அன்று மாலை சகீபது பனீ ஸாயிதாவில் நடந்த கூட்டத்தில் அபூபக்ர்(றழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டபோதும் மறுநாள் தொழுகையின் பின் மக்கள் பெரும் கூட்டமாக வந்து அவருக்கு 'பைஅத்' செய்தார்கள். அதன் பின் அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் சரித்திரப்புகழ்பெற்ற பேருரையை நிகழ்த்தினார்கள்.

'பொதுமக்களே! நான் உங்களில் மிகச் சிறந்தவனாக இல்லாத போதிலும் உங்களின் பொறுப்புதாரியாக நியமிக்கப்பட்டுள்ளேன். நான் சீரிய வழியில் சென்றால் எனக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். நான் தவறு செய்தால் என்னைத் திருத்துங்கள்.

உண்மை கூறுவது 'அமானத்' ஆகும். பொய் கூறுவது மோசடியாகும். உங்களில் பலவீனமானவன் அவனுக்குக் கிடைக்க வேண்டியதை நான் கொடுக்கும் வரை என்னிடம் பலம் வாய்ந்தவன். உங்களில் பலமானவன் அவனிடமிருந்து நான்பெற வேண்டியதை பெற்றுக்கொள்ளும்வரை என்னிடம் அவன் பலவீனமானவன். எந்த சமூகம் இறை பாதையில் ஜிஹாது புரிவதை விட்டுவிடுகின்றனரோ அச் சமூகத்திற்கு அல்லாஹ் இழிவை ஏற்படுத்துவான். எந்த சமூகத்திலே கெட்டவை அதிகரிக்கின்றதோ அவர்கட்கு அவன் பல்வேறு சோதனைகளையும் துன்பங்களையும் ஏற்படுத்துவான். நான் அல்லாஹ்வுக்கும் அவனது றஸூலுக்கும் வழிப்பட்டு நடக்கும் வரை என்னைப் பின்பற்றுங்கள். நான் மாறுசெய்தால் என்னைப் பின்பற்றாதீர்கள்"

நபி (ஸல்) அவர்களின் அடக்க வேலையில் ஈடுபட்டிருந்தோர் தவிர்ந்த அனைவரும் புதிய கலீபாவுக்கு 'பைஅத்' உறுதிப்பிரமாணம் செய்தார்கள். அடக்கி முடிந்ததும் அவர்களும் பைஅத் செய்தார்கள். கஸ்ரஜித் தலைவர் ஸஃது பின் உபாதா (றழி) அப்போது பைஅத் செய்யாவிடினும் பின்னர் அவர் 'பைஅத்' செய்ததுடன் சிரியாவில் நடந்த யுத்தத்திலும் கலந்து கொண்டு அங்கு 'ஷஹீத்'ஆனார்.

அலி(ரழி) அவர்கள் தனது மனைவி பாத்திமா (றழி) வபாத்தாகும்வரை கலீபாவுக்கு 'பைஅத்' செய்யவில்லை என்ற சிலரின் கூற்று தவறானது. முஸ்லிம் 'உம்மா' வைப்பிரிந்து ஆறு மாத ங்கள் அவர் வாழ்ந்தார் என்பது நினைத்துப்பார்க்க முடியாத கற்பனைக் கதையாகும். அவர் 'பைஅத்' செய்தது மாத்திரமன்றி ஐங்காலத்தொழுகையில் அபூபக்ர் (றழி) அவர்களின் பின்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுது வந்ததுடன் மஷுராவிலும் கலந்து கொண்டார். ,குழப்பவாதிகளுக்கெதிராக 'துல்கிஸ்ஸ' வில் நடைபெற்ற சண்டையிலும் அபூபக்ர்(றழி) அவர்களுடன் சேர்ந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

நபி(ஸல்)அவர்களின் மகளார் பாத்திமா(றழி) அவர்கள் தமது தந்தைக்கு கைபர் சண்டையில் கிடைத்த நிலத்தில் தனக்கும் பங்குதர வேண்டுமென்ற கோரிக்கையை அபூ பக்ர் (றழி) நபி (ஸல்) அவர்களின் ஹதீஸை ஆதாரமாகக் காட்டி நிராகரித்தார். இதனால் பாத்திமா கலீபாவோடு கோபப்பட்டார். பின்னர் ஹதீஸை ஆராய்ந்து பார்த்த பின் தனது நிலைப்பாட்டை பாத்திமா (றழி) தளர்த்தி விட்டார். அதன் பின் அவர் சுகவீனமுற்றபோது அபூபக்ர் (றழி) அவரது வீடு சென்று நோய் விசாரித்ததும் குறிப்பிடத்தக்கது. எனவே கலீபாவுக்கும் இக்குடும்பத்துக்குமிடையே 'கிலாபத்' பிரச்சினை ஏற்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

## தகைமைகள்

அபூபக்ர் (றழி) அவர்கள் கலீபாப் பதவிக்கு நியமிக்கப்பட்டதும் அவரது தகுதி பற்றி எவரும் கேள்விக்குட்படுத்தவில்லை.தாங்கள் உயிரோடு இருக்கும் போது வேறு ஒருவர் அப்பதவியை எவ்வாறு வகிப்பது என உமர் (றழி)அவர்கள் குறிப்பிட்டமை அவருக்குள்ள தகுதியை பளிச்சிட வைக்கிறது.

பின்வரும் விடயங்கள் அபூபக்ர் (றழி) அவர்களை மற்றெல்லா முஹாஜிர்களை விடவும் முதன்மைப்படுத்துவதை நாம் அவதானிக்கலாம்.

01. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முதல் ஆண் இவர்.

02. நபி(ஸல்) அவர்களோடு ஹிஜ்ரத் சென்று தௌர் குகையில் அந்தச் சோதனையான கட்டத்தில் உடனிருந்தவர்.குறைஷிகள் நபியவர்களைச் கொல்வதென முடிவெடுத்த போது அல்லாஹ்வின் உத்தரவின் பேரில் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்வதற்காக முதலில் 'தவ்ர்' குகையை நோக்கி பயணம் ஆரம்பமான போது எதிரிகளின் தாக்குதலை எதிர் நோக்கிய அவ்வேளையில் நபி(ஸல்) அவர்களுக்கு முன்னாலும் பின்னாலும் வலமாகவும் இடமாகவும் பாதுகாப்புக்குச் சென்றார்கள்.குகையடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற அவர்கள் உள்ளே சென்று பார்த்து நிலத்தைச் சமப்படுத்தி அங்கிருந்த பொந்துகளை தமது ஆடைகளைக் கிழித்து அடைத்து எஞ்சிய இரு பொந்துகளை தமது கால்களினால் அடைத்துக் கொண்டே உள்ளே தமது தோழரை அழைத்தார்கள். தமது மடியில் தூங்குமாறு வேண்டினார்கள்.மேலே நடமாடிய எதிரிகளைப் பார்த்து அல்லாஹ்வின் தூதரே! அவர்கள் தங்கள் பாதங்களைக் குனிந்து பாரத்தாலே எம்மைக் கண்டு கொள்வரே எனக் கூறிய போது 'கவலைப் படாதீர்கள்' அல்லாஹ் எம்முடன் இருக்கிறான்.'' என்றார்கள் இதனையே அல்குர்ஆன் அபூபக்ரை 'இருவரில் ஒருவர்' எனக் குறிப்பிடுகின்றது. 'நிராகரிப்போர் அவரை வெளியேற்றிய சமயத்தில் அல்லாஹ் அவருக்கு உதவி செய்தே இருக்கிறான். குகையில் இருந்த இருவரில் ஒருவராக அவர் இருந்த சமயத்தில் தன்னுடன் இருந்த தோழரை நோக்கி 'நீர் கவலைப்படாதீர் நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கிறான் என்று கூறிய போதும் அல்லாஹ் அவருக்கு தனது சாந்தியை அளித்தான்...(தவ்பா 40ம் வசனம்)

03. தனது செல்வங்களை இஸ்லாமிய பிரச்சாரத்துக்காக அள்ளி அள்ளி வழங்கினார்.இஸ்லாத்தை ஏற்ற அன்று அவரிடம் நாற்பதினாயிரம் தீனார்கள்(தங்க நாணயங்கள்) இருந்தன.ஆனால் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் சென்ற அன்று அவரிடம் ஐயாயிரம் 'தீனார்'களே எஞ்சி இருந்தன.

04 .இஸ்லாத்தை ஏற்றதற்காக கொடுமைப்படுத்தப்பட்ட அடிமைகளை அவர்களின் எஜமானர்களிடமிருந்து விலைக்கு வாங்கி விடுதலை செய்தார்.துபைல் பின் அப்துல்லாஹ்வின் அடிமையாக விருந்த ஆமிர் பின் புஹைரா அவர்களையும் உமையா பின் கலபின் அடிமையாக விருந்த பிலால் அவர்களையும் உமர் பின் கத்தாப் அவர்களின் அடிமைப் பெண்ணாக விருந்த ஸின்னீராவையும் 'பனூஅதீ' கிளையில் அடிமையாக விருந்த மற்றொரு பெண்ணையும் அப்துஸ்ஸம்ஸ் கிளையைச் சேர்ந்த உம்மு உபைய் என்ற அடிமைப் பெண்ணையும் வாங்கி விடுதலை செய்தார்கள்.

05. உதுமான் பின் அப்பான்(றழி), சுபைர் பின் அவாம்(றழி),அப்துர் ரஹ்மான் பின் அவ்பு(றழி) , அபூஉபைதா பின் ஜர்ராஹ்(றழி), ஸ.்.து பின் அபீவக்காஸ் (றழி),தல்ஹா (றழி) உதுமான் பின் மழ்ஊன் (றழி) ,அர்கம் பின் அபில்அர்கம் (றழி) போன்ற புகழ் பூத்த பெருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூபக்ர்(றழி) அவர்களின் கரத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

06.தனது வீட்டு முற்றத்தில் மஸ்ஜிதை நிறுவினார்.இங்கே வந்து மக்கள் ஒன்று சேரவும்,குர்ஆனை ஓதுதல், தொழுதல் போன்ற வணக்கங்களில் ஈடுபடவும் வசதியானது. பலர் இஸ்லாத்தை ஏற்கவும் இந்த இடம் காரணமானது.

07. கொடை கொடுப்பதில் இவரை யாரும் வெல்ல முடியாது.உமர்(ரழி) கூறுகின்றார்கள் 'நபி(ஸல்)அவர்கள் எம்மிடம் நிதி வசூல் செய்தார்கள். இம்முறை அபூபக்ர்(றழி) கொடுப்பதை விட நான் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென நினைத்து என்னிடமிருந்த சொத்தில் சரியாக அரைவாசியைக் கொண்டு கொடுத்தேன்.அப்போது நபி(ஸல்)அவர்கள் உனது குடும்பத்துக்கு என்ன வைத்துவிட்டு வந்துள்ளாய் எனக் கேட்க சரி அரைவாசி என்றேன்.பின்னர் அபூபக்ர் கொண்டு வந்து கொடுத்தார்.' உனது குடும்பத்துக்கு என்ன வைத்துவிட்டு வந்துள்ளாய் எனக் கேட்க அல்லாஹ்வையும் றசூலையும் வைத்து விட்டு எனது அனைத்துப் பொருட்களையும் இங்கு கொண்டு வந்துள்ளேன் என்றார்கள் (அபூதாவூத், திர்மிதி)

08. எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து நபி(ஸல்) அவர்களைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தியவர் இவர்.அலி (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் 'எனது தந்தை அபூதாலிப் காலமாகி மூன்றாம் நாள் குறைஷிகள் ஒன்று சேர்ந்து நபி(ஸல்)அவர்களைக் கொல்ல முயன்றனர்.அப்போது யாரும் உதவ முன் வரவில்லை, அபூபக்ர் (றழி) அவர்களே முன் வந்து தடுத்து நிறுத்தினார்கள்.

09. பத்று யுத்தக் கைதிகளைக் கையாளும் விடயத்தில் இவரது ஆலோசனைப் படியே நபி(ஸல்) அவர்கள் செயற்பட்டார்கள். ஹிஜ்ரி 2ல் நடைபெற்ற பத்றுப் போரில் குறைஷிகள் பாரிய தோல்வியைத் தழுவினர். பலர் உயிரிழந்ததுடன் பலர் கைதியாக்கப்பட்டனர். கைதிகளை என்ன செய்வது என நபித்தூதர்(ஸல்) அவர்கள் ஆலோசனை கேட்டபோது உமர்(றழி),அலி(றழி) ,இப்னு றவாஹா(றழி) போன்றோர் அவர்களைக் கொன்று விட வேண்டுமென ஆலோசனை கூறினர். ஆனால் அபூபக்ரோ யா ரஸுலுல்லாஹ்,அவர்கள் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்கள், சகோதரர்கள் அவர்களிடமிருந்து இழப்பீடு எடுத்து விட்டு விடுதலை செய்வோம் என்றார்கள்.இந்த ஆலோசனையை நபி(ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

10. ஹுதைபிய்யா உடன்படிக்கை குறைஷிகளுக்கும் நபியவர்களுக்குமிடையில் கைச்சாத்தாகிய போது முஸ்லிம்கள் மத்தியில் பாரிய அதிருப்தி ஏற்பட்டது.உம்றாவுக்கு இஹ்ராம் கட்டி வந்தவர்கள் மக்கா செல்லாமல் இஹ்றாமைக் களைந்து மதீனா திரும்ப வேண்டிய நிலை! முஸ்லிம்கள் கொதிப்புக்குள்ளானார்கள். உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் நபி(ஸல்) அவர்களிடம் வந்து நீங்கள் உண்மையான நபி இல்லையா! நாங்கள் உண்மையிலும் அவர்கள் பொய்யிலும் இல்லையா! ஏன் நாம் பணிந்து, தாழ்ந்து செல்ல வேண்டும்? என்று சற்றுக்கோபமாகக்கேட்டேன். அப்போது நபித் தூதர் (ஸல்) அவர்கள் நான் உண்மையான நபியே ! நான் அவனுக்கு மாறுசெய்பவனல்ல , அவன் எனக்கு உதவுவான். என்றதும் நாங்கள் புனித க.்பா சென்று தவாப் செய்வோம் என்று நீங்கள் கூறினீர்களல்லவா என நான் கூறியதும் இவ்வருடம் அவ்வாறு செய்வோம் என்று நான் கூறினேனா என நபி(ஸல்) அவர்கள் கேட்க இல்லை என்றேன். அப்போது நபி(ஸல்) அவர்கள் நிச்சயமாக நாம் அங்கு செல்வோம், தவாப் செய்வோம்' என்றார்கள். பின்னர் அபூபக்ரிடம் வந்து நபியவர்களிடம் கேட்டதுபோல் அதே கேள்விகளை அடுக்கினேன். எனது ஒவ்வொரு வினாவுக்கும் எவ்வாறான பதிலை நபியவர்கள் தந்தார்களோ அதே பதிலையே எவ்வித மாற்றமுமில்லாமல் அபூபக்கரும் தந்தார்.

11 .ஹிஜ்ரி 7ம் ஆண்டு பனூ பஸாராக்கிளையாருக்கெதிரான யுத்தத்திற்கு நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர் சித்தீக் (றழி) அவர்களையே தளபதியாக அனுப்பினார்கள்.

12. தபூக் யுத்தத்தின் போது முஸ்லிம்களின் கொடி அபூபக்ர்(றழி) கரங்களிலேயே ஒப்படைக்கப்பட்டது.

13. ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு ஹஜ்ஜுக்கு அமீராக அபூபக்ர் (றழி) அவர்களை நியமித்து நபி (ஸல்) அவர்கள் அனுப்பிவைத்தார்கள். அவர்களோடு சுமார் 300 சஹாபாக்கள் மதீனாவிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஜ்ஜுக்குச்சென்றார்கள்.

14. மதீனாவின் குபாவிலிருந்த அவ்சுக்கோத்திர அம்று பின் அவ்ப் கிளையார்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சினை ஒன்றைத்தீர்க்க நபி (ஸல்) அவர்கள் குபா சென்ற போது பிலால் (றழி) இடத்திலே தான் உரிய நேரத்துக்கு வரவில்லை என்றிருந்தால் அபூபக்ரைத் தொழுவிக்குமாறு கூறுமாறு ஏவிவிட்டுச் சென்றார்கள். நேரம் வந்ததும் நபி(ஸல்) அவர்கள் வந்திராததால் அபூபக்ர்(ரழி) தொழுவிக்கச் சென்றார்கள். அவர் தக்பீர் கட்ட நபி(ஸல்) அவர்களும் வந்து விட்டார்கள். நபி(ஸல்)அவர்கள் வந்து விட்ட செய்தியை சஹபாக்கள் கைதட்டல் மூலம் தெரிவித்ததும் அபூபக்ர் பின்வாங்க தொழுகையைத் தொடருமாறு நபி(ஸல்) அவர்கள் சமிக்கை செய்தார்கள். எனினும் அபூபக்ர் பின்னானார். நபி(ஸல்) அவர்கள் தொழுவித்து முடிந்ததும் தொழுகையைத் தொடர்ந்திருக்கலாமே என அபூபக்ர் அவர்களிடம் கூற அபூகுஹாபாவின் மகன் நபி(ஸல்) அவர்களுக்கு இமாமாக நிற்க விரும்பவில்லை என்றார்.

15. ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.
"நபி(ஸல்)அவர்கள் நோய்வாய்ப்பட்ட போது பிலால் அவர்கள் அதான் கூற அபூபக்ரைத் தொழுவிக்கச் சொல்லுமாறு நபி(ஸல்) அவர்கள் ஏவினார்கள். அப்போது நான் நபிதூதரே அவர் விரைவாகத்துக்கப்படுபவர். சலித்து அழுபவர்.இதனால் உங்கள் இடத்தில் நின்று தொழுவித்தால் மக்களுக்கு அவரது குரல் கேட்காது. உமரை ஏவினால் நன்றாக இருக்குமே என்றேன்.அப்போது அபூபக்ரைத்தான் ஏவுங்கள் எனக் கூறினார்கள். பின்னர் நான் ஹப்ஸாவிடம் நான் முன்பு கூறியது போல் கூறுமாறு கேட்டேன்.அவர் கூறிய போது நபி(ஸல்) அவர்கள் நீங்கள் யூசுபைக் கெடுக்கமுயன்ற பெண்கள் போல் உள்ளீர்கள். அபூபக்ரையே இமாமாக நிற்கச் சொல்லுங்கள்: என்றார்கள்.

16. மி்.றாஜ் சம்பவம் நடைபெற்று அதனை நபியவர்கள் கூற மற்றவர்கள் ஏற்கத்தயங்கியவேளை உடனே அதை உண்மைப் படுத்தி சித்தீக் என்ற நாமத்தைத்தனதாக்கிக் கொண்டவர் சகல சோதனை வேளைகளிலும் உடனிருந்து உண்மைப்படுத்திய உத்தமர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. முஹம்மத் பின் ஸுபைர் தன்தந்தை கூறியதாகக் கூறுகிறார் "ஒருபெண் நபியவர்களிடம் வந்தார். அவரை பின்னொரு நாளில் வருமாறு நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அப்பெண் நான் வரும் போது உங்களை காணா விட்டால் என்ன செய்வது? என வினவ நான் இல்லாவிட்டால் அபூபக்ரிடம் நீ செல் என்று அப்பெண்ணிடம் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்(புஹாரி).

18. நபி (ஸல்)அவர்கள் வபாத்தான நேரம். எவர் நபி வபாத்தானார் எனக் கூறுகின்றாரோ அவரை வெட்டி வீழ்த்துவேன் எனக் கர்ச்சித்தார் உமர்(றழி). மக்கள் திணறிக்கொண்டிருந்தனர். அவ்வேளை அபூபக்ர் (றழி) வந்து சேர்ந்தார். நபி(ஸல்) அவர்களைப்பார்த்து உங்கள் மீது விதியான மரணத்தை அனுபவித்துவிட்டீர்கள் என்றுகூறி முத்தமிட்டார்.பின்னர் மஸ்ஜிதுக்கு வந்து மனிதர்களே! முஹம்மதை யாரும் வணங்குவதாக இருந்தால் அவர் மரணித்து விட்டார். அல்லாஹ்வை வணங்குவதாக இருப்பின் அவன் உயிரோடு உள்ளான் என்று கூறி குழம்பிப்போயிருந்த மக்களுக்கு உண்மைநிலையைத் தெளிவு படுத்தினார்கள். இவ்வாறு எந்தப்பதட்ட நிலையிலும் நிதானம் இழக்காமல் எவருக்கும் பயப்படாமல் செயற்பட்டவர் அவர்.

19. இப்னு உமர்(ரழி) கூறியதாவது.

நாங்கள் நபி(ஸல்) அவர்களுடைய காலத்தில் மக்களிடையே சிறந்தவர்கள் இன்னார் இன்னார் என்று மதிப்பிட்டுவந்தோம். முதலில் அபு பக்கர் அவர்களையும் பின்னர் உமர் பின்னர் உஸ்மான் அவர்களையும் சிறந்தவர்களாக மதிப்பிட்டு வந்தோம். (புஹாரி).

20. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "இறைவனைத்தவிர வேறு ஒருவரை நான் உற்ற நண்பனாக ஆக்கிக்கொள்ள விரும்பியிருந்தால் அபூபக்ர் அவர்களை ஆக்கிக் கொண்டிருப்பேன். ஆயினும் அவர் என் சகோதரரும் நண்பரும் ஆவார்". (புஹாரி)

மேற்கூறிய அனைத்து விடயங்களும் நபி(ஸல்) அவர்கட்குப்பின் கிலாபத்துக்குத் தகுதியானவர் அபூபக்ர்(றழி)அவர்கள் தான் என்பதை நிரூபித்து நிற்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவால்கள்

கலீபாப்பதவியை ஏற்ற அபூபக்ர்(ரழி) அவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக் குள்ளானார்கள். இஸ்லாத்தின் பலம் கண்டு அதில் இணைந்திருந்த நாட்டுப்புற அறபிகள் நபி (ஸல்)அவர்களின் மரணத்திற்குப்பின் இஸ்லாத்தின் பலம் குன்றியதாக எண்ணினர். இனியும் இஸ்லாத்தில் தொடர்வது தேவையில்லை என நினைத்தனர். இஸ்லாமிய அரசுக்கு செலுத்திவந்த ஸகாத் வரியை கொடுக்கமுடியாது என இன்னும் சில கோத்திரத்தினர் முடிவெடுத்தனர். தங்களையும் நபிகளாகப் பிரகடனப் படுத்தினர் இன்னும்சில தலைவர்கள். மக்கா,மதீனா,தாயிப் போன்ற பிரதேசங்கள் தவிர்ந்த அரபு உலகின் அனைத்துப்பிரதேசங்களும் இஸ்லாமிய அரசுக்கு பல்வேறு பிரச்சினைகள் கொடுக்க முன்வந்தன.

எதிலும் தளராத மனவுறுதி கொண்ட அபூபக்ர்(றழி) அவர்கள் அனைத்துப்பிரச்சினைகளையும் முடிவுக்குக்கொண்டுவர முன்வந்தார். அடக்கியே தீர்வதென சபதம் பூண்டார்.

## 01 உஸாமாவின் சேனை

இவ்வேளை நபி(ஸல்) அவர்கள் காலமாவதற்கு முன் ரோமரை எதிர்த்துப் போராட ஒரு படையை அனுப்பிவைக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். 'மு.'.தா' போரில் ரோமர்களை எதிர்த்துப் போரிட்டு வீரமரணமடைந்த தளபதி ஸைத் பின் ஹாரிதாவின் மகன் உஸாமாவின் வயது 18 ஆக இருந்தபோதும் அவரை தளபதியாக நியமித்திருந்தார்கள். நபி (ஸல்) அவர்களின் மரணம் இப்படையெடுப்பைத் தாமதப் படுத்தியது. அபூபக்ர்(றழி) பதவியேற்றதும் உள்நாட்டுப் பிரச்சினைகள் தலை தூக்க ஆரம்பித்தன. உள்நாட்டுப் பிரச்சினைகளை படைப்பலம் கொண்டு அடக்குவதா? அல்லது உள்நாட்டில் பிரச்சினை தலைதூக்கி இருக்கும் போது வெளிநாட்டுக்குப் படைகளை அனுப்புவதா? இந் நெருக்கடிநிலையில் வெளிநாட்டுப்படையெடுப்பு பொருத்தமற்றதென்றும் அதுவும் வயது குறைந்த இளைஞர் தலைமையில்செல்வது ஆபத்தானது என்றும் ஆலோசனை கூறினர் பலர். அவர்களில் உமர் (ரழி) அவர்களும் அடக்கம். எனினும் மலைபோன்ற மன உறுதி கொண்ட கலீபா உள்நாட்டில் எவ்வாறான பிரச்சினை இருந்த போதும் நபி(ஸல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஏற்பாடு செய்த அப்படை எடுப்பை தொடரச்செய்வதென முடிவெடுத்தார். படையைத்தாமதப் படுத்தும் சகல யோசனைகளையும் நிராகரித்தார்.

MARUTHAMUNAI PUBLIC LIBRARY

## படையை அனுப்புதல்

மதீனாவின் ஒதுக்குப்புற பகுதியான 'ஜுறுப்'எனும் இடத்தில் முகாமிட்டிருந்த உஸாமா தலைமையிலான படையினரிடம் சென்று அவர்களை வழியனுப்பி வைத்தார்.அப்படையில் ஓர் அங்கத்தவரான உமர் இப்னு கத்தாப்(றழி) அவர்களை தளபதியின் அனுமதி பெற்று தம்மோடு மதீனாவில் தங்க வைத்தார் கலீபா அவர்கள்.

அப்படையினரை விளித்து பின்வருமாறு போதனை செய்தார் கலீபா.

மனிதர்களே!

- நீங்கள் சதி,மோசடிகளில் ஈடுபடாதீர்கள்.
- நேர்வழியிலிருந்து தவறாதீர்கள்.
- பிறரை ஏமாற்றாதீர்கள்.
- சிறுபிள்ளைகளையோ வயது முதிர்ந்தவர்களையோ பெண்களையோ கொல்லாதீர்கள்.
- பேரீத்தமரங்களை காயப்படுத்தவோ அதனை எரிக்கவோ வேண்டாம்.
- மரங்களை வெட்டாதீர்கள், மாடு, ஆடு,ஒட்டகங்களை உணவுக்காக அன்றி அறுக்காதீர்கள்.
- நீங்கள் போகும் பாதையில் சில மக்கள் தங்களது வணக்கஸ்தலங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பர்; அவர்களுக்குஒன்றும் செய்யாதீர்கள்.
- உங்கள் வழியில்சில மக்கள் உங்களுக்கு உணவு வகைகளை அளிப்பார்கள் அல்லாஹ்வின் நாமம் கூறி அதனை உண்ணுங்கள்.
- தங்கள் தலைகளைத் தாழ்த்தியவர்களாக சில மக்களைக் காண்பீர்கள் அவர்களை வெட்டுங்கள்.
- அல்லாஹ்வின் பெயரால் செல்லுங்கள். அல்லாஹ் உங்களை நோய்களை விட்டும் ஆபத்திலிருந்தும் பாதுகாப்பானாக!

இவ்வாறு உபதேசித்த அபூபக்ர்(ரலி) அவர்கள் உசாமாவை நோக்கி நபி(ஸல்) அவர்கள் ஏவியது போல் நடந்து கொள்ளுங்கள். அதில் எவ்வித குறையும் செய்து விடாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழாஆக்கோத்திரத்தில் இருந்து யுத்தத்தை ஆரம்பியுங்கள்.பின்னர் (ஜோர்தானின் தெற்கேயுள்ள)ஆபல் ஐ நோக்கி வாருங்கள் என உபதேசித்தார்.

சுமார் நாற்பது நாட்கள் கொண்ட இப்படையெடுப்பு முஸ்லிம் சேனைக்குப்பெரும் வெற்றியையும்நிறைந்த 'கனீமத் பொருட்களையும் வழங்கியது.

சோதனை மிகுந்த ஒருநேரத்தில் இவ்வாறான ஒரு படைஎடுப்பை மேற்கொண்டது அபூபக்ரின் தளராத மனஉறுதிக்கு பெரும் சான்றாக அமைந்தது. நபி(ஸல்) அவர்கள் ஏவினால் எதற்கும் மாற்றம் செய்யக் கூடாது என்ற அவரது மனநிலையைத் தெளிவுபடுத்தியது

நபி(ஸல்) அவர்களின், ஏவல்கள் அனைத்தும் நன்மைதான் என்ற அவரது மனஉறுதியை பளிச்சிட வைத்தது.

நாட்டறபிகள்,சிறுகுழுக்கள் இஸ்லாம் பலவீனமடைந்து விட்டது என எண்ணிய ஒருகாலகட்டத்தில் இப்படை எடுப்பு மேற்கொள்ளப்பட்டமை மதீனா பலமான நிலையில்தான் உள்ளது என்பதை மற்றவர்கள் நம்ப வழி வகுத்தது. மதீனாவுக்கு எதிராக அவர்களால் செயற்படமுடியாது என்ற செய்தியை அது கொடுத்தது.

## சவால்-2

## ஸகாத் மறுப்பாளர்கள்

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் இஸ்லாத்தை ஏற்று ஸகாத் வரி செலுத்தி வந்த பல கோத்திரங்கள் அதனை வழங்க மறுத்த விடயம் அபூபக்கர் (ரழி) அவர்கள் எதிர் நோக்கிய மற்றொரு சவாலாகும்.
அப்சுதுப்யான்,அத்பான்,அஸத்,தை போன்றபல்வேறு 'கபீலாக்கள்' நபியவர்கள் மரணமடைந்ததுடன் இஸ்லாத்தின் பால் தாங்கள் வைத்திருந்த தொடர்பை கேள்விக்குள்ளாக்க முயன்றனர், உஸாமாவின் தலைமையில் படை ரோம் தேசம் சென்றுள்ள சந்தர்ப்பத்தைப்பயன் படுத்தி இஸ்லாத்தை பலவீனப்படுத்தும் வகையில் ஸகாத் வரியை அரசுக்கு வழங்குவதில்லைஎன்ற முடிவுக்குவந்தனர். இதனைத் தெரியப்படுத்தும் முகமாக அவர்களின் தூதுகோஷ்டியொன்று மதீனா வந்தது. உமர்(ரழி),அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரழி) போன்ற பிரமுகர்களைச் சந்தித்து தமது முடிவுகளை அறிவித்தனர். உமர் (ரழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்கள் தற்போதைய நிலையில் இவ்வாறானவர்களுடன் மெதுமையாக நடந்துகொள்ள வேண்டுமென விரும்பிய போதும்கலீபா அபூபக்ர் அவர்களிடம் விடயம் கூறப்பட்ட போது அவர் இஸ்லாத்தைப் பலவீனப்படுத்தும் இதுபோன்ற கோரிக்கைகளை ஆதரிக்க முடியாது. அல்லாஹ் தஆலாவினால் கடமையாக்கப்பட்டதை கலீபா ஒருவரால் நீக்கமுடியாது என்றநிலைப்பாட்டில் உறுதியாக விருந்தார். 'நபி(ஸல்) காலத்தில் வழங்கிய ஒரு சிறு ஆட்டுக்குட்டியைத் தர மறுத்தாலும் நான் போரிடுவேன்' எனத்தம்மை வந்து சந்தித்த அப்பிரமுகர்களிடம் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தார். தமது முயற்சி தோல்வியில் முடிந்ததையிட்டு விசனமடைந்த அக்கோத்திரத்தலைவர்கள் தத்தம் சமூகத்திடம் சென்று மதீனா மிகவும் பலவீன நிலையில் உள்ளது. உஸாமாவின் தலைமையில் படையினர் சென்றுவிட்டனர். நாம் அவர்களுக்கு வரிகொடுக்கத்தேவையில்லை அதனைத் தாக்கி நாம் அடிமைப் படுத்துவோம் என அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

அதிருப்தியாக வெளியேறிய அந்தத்தலைவர்கள் மதீனாவைத் தாக்க வருவார்கள் என்பதை அஞ்சிய கலீபா அவர்கள் உஸாமாவின் படையில் இடம் பெறாமல் மதீனாவில் இருந்த அலீ தல்ஹா, ஸுபைர்,இப்னு மஸ்ஊத், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப், ஸ..து பின் அபீவக்காஸ் (றழி) போன்றோர் தலைமையில் விழிப்புக்குழுக்களை ஏற்படுத்தி மதீனாவின் ஒவ்வொரு முக்கிய பகுதிகளையும் பாதுகாக்குமாறு வேண்டினார்கள். மக்கள் அனைவரையும் மஸ்ஜிதில் தங்குமாறு கேட்டார்கள்.

உஸாமாவின்படை நாடுதிரும்புவதற்குள் தமது நோக்கத்தை நிறைவேற்ற முயன்றனர் அந்த அரபுக்கோத்திரங்கள். கலீபாவிடமிருந்து ஏமாற்றத்துடன் சென்று மூன்றாம் நாளில் இரவு வேளையில் மதீனாவைத்தாக்கத் திட்டமிட்டனர். 'தூஹிஸா' என்ற இடத்தில் ஒரு பகுதிதாக்குதல் பிரிவை நிறுத்தி விட்டு மற்றொரு பகுதியினர் மதீனாவை நோக்கி தாக்குதல்நடத்த வந்தனர்.

மதீனாவின் ஒவ்வொரு கேந்திர நிலையங்களிலும் நிறுத்தப்பட்டிருந்த வீரர்கள் அவர்களுக்குத்தூரமாக நடமாட்டங்களை அவதானிப்போரை நிறுத்தி இருந்தனர். எதிரிகள் வருவதை அவதானித்த அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் கலீபாவின் படை உசார் அடைந்தது.

உடனே கலீபா மஸ்ஜித் சென்று மக்களையும் அழைத்துச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கவே எதிரிப்படை பின்வாங்கியது. பொழுது விடிவதற்கிடையில் எதிரிகளின் மறுபிரிவு நிறுத்தப்பட்டிருந்த இடத்தைச் சென்றடைந்த கலீபா அவர்கள் தாக்குதலை நடாத்தி அப்படையையும் முறியடித்து பல ஒட்டகங்களை 'கனீமத்'தாகப்பெற்றார்கள்.

ஸகாத் தர மறுத்தவர்கள் முறியடிக்கப்பட்டு விட்டனர் என்ற செய்தி பரவ ஏனைய கபீலாக்கள் தங்கள் ஸகாத்தை வழங்க கோஷ்டி கோஷ்டியாக வந்தனர்.சப்வான் பின் சப்வான் பனூ அம்றுக்கிளையாரின் ஸகாத்தையும், ஸிப்ரிகான் பின் பத்று பனூ அவ்புக்கிளையாரின் ஸகாத்தையும், அதி பின் ஹாதமுத்தாயி அவரது சமூகத்தின் ஸகாத்தையும் கொண்டு வந்தனர்.

இஸ்லாத்தை அழிக்க முடியாது என்பதில் உறுதியான அவர்கள் ஸகாத்தை கொடுத்து இஸ்லாமிய அரசின் நல்ல பிள்ளைகளாக மாறத்தலைப்பட்டனர்.

## படை திரும்பியது

மதீனாவைத் தாக்கவந்த ஸகாத் மறுப்பாளர்கள் 'தூஹிஸா' என்ற இடத்தில் அபூபக்ர் (றழி) தலைமையில் தோற்கடிக்கப்பட்டு அதன் மூலம் மதில் மேல் பூனையாக இருந்த பல கோத்திரங்கள் ஸகாத்தை வழங்கிக் கொண்டிருந்த வேளை றோம் சென்றிருந்த உஸாமாவின் படை மதீனா திரும்பியது. பெருவெற்றியோடும் வெற்றிப் பொருட்களுடனும். நாடு திரும்பிய படையினரை அவர்கள் வந்த பின் தாக்குதல் ஒன்றைத் தொடுக்க எண்ணியிருந்த கலீபா அவர்கள் வீரர்களை நன்றாக ஓய்வெடுக்குமாறு கூறிவிட்டு எதிரிகளின் முக்கிய தளங்கள் மீது தாக்குதல் தொடுக்க ஆயத்தமானார்கள்.

மதீனாவிலிருந்து 12 மைல்களுக்கு அப்பால் துல்கிஸ்ஸா என்ற இடம் எதிரிகளின் பலமான இடமாக இருந்தது. எனவே அங்கும் றபதா எனும் கிராமம் நோக்கியும் படையை நடத்தத்திட்டமிட்டார்கள். றபதாவில் அப்சு,துப்யான்,கினானா போன்ற கபீலாக்கள் வாழ்ந்தனர்.

இங்கு நடந்த சண்டையில் பாரிய வெற்றியை முஸ்லிம் படை பெற்றதால் இஸ்லாம் அழித்து விட முடியாத சக்தி என்பது நிரூபணமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LENDING SECTION

சவால்-3

## பொய் நபிகள்

நபி ( ஸல் ) அவர்களின் இறுதிக்காலத்திலேயே பொய் நபிவாதம் துளிர்விட்ட போதும் அது பெரிதாகப் பேசப்படும் விடயமாக இருக்கவில்லை. ஆனால் கலீபா அபூபக்கர்(ரழி)அவர்களின் காலத்தில் இவ்விடயம் ஒரு பெரும் சதியாக மாறியது. பொய்யர்களெல்லாம் ஒன்று சேர்ந்து இஸ்லாமிய ஜோதியை ஒழிக்க கங்கணம் கட்டிய வரலாற்றை நாம் அங்கு காணலாம்.

### 1- துலைஹா

அஸத் கிளையைச் சேர்ந்த துலைஹா பின் குவைலித் என்பவர் (பொய்) நபியாகத் தன்னைப் பிரகடனப்படுத்தியவர்களில் ஒருவர். இறுதி ஹஜ்ஜின் பின் நபி (ஸல்)அவர்கள் நோய்வாய்ப்பட்டதை அறிந்த இவர் தானும் நபியானால் தனக்கு ஆட்சி, அதிகாரம் கிடைக்கும் என்ற நப்பாசையுடன் நபித்துவத்தை வாதிட்டார். இவரது கூட்டத்தினரான பனூ அஸத் கிளை இவரை ஆதரித்தது. அப்சு, துப்யான், தை ஐத்பலா போன்ற கிளையினரும் ஆதரித்தனர்.

கலீபா அபூபக்ர்(றழி) அவர்களினால் முர்தத்துகளுக்கு எதிராகப்போராட நியமிக்கப்பட்ட காலித் பின் வலீத்(றழி) தலைமையிலான படையை எதிர்த்துப்போராட முடியாமல் தன் மனைவியையும் அழைத்துக்கொண்டு துலைஹா ஷாம் நோக்கி ஓடினான். அவனைப்பின்பற்றிய பலர் கொல்லப்பட்டனர்.

பின்னர் சில காலங்களின் பின் இஸ்லாத்தில் நுழைந்து கொண்ட துலைஹா காலித் பின் வலீதுடன் இணைந்து எதிரிகட்கெதிராகப் போராடினார். இஸ்லாமிய வெற்றிகள் பலவற்றுக்கு தன்னாலான பங்களிப்பைச் செய்தார்.

### 2 – அல் அஸ்வதுல் அன்ஸி

இவனது சொந்தப் பெயர் அப்ஹலா , தந்தை பெயர் க.்.பு, சொந்த ஊர்; எமன் நாட்டிலுள்ள ஹுப்பான் எனும் கிராமம்.

நபி தூதர் (ஸல்) காலத்திலேயே இவன் தன்னை நபியாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகடனப்படுத்தி எமனின் பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான். இவன் நபி தூதர்(ஸல்) காலத்திலேயே கொல்லப்பட்டான். இவனைச் சார்ந்தோர் பின்னர் அபூபக்ர் (றழி) காலத்தில் கொல்லப்பட்டனர். இஸ்லாமாகவிருந்து முதலாவது மதம் மாறியவன் இவனே! நபி தூதர் (ஸல்) அவர்கள் வபாத்தாக ஒரு மாதத்துக்கு முன் இவன் கொல்லப்பட்டான்.

## 3 – சஜாஹ்

பனூ தமீம் கிளையைச் சேர்ந்த இவள் தந்தை பெயர் ஹாரிஸ். கிறிஸ்தவப் பெண்ணான இவள் ஒரு கவிஞரும் கூட! தன்னை இவள் ஒரு நபியாகப் பிரகடனப்படுத்தினாள்.

## 4- முசைலமா

பனூஹனீபா கிளையைச் சேர்ந்தவன் இவன். நபி(ஸல்) அவர்கள் நோயுற்றுள்ளார்கள் எள்பதைக் கேள்வியுற்ற இவன் யமாமா பிரசேத்தில் நபியென வாதிட ஆரம்பித்தான்.

# *பாதுகாப்பு அரண்*

ஒரு புறம் பொய் நபிகள், மறுபுறம் கலகக்காரர்கள் ஆட்சியை எதிர்ப்போர் , ஸகாத் தர மறுப்போர் , இஸ்லாம் உட்புகாத முஸ்லிம்களாகத் தன்னை காட்டிக்கொண்டோர். இவ்வாறு இஸ்லாமிய உலகம் பல்வேறு நெருக்குதல்களுக்கு உள்ளான போது இஸ்லாமிய அரசையும் நாட்டையும் பாதுகாப்பதற்கு பதினொரு பாதுகாப்புப் பிரிவுகளையும் பதினொரு தளபதிகளையும் நியமித்து ஒவ்வொரு பிரிவும் எதிர்கொள்ள வேண்டிய பகுதிகளையும் பிரித்துக்கொடுத்தார் கலீபா அவர்கள்.

## 1- காலித் பின் வலீத்

இவரது தலைமையில் செல்லும் படையணி முதலாவது பொய் நபியான துலைஹாவை எதிர்த்துப் போராட வேண்டும். அதன்பின் பிதாஹ் பிரதேசத்தில் இஸ்லாமிய ஆட்சிக்கு சவாலாகவுள்ள மாலிக் பின் நுவைறாவை முறியடிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2- இக்ரிமா பின் அபூ ஜஹ்ல்
யமாமாப் பிரதேசத்தில் சவாலாகவுள்ள பொய் நபியான முஸைலமாவுக்கு எதிராகப் போரிடுவது.

3- சுறஹ்பில் பின் ஹஸனா
யமாமாவில் முஸைலமாவுக்கு எதிராக இக்ரிமாவுடன் இணைந்து போராடப் பணிக்கப்பட்டார்.

4- முஹாஜிர் பின் அபீஉமையா
யமனில் பொய் நபியாகவிருந்த அஸ்வதுல் அன்ஸியைப் பின்பற்றுவோருக்கு எதிராகப் போரிடல். அதன் பின் ஹழ்ரமவ்த் பிரதேசத்துக்குச் செல்லல்.

5- அம்றுப்னுல் ஆஸ்
இவரது தலைமையிலான படை வடக்கிலே குளாஆ கோத்திரத்தை எதிர்கொள்ள வேண்டும்.

6- காலித் பின் சயீத் பின் ஆஸ்
ஷாம் பிரதேசத்துக்குப் பொறுப்பு

7- ஹுதைபா பின் மிஹ்ஸன்
இவர் "துபா" பிரதேசத்துக்கு அனுப்பப்பட்டார்.

8- அர்பஜா பின் ஹுர்துமா
மஹ்ரா பிரதேசத்துக்கு நியமிக்கப்பட்ட இவர் அப்பணி முடிந்ததும் ஹுதைபாவுடன் இணைந்து கொள்ளுமாறு பணிக்கப்பட்டார்.

9- தறீபா பின் ஹாஜிஸ்
பனூ சுலைம் கிளையார்களையும் அவர்களுடன் இருந்த ஹவாஸின் கிளையார்களையும் அடக்குவதற்காக நியமிக்கப்பட்டார்.

10- சுவைத் பின் முகர்ரின்
எமனின் திஹாமாவுக்கு நியமனம்.

11- அலா பின் ஹழ்றமி
பஹ்ரைன் பகுதிக்கு நியமிக்கப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளை முள்ளால் எடுக்க வேண்டு மென்பதுபோல் குழப்பவாதிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு தளபதிகளும் தம் பணிகளை ஆரம்பித்தனர். அதற்கு முன் கலீபாவினால் சகல குழப்பவாதிகளுக்கும் ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது. இப்பிரகடனத்தை ஏற்று தவறிலிருந்து நீங்குபவர் மன்னிக்கப்படுவார் என்றும் தவறுபவர் தண்டிக்கப்படுவார் என்றும் அப்பிரகடனம் கூறியது. அப்பிரகடனம் மக்கள் கூடுமிடங்கள், அவர்களின் நிலையங்கள், கழகங்களில் வாசிக்கப்பட்டது.

## அப்பிரகடனத்தின் சுருக்கம் பின்வருமாறு :

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட உங்களில் பலர் அறிவின்மை காரணமாக ஷைத்தானுக்கு வழிப்பட்டு நல்வழியைக் கைவிட்டுள்ளதை அறிகின்றேன். ஷைத்தான் உங்களின் எதிரியாவான். அவனை எதிரியாகவே ஆக்கிக்கொள்ளுங்கள். அவன் தனது கூட்டத்தை நரக வாசிகளாக ஆக்கவே விரும்புகின்றான்.

முஹாஜிர்கள், அன்சாரிகள், தாபியீன்கள் கொண்ட ஒரு படைப்பிரிவை உங்கள் பகுதிகளுக்கு அனுப்பியுள்ளேன். அவர்கள் உங்களை தீனுல் இஸ்லாம் பக்கம் மீண்டும் அழைப்பார்கள். அழைப்புக்கு விடை கொடுத்தால் யாரையும் அவர்கள் கொல்லமாட்டார்கள். எவர் அவ்வழைப்புக்கு மாற்றம் செய்கிறாரோ அவரைக் கொல்லுமாறு ஏவியுள்ளேன். பெண்களையும் பிள்ளைகளையும் கைது செய்யுமாறும் பணித்துள்ளேன். இஸ்லாத்தைத் தவிர வேறு எதனையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். இதனை ஏற்றுக்கொள்வது உங்களுக்கு சிறப்பானது. எனது பிரதி நிதியை இந்நிருபத்தை நீங்கள் கூடுமிடம் ஒவ்வொன்றிலும் வாசிக்குமாறு வேண்டியுள்ளேன். இதனை ஏற்பதாயின் "அதான்" கூறுவதன் மூலம் ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லையெனில் எதிரியாகவே கருதப்படுவீர்கள். இப்பிரகடனம் படைகள் முன் சென்ற தூதுவர்களால் வாசிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளபதிகளுக்கு

மேற்கூறியது போன்ற ஒரு வழிகாட்டலை தளபதிகளுக்கும் எழுதி அனுப்பினார்கள். அதில் இஸ்லாமிய அழைப்பை விடுக்குமாறும் ஏற்பவர்களை விட்டுவிடுமாறும் மறுப்பவர்களோடு மட்டும் போரிடுமாறும் வேண்டினார்கள். வீண் குழப்பங்கள் செய்ய வேண்டாமென்றும் , எதிலும் அவசரப்பட வேண்டாமென்றும் வேண்டினார்கள்.

## துலைஹா தப்பியோட்டம்

தன்னை ஒரு நபியாக வாதிட்டவர்களில் துலைஹாவும் ஒருவன் எனப்படித்துள்ளீர்கள். இவன் அஸத் கிளையைச் சேர்ந்தவன். குவைலித் என்பவரின் மகன். நபி (ஸல்) அவர்கள் இறுதி ஹஜ்ஜின் பின் நோயுற்றிருப்பதைக் கேள்விப்பட்ட இவன் தானும் நபியென பிரகடனப்படுத்தினால் தனக்கும் ஆட்சி, அதிகாரம் கிடைக்கும் என நினைத்தான். தன் கோத்திரத்தவன் எதைக் கூறினாலும் ஏற்கும் மனம் படைத்த அறபிகளில் அவனது பனூ அஸத் கிளையினரும் மேலும் அப்சு, துப்யான், ஜத்பலா, அவ்து, தை போன்ற பனூ அஸத் கிளையினரோடு உறவு பூண்டிருந்த சிலரும் இவனது வாதத்தை ஏற்றுச் செயற்பட்டனர்.

துலைஹாவை முறியடிக்க காலித் பின் வலீத்(றழி) நியமிக்கப்பட்டதனால் தனது மக்கள் அதனால் அழியப்போகின்றார்கள். அவர்களை அழிவிலிருந்து மீட்க வேண்டுமென நினைத்த 'தை' குடும்பத்தைச் சேர்ந்த ஹாதமுத்தாயி உடைய மகன் அதீ அவர்கள் கலீபாவிடம் பேசி தனது மக்களுக்கு மூன்று நாட்கள் அவகாசம் தருமாறும் அதற்குள் துலைஹாவின் பிடியிலிருந்து அவர்களை விடுவிப்பதாகவும் வேண்டினார். கலீபாவும் அதற்கு இணங்கினார். 'அதீ' அவர்களின் இம்முயற்சி பெரு வெற்றியைத்தந்தது. பலர் துலைஹாவை விட்டுப் பிரிந்து இஸ்லாமியப் படையில் சேர்ந்தனர்.

சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திய காலித் (றழி) அவர்கள் துலைஹாவின் படையினை முற்றுகையிட்டார். இரு தரப்பினருக்குமிடையே நடந்த சண்டைக்கு ஈடுகொடுக்க முடியாமல் துலைஹாவின் படை பலத்த அழிவுக்குள்ளாகியது. துலைஹா தனது மனைவியுடன் குதிரை மீதேறி சிரியா பக்கம் ஓடித் தப்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலுமானவர்கள் தன்னைப் போன்று செயற்படுமாறும் வேண்டினான். புஸாஆ எனும் இடத்தில் நடந்த இப்படுதோல்வியைத் தொடர்ந்து அஸத் , ஆமிர் , கத்பான் போன்ற கிளையார்கள் காலித் பின் வலீத்(றழி) கரத்தில் இஸ்லாத்தை தழுவினர்.

## மாலிக் பின் நுவைறா

துலைஹாவை தொலைத்துக்கட்டிய தளபதி காலித் மற்றொரு பொய் நபியான சஜாஹ்வையும் அவளுக்கு ஆதரவு அளிக்கும் மாலிக் பின் நுவைறா போன்றோரையும் முடிவு கட்ட முயன்றார்.

மாலிக் பின் நுவைறா பனூ தமீம் கிளையில் பனூயர்பூ.. பிரிவைச் சேர்ந்தவன். நபித்துவம் பேசிய சஜாஹ் என்ற பெண்ணின் தந்தை ஹாரிஸ் என்பவரும் பனூ தமீம் கிளையில் யர்பூ.. பிரிவைச் சேர்ந்தவரே! ஈராக்கிலிருந்து தமது தந்தையின் பிரதேசத்தை இவள் வந்தடைந்ததும் அப்பகுதி மக்கள் இவளுக்கு ஆதரவு கொடுத்தனர். சிறந்த ஆளுமை ,கவியாற்றல் நிறைந்த இவள் மக்களை வசீகரிக்கும் தன்மை வாய்ந்தவள்.

பின்னர் இவள் அங்கிருந்து யமாமா நோக்கிச் சென்றாள். அங்கே முசைலமா எனும் பொய்யன் செல்வாக்குப் பெற்றிருந்தான். யமாமா வந்துள்ள சஜாஹ்வுடன் மோதுவது பொருத்தமில்லை எனக்கண்ட முசைலமா அவளை அணைத்தெடுக்க விரும்பினான். தன்னைத் திருமணம் செய்யுமாறு வேண்டினான். அவனது வேண்டுகோளை ஏற்றுத் திருமணம் செய்து மூன்று நாள் கழித்தாள். இவளது நடத்தை இவளது ஆதரவாளர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை.

பின்னர் இவள் ஈராக் திரும்பினாள். நிலமை மோசமடையவே இஸ்லாத்தை ஏற்றாள். இவளைப் பின்பற்றிய பனூ தமீம் கோத்திரத்தினர் நிலை தடுமாறினர். இவ்வேளை காலித் பின் வலீத்(றழி) தலைமையிலான படை இங்கு வந்து சேர்ந்தது. பனூ தமீம் முக்கிய தலைவர்களான மாலிக் பின் நுவைறா, ளிரார் பின் அஸ்வர் போன்றோர் கொல்லப்பட்டனர். இத்துடன் சஜாஹ் என்ற பொய் நபி அடங்கி இஸ்லாத்தை ஏற்று நல்ல முஸ்லிமாக தன் வாழ்வை அமைத்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முசைலமாவைத் தேடி

யமாமாவில் பலத்துடன் திகழ்ந்த முசைலமாவைத் தோற்கடிக்க இரு படைப்பிரிவுகளை கலீபா நியமித்தார் என்பதை ஏலவே படித்துள்ளீர்கள். இக்ரிமாவும் , சுரஹ்பீலும் வெவ்வேறு திசைகளில் சென்று பின்னர் ஒன்றிணைந்து முசைலமாவை எதிர்க்க வேண்டுமென்பதே கலீபாவின் விருப்பம். எனினும் யமாமாவுக்கு விரைந்து சென்று இக்ரிமா முசைலமாவுடன் தனித்து மோதி தோல்விக்குள்ளானார். நடந்த விடயத்தை கலீபாவுக்கு அறிவிக்கவே அவரை ஓமானுக்கு அனுப்பப்பட்டுள்ள படையுடன் இணைந்து கொள்ள கலீபா கட்டளையிட்டார். சுறஹ்பீல் அவர்களை அவசரப்படாமல் தனது கட்டளை வரும்வரை காத்திருக்குமாறு வேண்டினார் கலீபா.

## யமாமாப் போர்

பின்னர் காலித் பின் வலீத்(றழி) அவர்களை அழைத்து யமாமாவுக்குச் செல்லுமாறு கட்டளை பிறப்பித்தார் கலீபா அவர்கள். ஏனெனில் முசைலமாவுடன் சுமார் 40,000 படையினர் இணைந்திருந்தனர். கோத்திர வாதத்தால் அவனைப் பின்பற்றியவர்கள் கூறினார்கள் -முசைலமா பொய்யன் என்றும் முஹம்மத் உண்மையானவர் என்றும் நாமறிவோம். எனினும் றபீஆ கோத்திரப் பொய்யன் முளர் கோத்திர உண்மையாளனை விட எமக்கு விருப்பமானவர். இதன் மூலம் அவர்கள் உண்மைக்கு மாற்றமாக கோத்திர வாதத்துக்கு எவ்வளவு தூரம் அடிமையாகியிருந்தனர் என்பது தெளிவாகின்றது. காலித் தலைமையிலான படை யமாமாவை வந்தடைய முசைலமாவின் ஆதரவாளர்களான ஹனீப் கிளையினர் பெரும் சவாலாக இருந்தனர். எனினும் முஸ்லிம்கள் பெரும் உறுதியுடன் அக்றபா எனும் இடத்தில் போரிட்டனர். உஹது யுத்தத்தில் ஹம்ஸாவைக் கொன்ற வஹ்ஸி என்பவனே முசைலமாவைக் கொன்றான். அவனுடன் மற்றொரு அன்சாரியும் சேர்ந்து அவனைக் கொன்றதால் வெற்றி முஸ்லிம்கள் தரப்பானது. முஸ்லிம்கள் சார்பில் பல ஹாபிள்கள் இந்த யுத்தத்தில் சஹீதானதும் குறிப்பிடத்தக்கது

.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L 10910

## ஓமானிலே

ஓமான் மக்கள் இஸ்லாத்தை ஏற்றது முதல் அங்கே ஜய்பர் , அப்து ஆகிய சகோதரர்களே ஆட்சி நிருவாகிகளாக இருந்தனர். லகீத் பின் மாலிக் அல்-அஸ்தி என்பவர் இஸ்லாமிய ஆட்சிக்கெதிராக ஓமானில் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார். இதனால் பீதியடைந்த இரு சகோதரர்களும் கலீபாவுக்கு விடயத்தை அறிவித்தனர். ஹுதைபா பின் மிஹ்ஸன் தலைமையில் படையணி இங்கு கலீபாவினால் அனுப்பப்பட்டது. அர்பிஜா பின் ஹர்ஸமா தலைமையிலான படைப்பிரிவையும் இதனுடன் இணைந்து செல்லுமாறு கலீபா வேண்டினார். இவ்வேளை இக்ரிமா தலைமையிலான பிரிவினரும் இங்கு வந்து சேர்ந்தனர். மஸ்கத் நகருக்கும் பகீராவுக்குமிடையேயுள்ள சஹார் எனும் இடத்தில் முஸ்லிம் சேனை நிலை கொண்டது. தபா எனுமிடத்தில் லகீத்தின் படை ஒன்று சேர்ந்தது. பாரிய போராட்டத்தின் பின் முஸ்லிம் படை வெற்றிபெற்றது.

பின்னர் ஹுதைபா ஓமானின் நிருவாகத்தைப் பொறுப்பேற்றார். இக்ரிமா ஓமானின் மற்றொரு பிரதேசமான மஹறாவுக்கு படையெடுத்துச் சென்றார். ஏனெனில் அங்கும் மதமாற்றம் நிகழ்ந்திருந்தது. இப்படை சென்று இஸ்லாத்தின் பால் அழைத்ததும் அவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

## பஹ்ரைனிலே

பனூ அப்துல் கைஸ் , பனூபக்ர் கிளையினர் பஹ்ரைனில் வாழ்ந்தனர். அங்கே முன்திர் பின் சாரி என்பவர் இஸ்லாமிய ஆட்சியின் அதிகாரியாக இருந்தார். ஜாஹிலிய்யாக் காலத்திலும் இவரே இம்மக்களின் அமீராகக் கடமை புரிந்தார். நபி (ஸல்) அவர்கள் அலா பின் ஹழ்ரமி மூலம் அனுப்பிய த.்.வாவைத் தொடர்ந்து இவர் இஸ்லாத்தை ஏற்றார். இதனால் இவரே ஆட்சித் தலைவராகவும் தொடர்ந்தார். இவர் நபி (ஸல்) அவர்கள் வபாத்தாகுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பே காலமானார். இவரது மரணத்தைத் தொடர்ந்து பனூ அப்துல் கைஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஜாறூத் என்பவரின் த.்.வாப் பணியால் அம்மக்கள் பாதுகாக்கப்பட்டனர். ஹுதம் பின் ழுபீஆ என்பவன் மதம் மாறியோரின் தலைவனாகவிருந்தான். இவர்களைத் தோற்கடிக்க கலீபா அபூபக்ர்(றழி) அவர்கள் அலா பின் ஹழ்ரமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களையே

தேர்ந்து அனுப்பினார்கள். ஜாறுாத்தும் அவரது கோஷ்டியினரும் ஹுதம் பின் முபீஆவுக்கு எதிராகப்போராட அலா பின் ஹழ்ரமி தலைமையிலான படையினர் "ஹஜர்" எனும் பகுதியில் போராடினர். அல்லாஹ் முஸ்லிம்களுக்கு பெருவெற்றியை அளித்தான்.

இதுவரை நாம் வாசித்த விடயங்களில் நபி (ஸல்) அவர்களின் வபாத்தின் பின் இஸ்லாமிய உலகம் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கியது என்பதை அறிந்தீர்கள். பொதுவாக இஸ்லாமிய உலகமே குழப்ப நிலையை அடைந்திருந்த நிலையை அவதானித்தோம். இவ்வளவு பிரச்சினைகளையும் உறுதியோடு நின்று முறியடித்து வெற்றி நடை போட்ட ஓர் ஆட்சியாளராக கலீபா அபூபக்ர்(றழி) அவர்களை எம்மால் பார்க்க முடியும். மலை போன்ற மன உறுதி கொண்ட கலீபா அபூபக்ரின் அந்த உறுதியான நிலைப்பாட்டால் இஸ்லாமிய உலகம் பாதுகாக்கப்பட்டு அமைதியான ஓர் ஆட்சியை பின்னால் வந்த கலீபா பொறுப்பெடுக்கக் கூடிய சூழலை இவர் ஏற்படுத்திக்கொடுத்தார்.

## இஸ்லாமிய வெற்றிகள்

MARUTHAMUNAI
PUBLIC LIBRARY

### 1- ஈராக் நோக்கி

ஈராக் பிரதேசங்கள் அகன்று விரிந்த பாரசீக ஆட்சிக்குட்பட்டிருந்தது. இப்பகுதியிலே அதிகமான அறபு கோத்திரத்தினர் வாழ்ந்தனர். த..லப்,பக்ர், ஷைபான், றபீஆ, தை போன்ற கிளைகள் குறிப்பிடத்தக்கன.

இவர்களைப் பயன்படுத்தி இஸ்லாத்துக்கெதிரான பிரச்சாரங்கள் தலைதூக்கின. இப்பகுதி வெற்றி கொள்ளப்படாவிடின் இஸ்லாமிய அரசு நிம்மதியாக வாழமுடியாது என அப்பிரதேசத்தைச் சேர்ந்த முதன்னா பின் ஹாரிதா கலீபா அபூபக்ரிடம் வந்து ஆலோசனை கூறினார்.

பாரசீக ஆட்சியாளரின் இஸ்லாத்துக்கெதிரான சதியை முறியடிக்கவும் அறபு கோத்திரத்தினரை அப்பிரதேசத்திலிருந்து மீட்கவும் இஸ்லாமிய ஆட்சியின் நிம்மதிக்காகவும் பாரசீகத்தின் பிடியிலுள்ள ஈராக் பிரதேசத்தை மீட்பதன் அவசியத்தை உணர்ந்த கலீபா தளபதி காலித் பின் வலீதுக்கு இது தொடர்பாக கட்டளை இட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமாமாவை வென்று அங்கு நிருவாகப் பணியை மேற்கொண்டிருந்த காலித் பின் வலீத் அவர்களை பொதுத்தளபதியாக நியமித்த கலீபா அவர்கள் முதன்னா பின் ஹாரிதா அஷ்ஷைபானி அவர்களை தெற்குப்புறமாகத் தலைமை தாங்கிச் செல்லுமாறும் இயாழ் பின் ஹனம் அப்பஹ்ரி அவர்களை வடபகுதிக்குத் தலைமை தாங்குமாறும் கூபாவிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள ஹீரா எனுமிடத்தில் சந்திக்குமாறும் வேண்டினார்கள்.

ஹீராவை நோக்கிச் சென்ற தளபதி காலித் வழியில் "பானிக்யா" போன்ற பிரதேச மக்கள் இஸ்லாமிய ஆட்சிக்கு ஜிஸ்யா செலுத்துவதாக ஒப்பந்தம் செய்வித்தார். ஹீராவின் ஆட்சியாளரும் 190,000 திர்ஹம் ஜிஸ்யாவாக வழங்கி இஸ்லாமிய ஆட்சிக்கு திறை செலுத்துவதாக ஒப்பந்தம் செய்தார்.

## 2- ஹுர்முஸுக்கு எதிராக சங்கிலிப்போர்.

'உபுல்லா' என்பது டைக்ரஸ் கரையிலுள்ள ஒரு பிரபலமான நகரம். இங்கே பாரசீகக்கிஷ்ரா மன்னன் சார்பில் ஹுர்முஸ் என்பவன் ஆட்சி செய்தான். நடைபெற்ற போரில் ஹுர்முஸ்ஸுடன் அவனது முக்கிய தளபதிகளும் கொல்லப்பட்டனர். பாரசீக வீரர்கள் யுத்தத்தில் தோல்வியடைந்து ஓடக்கூடாது என்பதற்காக தங்கள் கால்களில் சங்கிலியைப் பிணைத்துக்கொண்டு யுத்தம் செய்தனர். இதனால் இதற்கு சங்கிலிப்போர் என அழைக்கப்படுகிறது. சங்கிலியால் பிணைக்கப்பட்டதால் ஓடித்தப்ப முடியாமல் பலர் உயிர் துறந்தனர். இவ்வெற்றியைத் தொடர்ந்து எவ்வித ஓய்வும் எடுத்துக்கொள்ள விரும்பாத தளபதி காலித் (றழி) பஸராவுக்கு பக்கத்திலுள்ள " ஜிஸ்றுல் அஃஎம்" எனும் இடத்தை முற்றுகையிட்டு அதில் வெற்றியடைந்தார்.

பாரசீக ஆட்சியின் தொடர் தோல்விகளைத் தொடர்ந்து பாரசீக ஆட்சியாளர்கள் "காரின்" என்பவர் தலைமையில் அனுப்பிய படையை "மதர்" எனும் இடத்தில் எதிர்நோக்கிய காலித் தோல்வியடையச் செய்தார். பின்னர் "வலஜா" "உல்லைஸ்" போர்களிலும் முஸ்லிம்கள் பெருவெற்றியீட்டினர். இப்போரில் சுமார் 70,000 பாரசீகப்படையினர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பின்னர் 'கவர்னக், சதீர், அன்பார், ஐனுத்தம்ர், தூமத்துல்ஜன்தல், போன்ற ஈராக் பிரதேசங்கள் அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியக் கொடியின் கீழ்வந்தன.

வெற்றிமேல் வெற்றியைக்குவித்துக் கொண்டிருந்த தளபதி காலித் (றழி) ஈராக்கின் முக்கிய நகரான "ஹீரா" வுக்கு வந்து படையை நிலைநிறுத்தி விட்டு இரகசியமாக மக்கா சென்று ஹஜ்ஜுக்கடமையை நிறைவேற்றிவிட்டு முகாம் திரும்பினார். கலீபா கூட இவ்விடயத்தை பின்னரே அறிந்து தளபதியைக் கண்டித்தார்.

## 3- சிரியாவை நோக்கி

இஸ்லாமிய உலகின் உள்ளே இருந்த குழப்பவாதிகளை அடக்கி முடித்த பின் எல்லைகளில் விழிப்பாக இருக்க வேண்டிய அவசியத்தை கலீபா உணர்ந்தார்கள். எனவே சிரியாப் பிரதேசத்தின் எல்லையில் பாதுகாப்பாக நிற்குமாறு காலீத் பின் வலீத் தலைமையில் ஒரு படைப்பிரிவை கலீபா அவர்கள் அனுப்பி வைத்தார்கள். இந்த காலித் அவர்களின் சேனை பற்றி அறிந்த பைசாந்தியப்படை இவர்களைத் தாக்கியது.

இஸ்லாத்தின் பாதுகாப்புக்கு சிரியாப்பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது முக்கியம் எனக்கலீபா கருதினார். எனவே கலீபா அவர்கள் நான்கு படைப்பிரிவுகளை நான்கு தளபதிகளின் தலைமையில் தயார் செய்தார்கள்.

1) யஸீத் பின் அபீசுப்யான்(றழி) அவர்கள் தலைமையில் டமஸ்கஸை நோக்கியும்
2) அபூஉபைதா பின் ஜர்ராஹ்(றழி) அவர்களை ஹிம்மஸ் நோக்கியும்
3) அம்றுப்னுல் ஆஸ்(றழி) அவர்களை பலஸ்தீன் நோக்கியும்
4) சுறஹ்பீல் பின் ஹஸனா(றழி) அவர்கள் தலைமையில் ஜோர்தான் நோக்கியும்

மொத்தம் 27ஆயிரம் பேர் கொண்ட படைகளை சிரியா நோக்கி அனுப்பினார்கள். பல்வேறு திசைகளாகப்பிரிந்து முஸ்லிம்கள் சிரியாவின் எல்லையை அடைந்ததைத் தொடர்ந்து பாரிய படையெடுப்பொன்றை ஹிறக்கல் தலைமையிலான பைசாந்திய அரசு மேற்கொண்டது. இதனைக்கேள்வியுற்ற கலீபா ஈராக் எல்லையில் யுத்தம் செய்துகொண்டிருந்த தளபதி காலித் பின் வலீத்(றழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை உடனடியாக சிரியா நோக்கிச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். தனது படையினரை இரண்டாகப் பிரித்து ஒரு பிரிவை முதன்னா பின் ஹாரிதா (றழி) தலைமையில் நிறுத்திவிட்டு சுமார் 10,000 பேர் கொண்ட படையினரை அழைத்துக்கொண்டு சற்றும் அறிமுகமில்லாத சுருக்கப்பாதையான பாலைவனப் பாதையூடாக காலித் பின் வலீத் (றழி) அவர்கள் ஐந்து நாட்களில் சிரியாவை சென்றடைந்தார்கள். எதிரிகள் பலம் பொருந்திய நிலைமையில் நாம் பிரிந்து செயற்படுவதால் பாரிய அழிவை எதிர்நோக்கவேண்டிவரும் என எச்சரித்த பொதுத்தளபதி காலித் பின் வலீத் சகல பிரிவுகளையும் ஒன்றிணைத்தார்.

## 1- யர்மூக் யுத்தம்

ஹிஜ்ரி 13ல் நடைபெற்ற இவ்யுத்தம் சிரியாவில் இஸ்லாம் வாழ்வதா அல்லது அழிவதா என்பதை நிர்ணயிக்கும் யுத்தமாக அமைந்தது. முஸ்லிம்களின் தொகை 40 ஆயிரத்துக்குட்பட்டதாக இருக்க எதிரிகள் இரண்டு இலட்சத்து நாற்பதினாயிரம் பேர் கருமேகக்கூட்டம்போல் காணப்பட்டனர்.

பாரிய படையினரை எதிர்நோக்குவதற்காக தளபதி காலித் பின் வலீத்(றழி) அவர்கள் தமது படையினரை 36 பிரிவுகள் கொண்டதாகப்பிரித்தார்கள். ஒவ்வொரு பிரிவும் ஆயிரம் இராணுவத்தினரையும் ஒரு தளபதியையும் கொண்டதாக ஆக்கினார்கள். பின்னர் இந்த 36 பிரிவுகளையும் 3 பிரிவுகளாக ஆக்கினார். அபூஉபைதா பின் ஜர்ராஹ்(றழி) தலைமையில் மத்தியிலும் சுறஹ்பீல் பின் ஹஸனா(றழி) உதவியுடனும் அம்றுப்னுல் ஆஸ் (றழி) தலைமையில் வலப்புறப்படைப்பிரிவையும் யஸீத் பின் அபீசுப்யான்(றழி) தலைமையில் இடப்புறப்படைப்பிரிவையும் பொதுத்தளபதியாக தன்னையும் ஆக்கினார்.

மேலும் இராணுவ வீரர்கட்கு உள ரீதியான உற்சாகத்தைக் கொடுப்பதற்கும் ஒரு பிரிவை தளபதி நியமித்தார். அல்லாஹ்வின் பாதையில் புனிதப்போர் செய்வதைத்தூண்டும் பிரசாரங்களை மேற்கொள்ளவும், அல்குர்ஆனின் வசனங்களை ஓதிக்காட்டவும், வீரக்கதைகளைக்கூறவும் என பலர் நியமனமாகினர். மிக்தாத் பின் அஸ்வத்(றழி), அபூஹுரைரா(றழி) போன்றோர் வீரர்களிடம் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூறத்துல் அன்பால் ஓதி யுத்தத்தைத் தூண்டுவதற்காகவும், அபூசுப்யான் (றழி) வீரக்கதைகளைக்கூறி உற்சாகப்படுத்தவும், முஆத் பின் ஜபல் (றழி) அவர்கள் சுவர்க்கம் என்பது கற்பனையானது அல்ல அது யுத்த ரீதியில் பெறவேண்டியது என்றெல்லாம் உபதேசிப்பதற்கு நியமிக்கப்பட்டனர்.

## எதிரிகளின் தளபதி இஸ்லாத்தில்

யுத்தம் ஆரம்பமாகுமுன் ஓர் அதிசய நிகழ்ச்சி. எதிரிகளின் தளபதி ஜோர்ஜ் தியோதர் அல்லது ஜரஜா தோதர் என்பவர் தளபதி காலித் பின் வலீத்(றழி) அவர்களைச் சந்திக்க வேண்டுமென வருகிறார். காலித் அவர்களிடம் வானத்திலிருந்து இறங்கிய வாளொன்று இருப்பதாகவும் அதனை நபி(ஸல்)அவர்கள் காலித் அவர்களிடம் கொடுத்துள்ளதாகவும் அதனால் வெட்டப்படுபவர்கள் பிழைக்க மாட்டார்கள் இதனால்தான் சைபுல்லாஹ் அல்லாஹ்வின் வாளென அவர் அழைக்கப்படுவதாகவும் அவர் கேள்விப்பட்டிருந்தார். இதனை உறுதிப்படுத்தவே அந்த தளபதி காலித் அவர்களிடம் வந்திருந்தார்.

அவர் காலித் (றழி) அவர்களிடம் நான் கேட்கும் கேள்விகட்கு பொய் கூறவேண்டாம் உண்மை கூறுங்கள். சுதந்திரமான மனிதன் பொய் கூறமாட்டான். மோசடியும் செய்ய மாட்டான். உங்கள் நபிக்கு அல்லாஹ் வானத்திலிருந்து வாளொன்றை அனுப்பினானா? அதை அவர் உங்களிடம் கொடுத்துள்ளாரா? இவ்வினாவுக்கு காலித் இல்லை எனப்பதிலளித்தார்கள். அப்படியானால் "சைபுல்லாஹ்" எனும் பெயர் ஏன் கூறப்படுகிறது? எனக்கேட்டான். அல்லாஹ் எங்களுக்கு நபியை அனுப்பினான். அவர் எங்களை நல்வழியில் அழைத்தார். நாங்கள் அதை விட்டு விரண்டோடினோம். தூரமானோம். எங்களில் சிலர் அவரை உண்மைப்படுத்தினர், பின்பற்றினர். சிலர் பொய்யாக்கி தூரமாகினர். அவரைப் பொய்யாக்கி தூரமாகி அவரைக்கொல்ல முயன்றவர்களில் நானும் ஒருவன். பின்னர் அல்லாஹ் எங்களுக்கு நேர்வழியைத் தந்தான். அவரைப்பின்பற்றினோம். அப்போது அவர் நீர் அல்லாஹ்வின் வாள்களில் ஒருவர் எனக்கூறினார். எனது வெற்றிக்காகவும் அவர் பிரார்த்தித்தார். என்று காலித் அவர்கள் கூறியதும் இஸ்லாம் தொடர்பான பல கேள்விகளை அவரிடம் கேட்டார். இவ்வாறு கேட்டபின் காலிதின் கூடாரத்துள் நுழைந்த அவர் குளித்து கலிமாச்சொல்லி இரண்டு ரகஅத் தொழுதார். முஸ்லிம்களின் அணியில்

MARUTHAMUNAI PUBLIC LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து யுத்தம் புரிந்த அந்த வீரத்தளபதி அந்த யுத்தத்திலேயே ஷஹீத் ஆனார். இந்தத் தளபதியின் இம்மனமாற்றம் முஸ்லிம்கள் மனதில் பெரும் உற்சாகத்தையும் எதிரிகளிடம் பெரும் மனச்சோர்வையும் ஏற்படுத்தியது.

வரலாறு காணாத முறையில் பாரிய யுத்தம் நடைபெற்றது. எதிரிப்படைகள் வெட்டி வீழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தனர். பெரும் வெற்றியை நோக்கி இஸ்லாமியப்படை வீறுநடைபோட்டது. தபறீ அவர்களின் கருத்துப்படி அப்போரில் 120,000 றோமர்கள் பலியாகினர்.

காலித் பின் வலீத்(றழி) தனது திறமையை முழுமையாகப் பயன்படுத்தி எதிரிகளை வெட்டிவீழ்த்திக் கொண்டிருந்த வேளை மதீனாவிலிருந்து செய்தி வருகிறது.

கலீபா அபூபக்ர்(றழி) காலமாகிவிட்டதாகவும், உமர் பின் கத்தாப்(றழி) அவர்கள் கலீபாவாகப் பதவிப்பிரமாணம் செய்துள்ளதாகவும், காலித் பின் வலீத்(றழி) தளபதிப் பதவியிலிருந்து நீக்கப்படுவதாகவும் புதிய தளபதியாக அபூஉபைதா பின் ஜர்ராஹ்(றழி) நியமிக்கப்படுவதாகவும் அச்செய்தி கூறியது.

இச்செய்தி வெளியே கசிந்தால் படையினர் உற்சாகமிழப்பர் எனக்கருதிய தளபதி காலித் பின் வலீத் அபூஉபைதா அவர்களை அழைத்து விடயத்தைக்கூறி யுத்தத்தை நடத்துமாறு வேண்ட அவரும் பணியைத் தொடர்ந்தார். வெற்றி உறுதியானது. யர்மூக் யுத்தத்தில் அடைந்த தோல்வியைத் தொடர்ந்து ஹிறக்ல் மன்னன் "சிரியாவே உன் மீது ஸலாம் உண்டாகட்டும். இனி உம்மை எம்மால் சந்திக்க முடியாது" எனக்கூறிவிட்டு ஓடிப்போனான். பின்னர் காலித் பின் வலீத்(றழி) வெற்றிக்களிப்பில் மிதந்த படையினரை அழைத்து விடயங்களைக்கூறி தளபதிப்பொறுப்பை முழுமையாக அபூஉபைதா பின் ஜர்ராஹ்விடம் ஒப்படைத்தார்கள்.

PUBLIC LIBRARY
JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்-குர்ஆன் நூலுருவிலாதல்.

கலீபா அபூபக்ர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான செயற்பாடுகளில் மற்றொன்று அல்-குர்ஆனை நூலுருவிலாக்கியதாகும். அல்-குர்ஆன் தற்போதுள்ளது போல் நூல் வடிவத்திலன்றி ஹாபிள்களின் உள்ளங்களிலும் ஓலைமட்டைகளிலும் கிளிந்த புடைவைத்துண்டுகளிலுமே பாதுகாக்கப்பட்டு வந்தது.

முசைலமாவுக்கு எதிராக நடந்த "யமாமா" ப்போரில் அதிகமான ஹாபிள்கள் ஷஹீதாக்கப்பட்டதால் உள்ளத்தால் பாதுகாக்கப்படும் அல்-குர்ஆனை நூல் வடிவில் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையை கலீபாவிடம் முன்வைத்தார் உமர் (றழி) அவர்கள். கலீபா முதலில் நபி (ஸல்) செய்யாத வேலையை நாம் செய்வதா எனத்தயக்கம் காட்டிய போதிலும் பின்னர் அது அவசியமானதுதான் என்பதில் உறுதியானார். பின்னர் இருவருமாக அவ்வேளை அல்-குர்ஆனின் சிறந்த அறிஞராக மதிக்கப்பட்ட நபியவர்களின் வஹியை எழுதிய ஸைய்த் பின் தாபித்(றழி) அவர்களை அழைத்து விடயத்தை கூறினார்கள்.

இது தொடர்பாக ஸெய்த் பின் தாபித்(றழி) அவர்கள் அறிவிக்கும் ஒரு ஹதீஸ் ஸஹீஹுல் புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது..

ஸைத் பின் ஸாபித் அல்அன்சாரி (ரழி) அவர்கள் கூறியதாவது:

யமாமா போர் நடைபெற்ற பின் (கலீபா) அபூபக்ர்(ரழி) அவர்கள், எனக்கு ஆளனுப்பி (என்னை அழைத்து வரச் சொன்)னார்கள். (நான் சென்றேன்) அங்கே அவர்களுடன் உமர் பின் கத்தாப் (ரழி) அவர்களும் இருந்தார்கள். அப்போது அபூபக்ர் (ரழி) அவர்கள் கூறினார்கள்:

உமர் (ரழி) அவர்கள் என்னிடம் வந்து, " இந்த யமாமா போரில் ஏராளமான குர்ஆன் அறிஞர்கள் கொல்லப்பட்டுவிட்டனர். (இறைமறுப்பாளர்களுடன் போர் நடக்கும்) பல்வேறு இடங்களில் குர்ஆன் அறிஞர்களில் ஏராளமான பேர் கொல்லப்பட்டு, அதனால் குர்ஆனின் பெரும்பகுதி (நம்மைவிட்டுப்) போய்விடுமோ என நான் அஞ்சுகிறேன். (ஆகவே,) தாங்கள் குர்ஆனைத் திரட்டி ஒன்றுசேர்க்க உத்தரவிட வேண்டுமென நான் கருதுகின்றேன்' என்று கூறினார்கள். நான், " அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்யாத ஒன்றை நாம் எப்படிச் செய்வது?" என உமர் அவர்களிடம் கேட்டேன். அதற்கு உமர் அவர்கள், " அல்லாஹ்வின் மீதாணையாக! இது (குர்ஆனைத் திரட்டுவது) நன்மை(யான பணி)தான்"என்று கூறினார்கள். இதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனத்தை அல்லாஹ் விரிவாக்கும் வரை இது விஷயத்தில் (தொடர்ந்து) அவர்கள் என்னிடம் வலியுறுத்திக் கொண்டேயிருந்தார்கள். (முடிவில்) உமர் அவர்கள் கருதியதை(யே) நானும் (உசிதமானதாகக்) கண்டேன். (இதை அபூபக்ர் அவர்கள் என்னிடம் தெரிவித்த போது உமர் (ரழி) அவர்கள் ஏதும் பேசாமல் அபூபக்ர் (ரழி) அவர்களுக்கு அருகில் அமர்ந்துகொண்டிருந்தார்கள்.) (பிறகு) அபூபக்ர் (ரழி) அவர்கள் (என்னிடம்) "(ஸைதே!) நீங்கள் புத்திசாலியான இளைஞர்; உங்களை நாங்கள் (எந்த விதத்திலும்) சந்தேகப்படமாட்டோம். நீங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்காக வஹீ (வேத வசனங்களை) எழுதக்கூடியவராயிருந்தீர்கள். எனவே, நீங்கள் குர்ஆனைத் தேடிக்கண்டுபிடித்து (ஒரே பிரதியில்) ஒன்று திரட்டுங்கள்" என்று கூறினார்கள்.

"அல்லாஹ்வின் மீதாணையாக! மலைகளில் ஒன்றை நகர்த்த வேண்டுமென எனக்கு அவர்கள் கட்டளையிட்டிருந்தாலும் கூட அது எனக்குப் பளுவாக இருந்திருக்காது, குர்ஆனை ஒன்றுதிரட்டும்படி எனக்கு அவர்கள் கட்டளையிட்டது அதைவிட எனக்குப் பளுவாக இருந்தது. நான், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்யாத ஒன்றை நீங்கள் எப்படிச்செய்கிறீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அபூபக்ர் (ரழி) அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக! இது நன்மை(யான பணி)தான்' என்று பதிலளித்தார்கள். இதையே அன்னார் என்னிடம் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருந்தார். முடிவில் எதற்காக அபூபக்ர் மற்றும் உமர் ஆகியோரின் மனத்தை அல்லாஹ் விரிவாக்கினானோ அதற்காக என் மனத்தையும் அல்லாஹ் விரிவாக்கினான். (குர்ஆனை ஒன்றுதிரட்ட முன் வந்தேன்.) ஆகவே, (மக்களின் கரங்களிலிருந்த) குர்ஆன் (சுவடிகளைத்) தேடினேன். அவற்றை பேரீச்ச மட்டைகள், ஓடுகள் மற்றும் (குர்ஆனை மனனம் செய்திருந்த) மனிதர்களின் நெஞ்சுகளிலிருந்து திரட்டினேன். (இவ்வாறு திரட்டிய போது) "அத்தவ்பா" எனும் (9ஆவது) அத்தியாயத்தின் கடைசி (இரு) வசனங்களை அபூ குஸைமா அல்அன்சாரி (ரழி) அவர்களிடமிருந்து பெற்றேன்; அவரல்லாத வேறெவரிடமிருந்தும் இதனை நான் பெறவில்லை. (அவை) "உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். நீங்கள் துன்பத்திற்குள்ளாவது அவருக்குக் சிரமமாக இருக்கிறது. மேலும் உங்கள் (வெற்றியின்) விஷயத்தில் பேராவல் கொண்டவராகவும், நம்பிக்கையாளர்கள் மீது அதிகப்பரிவும், கருணையும் உடையோராகவும் இருக்கின்றார். (நபியே!இதற்குப்)பின்னரும் அவர்கள் உம்மைப் புறக்கணித்தால் நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிவிடும்; அல்லாஹ் எனக்குப் போதுமானவன். அவனைத்தவிர வேறு இறைவன் இல்லை. அவனையே நான் முழுமையாகச் சார்ந்திருக்கின்றேன். மேலும், அவன் மகத்தான அரியாசனத்தின் அதிபதியாயிருக்கின்றான்.

(என் வாயிலாக) திரட்டித் தொகுக்கப்பட்ட குர்ஆன் பிரதிகள் (கலீபா) அபூபக்கர் (ரழி) அவர்களிடம், அவர்களை அல்லாஹ் இறக்கச் செய்யும் வரை இருந்(து வந்)தது. பின்னர் (கலீபாவான) உமர் (ரழி) அவர்களிடம் அவர்களின் வாழ்நாளில் இருந்தது. (அவர்களது இறப்பிற்குப்) பிறகு உமர் (ரழி) அவர்களுடைய புதல்வி ஹ.்.ப்ஸா (ரழி) அவர்களிடம் இருந்தது.

கலீபா அபூபக்ர் மேற்கொண்ட இப்பணி அல்-குர்ஆனைப் பாதுகாப்பதில் முக்கிய அம்சமாக அமைந்தது.

## நிருவாக ஒழுங்கு

கலீபா அபூபக்ர் (றழி) காலத்தில் இஸ்லாமிய உலகு ஒரே தலைமைத்துவத்தின் கீழ் இருந்தது. ஆட்சியின் தலைநகரமாக மதீனா விளங்கியது. கலீபாவுக்கு எவரும் அமைச்சர்களாக இருக்கவில்லை. சட்டம், நீதி போன்ற விடயங்களில் உமர் (றழி) அவர்கள் உதவினார்கள். அபூஉபைதா பின் ஜர்ராஹ்(றழி) அவர்கள் பைத்துல்மாலின் (திறைசேரி) பொறுப்புதாரியாக சிரியாவுக்கு யுத்தத்துக்கு செல்லும் வரை பதவிவகித்தார். ஸெய்த் பின் தாபித்(றழி) கடிதங்கள் எழுதும் செயலாளராகவும் உதுமான் பின் அப்பான்(றழி) அவர்கள் செய்திகள் எழுதும் செயலாளராகவும் கடமை புரிந்தனர்.

கலீபா மதீனாவில் ஆட்சி செய்த போதும் மாநிலமெங்கும் கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர். கவர்னர்கள் தொழுகை நிறைவேற்றல், தீர்ப்புக்கள் வழங்கல், சட்டம் ஒழுங்கைப்பாதுகாத்தல் போன்ற பணிகளைச்செய்தனர். அபூபக்ர்(றழி) கால கவர்னர்கள் பின்வருமாறு-

1- மக்கா:- இதாப் பின் உசைத்.
மக்கா பிடிபட்டபோது இவரையே நபி (ஸல்) அவர்கள் நியமித்தார்கள். அபூபக்ர்(றழி) காலத்திலும் இவர் இப்பதவியைத் தொடர்ந்தார்.

2- தாயிப்:- உதுமான் பின் அபில்ஆஸ்
இவரையும் நபி (ஸல்) அவர்களே நியமித்தார்கள்.

3- சன்ஆ:- முஹாஜிர் பின் அபூஉமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4- ஹள்ரமவ்த்:- ஸியாத் பின் லபீத்
5- கவ்லான்:- ய:்லா பின் உமையா
6- சுபைத்:- றிமஉ:- அபூமூசல் அஸ்அரீ
7- அல்-ஜனத்:- முஆத் பின் ஜபல்
8- நஜ்ரான்:- ஜரீர் பின் அப்துல்லாஹ்
9- ஜரஸ்:- அப்துல்லாஹ் பின் தவ்ர்
10- பஹ்ரைன்:- அலா பின் ஹழ்றமி

## கலீபாவின் சம்பளம்

கலீபாப்பதவியை ஏற்ற அபூபக்ர்(றழி) அவர்கள் சுமார் ஆறு மாதங்கள் தனது சொந்தத்தொழில் மூலமே வருமானம் பெற்றார்கள். ஒரு நாள் கையில் சில வியாபாரப்பொருட்களை எடுத்துக்கொண்டு சந்தைக்குச்சென்று கொண்டிருந்தார்கள். அப்போது உமர் (றழி) அவர்கள் கலீபாவிடம் எங்கு போகிறீர்கள் எனக்கேட்க சந்தைக்கு என்றார். முஸ்லிம் சமூகத்தின் விவகாரத்தைப் பொறுப்பெடுத்த பின்னரும் இத்தொழிலா? எனக்கேட்க எனது குடும்பத்துக்கு நான் எவ்வாறு உணவளிப்பது? எனக்கேட்டார் கலீபா. நீங்கள் பைத்துல்மால் பொறுப்புதாரி அபூஉபைதாவிடம் செல்லுங்கள். அவர் உங்களுக்குச் சம்பளம் வழங்குவார் எனக்கூறினார் உமர். பின்னர் ஒரு சாதாரண முஹாஜிர் ஒருவரின் குடும்பத்துக்குத்தேவையான செலவு அதாவது ஒரு வருடத்துக்கு ஆறாயிரம் திர்ஹம் சம்பளமாக வழங்கப்பட்டது. தனது மரணத்தின் போது தான் சம்பளமாகப்பெற்ற தொகைகளை தனது காணியொன்றை விற்று திறைசேரிக்குச்சேர்க்குமாறு கட்டளையிட்டார் கலீபா அவர்கள்.

## இராணுவத்துக்கு

இவரது காலத்திலும் அதற்கு முன்பும் இராணுவம் சம்பளம் எதுவுமின்றியே கடமையாற்றியது. ஆனால் யுத்தத்தில் கிடைக்கும் கனீமத் பொருட்களில் 4-5 பங்கு அவ்வீரர்கட்கும் 1-5 பைத்துல்மாலுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...AMUNAI
PUBLIC LIBRARY

# கலீபா நியமனம்

சீரிய ஆட்சி செய்துகொண்டிருந்த கலீபா நோயுற்றார். இந்நோயிலிருந்து விடுபட்டு தான் பிழைப்பது கஷ்டமென்பதை உணர்ந்த கலீபா தனக்குப்பின் ஓர் ஸ்திரமான ஆட்சியை ஏற்படுத்திவிட்டு மரணிக்கவேண்டுமென நினைத்தார். ஏனெனில் நபி (ஸல்) அவர்கட்குப்பின் நிகழ்ந்த நிகழ்வுகளை நினைவுகூர்ந்தவராக இந்த முடிவுக்கு வந்தார்.

உள்ள சிரேஷ்ட நபித்தோழர்களில் உமர் (றழி) அவர்களே இப்பதவிக்கு மிகப்பொருத்தம் எனக்கண்ட கலீபா மற்றவர்களின் அபிப்பிராயம் எவ்வாறு அமைந்துள்ளது எனப்பார்க்க விரும்பி முதலில் அப்துர்ரஹ்மான் பின் அவ்பு (றழி) அவர்களை அழைத்தார். உமர் (றழி) அவர்களைப் பற்றி வினவியபோது உள்ளவர்களில் அவரே சிறப்பானவர். எனினும் சற்று கடுமையாக நடந்துக்கொள்ளக்கூடியவர் என்றார். நான் சற்று மிருதுவான போக்காக இருப்பதால் அவர் கடினமானவராகத்தெரியலாம். பொறுப்புக்கள் கிடைக்கும் போது நிலைமை இறங்கிவிடும் எனக்கூறிய கலீபா அவர்கள் உதுமான் (றழி) அவர்களை அழைத்து அபிப்பிராயம் கேட்க அவரது பகிரங்க வாழ்க்கையை விட இரகசிய வாழ்க்கை சிறப்பானது. அவர் போன்ற ஒருவர் எம்மிடம் இல்லை என்றார். உசைத் பின் ஹுளைர், சயீத் பின் ஸைத், மேலும் முஹாஜிரீன்கள், அன்சாரீன்கள் போன்றோரிடம் ஆலோசனை கேட்ட போது எல்லோரும் தமது திருப்தியை வெளிப்படுத்தினர். தல்ஹா (றழி) மட்டும் அவர் கடுமையாக நடந்துகொள்பவர் எனக்கூறி திருப்தியை வெளிப்படுத்தவில்லை. பலரின் அபிப்பிராயத்தின்பேரில் தமது செயலாளராகவிருந்த உதுமான் (றழி) அவர்களை அழைத்து நியமனக்கடிதம் ஒன்றை எழுதுவித்தார். தனக்குப்பின் கிலாபத் பதவிக்கு உமர் பின் கத்தாப் (றழி) அவர்களை நியமனம் செய்வதாக அக்கடிதம் எழுதப்பட்டு முத்திரையிடப்பட்டது. பின்னர் அங்கிருந்த மக்களிடம் உமரை நான் நியமித்துள்ளேன். அவருக்கு கட்டுப்பட்டு நடவுங்கள் எனக்கேட்க அவர்களும் அதை ஏற்றுக்கொண்டனர். பின்னர் உமர்(றழி) அவர்களை அழைத்து உபதேசம் செய்துவிட்டு இப்பொறுப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்கள்.

LENDING SECTION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணம்

இரண்டு வருடங்கள் மூன்று மாதங்கள் 10 நாட்கள் ஆட்சி செய்த கலீபா அபூபக்கர்(றழி) 15 நாட்கள் நோய்வாய்ப்பட்டிருந்து தமது 63வது வயதில் கி.பி. 22.03.634 க்குச்சமமாகிய ஹிஜ்ரி 13 ஜுமாதுல் ஆகிர் 21 திங்கள் மாலை செவ்வாய் இரவு காலமானார்கள்.

அவரது வஸிய்யத்தின் படி அவரது மனைவிமார்களில் ஒருவரான அஸ்மா பின்து உமைஸ்(றழி) அவர்களே அவரைக்குளிப் பாட்டினார். உமர் பின் கத்தாப்(றழி) தொழுகை நடத்த ஆயிஷா (றழி) அவர்களின் வீட்டில் நபி (ஸல்) அவர்களின் கப்றுக்குப்பக்கத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

# 02- கலீபா உமர் (றழி)

இவரது பெயர் உமர். தந்தை பெயர் கத்தாப். தாயின் பெயர் ஹன்தமா பின்து ஹிஷாம், இவர் அபூஜஹ்லின் சிறிய தந்தையின் மகள். நபி (ஸல்) அவர்களின் மனைவி ஹப்ஸாவின் தந்தை இவர் என்பதால் "அபூஹப்ஸ்" என்ற காரணப்பெயராலும் "பாறூக்" என்ற சிறப்புப்பெயராலும் அழைக்கப்பட்டார். இவர் குறைஷிக் குலத்தின் ஒரு பிரிவான பனூ அதீ கிளையைச் சேர்ந்தவர்.

நீண்ட தோற்றமும் சிவப்புக்கலந்த கடும் வெள்ளை நிறமுமுடையவர். தலைக்கு மருதோண்டி போடுவார். தாடியை மஞ்சளாக்குவார். நபி (ஸல்) அவர்கள் பிறந்து பதின்மூன்றாம் ஆண்டில் மக்காவில் இவர் பிறந்தார்.

## திருமணமும் பிள்ளைகளும்

ஜாஹிலிய்யாக் காலத்தில் நான்கு திருமணங்களை இவர் செய்திருந்தார்.

1- ஸைனப் பின்து மள்ஊன் என்பவரை மணம்செய்து அவர் மூலம் அப்துல்லா, அப்துர்ரஹ்மான் (பெரியவர்), ஹப்ஸா ஆகிய பிள்ளைகளின் தந்தையானார்.

2- குஸாஆ கிளையைச்சேர்ந்த முலைக்கா பின்து ஜர்வல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவரை மணம்செய்து அவர் மூலம் உபைதுல்லாஹ் என்ற பிள்ளையைப்பெற்றார்.பின்னர் இவரை விவாகரத்துச்செய்தார்.

3- ம.்.சூம் கிளையைச்சேர்ந்த அபூஉமையாவின் மகள் குறைபாவைத் திருமணம் செய்தார். இவர் உம்முஹாத்துல் மு.்.மினீன்களில் ஒருவரான உம்மு சல்மாவின் சகோதரி ஆவார். இவர் மூலம் குழந்தை எதுவும் கிடைக்கவில்லை. இவரையும் பின்னர் விவாகரத்துச்செய்தார்.

4- ம.்.சூம் கிளையைச்சேர்ந்த ஹாரிஸ் மகள் உம்மு ஹக்கீமை மணந்ததன் மூலம் பாத்திமா என்ற பெண் குழந்தையின் தந்தையானார். பின்னர் இவருக்கும் விவாக விடுதலை அளித்தார்.

மேற்கூறியவை ஜாஹிலிய்யாக்காலத்தில் நடந்த திருமணங்களாகும். இஸ்லாத்தின் பின்னர்

1- அன்சாரிப்பெண்ணான அவ்சிக் கோத்திரத்தைச் சேர்ந்த ஆஸிம் பின் தாபித்தின் சகோதரி ஜமீலாவை மணந்து ஆஸிம் என்ற குழந்தையைப்பெற்றார். இவரைப்பின்னர் விவாகரத்துச்செய்து விட்டார்.

2- அலி (றழி), பாத்திமா (றழி) தம்பதியினரின் புத்திரியான உம்மு குல்தூம் அவர்களை மணம்செய்து றுகையா, ஸெய்து ஆகிய குழந்தைகட்குத் தந்தையானார். உம்மு குல்தூம் இளவயதிலேயே காலமாகிவிட்டார்.

3- அபூபக்கர் சித்தீக் அவர்களின் புதல்வன் அப்துல்லாவின் விதவைப்பெண்ணான ஸெய்துபின் அம்றின் மகள் ஆத்திக்காவைத் திருமணம் செய்தார்.

இது தவிர யமன் நாட்டைச் சேர்ந்த லுஹய்யா மூலம் அப்துர்ரஹ்மான் (சிறியவர்) என்னும் பிள்ளையும் புகைஹா என்பவர் மூலம் செய்னப் என்ற பெண் குழந்தையும் கிடைத்தன. இவ்விரு பெண்களும் அடிமைப்பெண்களாகும்.

## இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளல்.

நபித்துவத்தின் 5ம் ஆண்டு உமர்(ரழி) இஸ்லாத்தை ஏற்றார். இதுவரை இரகசியமான முறையில் பின்பற்றப்பட்ட இஸ்லாம் உமரின் வருகையின் பின் வெளிப்படையாகவே பின்பற்றப்படும் நிலை உருவானது. ஏனெனில் அவரை எதிர்ப்பதற்கு துணிந்தவர்கள் குறைஷிகள் மத்தியில் காணப்படவில்லை. எனவேதான் நபி(ஸல்) அவர்கள் “ அம்றுப்னு ஹிஷாம் அல்லது உமர் பின் கத்தாப் இருவரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரைக்கொண்டு இஸ்லாத்தைக் கண்ணியப்படுத்து” எனப்பிரார்த்தித்தார்கள்.

“ உமர் அவர்களின் இஸ்லாம் வெற்றியாகவும் அவரது ஹிஜ்ரத் உதவியாகவும் அவரது தலைமைத்துவம் அருளாகவும் அமைந்தது. அவரது வருகையின் முன் எம்மால் கஃ.பாவில் தொழமுடியாமல் இருந்தது. அவரது இஸ்லாத்தின் பின்பே நாம் அதில் தொழுதோம்”என இப்னு மஸ்ஊத் கூறுகிறார்.

அலி (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் 'நான் அறிந்தவரை ஹிஜ்ரத் சென்றவர்கள் அனைவரும் மறைவாகவே (இரகசியமான முறையிலே) சென்றார்கள். உமரைத்தவிர, அவர் ஹிஜ்ரத் செல்ல நாடிய போது வாளைத்தோளில் போட்டுக்கொண்டு அம்பையும் வில்லையும் கையிலெடுத்துக் கொண்டு கஃ.பாவுக்குச்சென்று ஏழு முறை தவாப் செய்துவிட்டு பின்னர் மகாமு இப்றாஹீம் அருகே வந்து தொழுதார். பின்னர் அங்கு நின்றவர்களிடம் எவர் தன் தாய்க்குப்பிள்ளையாக இல்லாமல் விட, தமது பிள்ளைகளை அநாதையாக்கி மனைவிமாரை விதவையாக்க விரும்புகிறாரோ அவர் என்னை இந்த ஓடையின் பின் சந்திக்கட்டும் என்றார். யாரும் அவரைப் பின் தொடரவில்லை.

## இஸ்லாத்தில் நுழைதல்

இப்னு ஹிஷாம் இவரது இஸ்லாம் பற்றி பின்வருமாறு விபரிக்கிறார்.

ஒரு நாள் உமர் தனது வாளை ஏந்திக்கொண்டு நபி(ஸல்) அவர்களைக் கொல்வதற்காகச்சென்றார். அவ்வேளை அவரைச்சந்தித்த நயீம் பின் அப்துல்லா என்பவர் “ உமரே நீ எங்கே? போகிறீர் எனக்கேட்க குறைஷிகளைப்பிரித்து அவர்களின் மார்க்கத்தையும் தெய்வங்களையும் பழித்துக்கொண்டிருக்கும் முஹம்மதைக் கொல்லப் போகின்றேன்! என்றார். உமரே, முஹம்மதைக் கொன்றுவிட்டு பூமியில் நடமாடித்திரிய உன்னை அப்துல் மனாபின் குடும்பத்தினர் விட்டுவிடுவரா? உனது குடும்பத்தையே நீ திருத்தி விடலாம் அல்லவா! என்றார். எனது குடும்பத்தினருமா என அதிர்ச்சி கலந்த தொனியில் கேட்டார் உமர். ஆம் உனது சகோதரி, மச்சான் சயீத் பின் ஸைத் இஸ்லாத்தைத் தழுவி உள்ளனரே என்றார். உடனே உமர் சகோதரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு திரும்பிய போது அங்கே கப்பாப் பின் அறத் என்ற தோழர் “தாஹா” என்ற சூறாவைக்கொண்ட ஏட்டைக்கையில் வைத்துக்கொண்டு அவர்களுக்கு அதனைக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார். உமரைக்கண்ட கப்பாப் ஓடி மறைந்து கொண்டார். பாத்திமா குர்ஆன் ஏட்டை மறைத்தார். உமர் வீடு வரும் போது கப்பாப் ஓதும் சப்தத்தைக்கேட்டவராகவே வந்தார். அவர் வந்து நான் கேட்ட சப்தம் என்ன? எனக்கேட்க அப்படி ஒரு சப்தமும் வரவில்லையே என மறுத்தனர். 'நீங்கள் முஹம்மதின் மார்க்கத்தை ஏற்றுள்ளீர்கள் என நான் அறிந்துள்ளேன். எனக்கூறி தனது மைத்துனரை பிடித்தார். உடனே அவரது மனைவி பாய்ந்து தனது கணவனை விடுவிக்க தங்கைக்கு அடித்தார் உமர். ஆம், நாம் இருவரும் இஸ்லாத்தை ஏற்றுள்ளோம் நீ என்ன செய்யப்போகிறாய்? செய்! என துணிச்சலுடன் இருவரும் கூறவே தன் தங்கையிடமிருந்து இரத்தம் வழிவதை பார்த்த உமர் கவலையடைந்தார். சற்று நிதானமாக நீங்கள் ஓதிய ஏட்டைத்தாருங்கள் பார்ப்போம்” எனக்கேட்டார். உம்மிடம் தரப்பயப்படுகின்றோம் என்றார் தங்கை. எனது கடவுள்கள் மீதாணை. பயப்படவேண்டாம். திருப்பித்தந்துவிடுவேன் என்றார். சகோதரனே நீ அசுத்தமானவன். சுத்தமானவர்கள் கைகளில்தான் குர்ஆனைக் கொடுக்க முடியும் என தங்கை கூற எழுந்து குளித்து வந்தார் உமர். உமரின் கல் நெஞ்சைக் கரைய வைத்தது அல் குர்ஆன். ஏட்டை எடுத்து “தாஹா” அத்தியாயத்தின் முதற்பகுதியை ஓதி அதிசயித்தவராக என்ன அழகான வார்த்தைகள் எனப்புகழ்ந்தார். இவ்வார்த்தையைக்கேட்ட பின் ஒழித்திருந்த கப்பாப் முன்னே வந்து உமரே ! உன்னை அல்லாஹ் அவனது நபியின் த்.வாவுக்கு உதவியாக ஆக்க வேண்டும் என விரும்புகின்றேன்: இவ்வாறு நேற்று நபி தூதர் (ஸல்) அவர்களும் பிரார்த்தனை செய்துள்ளார்கள், என்றார். கப்பாபே ! அவரது வீட்டைக்காட்டுங்கள்., நான் இஸ்லாத்தை ஏற்கப்போகிறேன் என்றார் உமர். ஸபாக்குன்றடியில் உள்ள அல்-அர்கம் பின் அபில் அர்கம் வீட்டில் நபி உள்ளார் என அவர் கூறியதும் அவ்வீட்டை நோக்கி வந்து கதவைத்தட்டினார் உமர். கதவின் இடுக்கால் பார்த்த தோழர்கள் உமர் வாளேந்தி வந்துள்ளார் என்றனர். எல்லோர் முகத்திலும் கலவரம் ! உள்ளே அவரை வரச்சொல்லுங்கள் நன்மைக்கு வந்தால் அதனைப் பெறட்டும்; கெடுதிக்கு வந்தாரென்றால் அவ்வாளினாலேயே அவரைக்கொல்வோம் என்றார் ஹம்ஸா. உள்ளே வர அனுமதிக்கப்பட அவரது ஆடையைப்பிடித்த நபி (ஸல்) அவர்கள் இங்கே ஏன் வந்தீர்கள்? எனக்கேட்க இஸ்லாத்தை ஏற்கவே வந்துள்ளேன் எனக்கூற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியால் நபி (ஸல்) அவர்கள் தக்பீர் கூறினார்கள். இருந்த அனைவரும் மகிழ்ச்சியால் தக்பீர் கூறினர். உமரின் வருகை இஸ்லாத்துக்கு பெரும் பலமாக அமைந்தது.

## பதவிப்பிரமாணம்

முதலாம் கலீபா அபூபக்ர் (ரழி) அவர்களின் நியமனத்தின் பிரகாரம் இரண்டாவது கலீபாவாக உமர் (ரழி) அவர்கள் ஹிஜ்ரி 13 ஜமாதுல் ஆகிர் 8ம் நாள் செவ்வாய்க்கிழமை பதவி ஏற்றார். மஸ்ஜிதில் மக்கள் கூட்டம் கூட்டமாக அவருக்கு "பைஅத்" செய்தார்கள். பதவியைப்பொறுப்பேற்ற பின் மக்கள் முன் பின்வரும் பிரசங்கத்தை நிகழ்த்தினார் "அறபு மக்கள் தன்னை மேய்ப்பவனுக்கு வழிபட்டுச் செல்லும் ஒட்டகம் போன்றவர்கள். அதனை அவன் எங்கு கொண்டு செல்கிறான் என்பதைக் கவனிப்பது அவனது கடமையாகும். க∴பாவின் இறைவன் மீது ஆணையாக! நான் உங்களை நல்வழியில் கொண்டு செல்வேன்" என உரையாற்றினார்.

## சிறப்புக்கள்

1- சுவனத்தைக்கொண்டு நன்மாராயம் சொல்லப்பட்டவர்களில் ஒருவர்.

2- முதன்முதல் "அமீறுல் மு∴மினீன்" என அழைக்கப்பட்டவர்.

3- இவர் இஸ்லாத்தை ஏற்க வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் பெரும் எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். அதற்காகப் பிரார்த்தனையும் புரிந்தார்கள்.

4- ஜாஹிலிய்யா மக்கள் மத்தியில் சிறப்புக்குரிய வீரராக மதிக்கப்பட்டவர். அவர்களின் பேச்சு வார்த்தைகளுக்கு தூதுவராகவும் செயற்பட்டவர்.

5- நபி (ஸல்) அவர்கள் இவருக்கு "பாறூக்" எனச்சிறப்புப் பட்டம் இட்டார்கள். ஏனெனில் அவர் இஸ்லாத்தை ஏற்றபோது உண்மையையும் பொய்யையும் பிரிக்கும் விடயமாக அவரது இஸ்லாம் அமைந்தது.

6- ஜாஹிலிய்யாவில் மதுப்பிரியராக இருந்த உமர் இஸ்லாத்தின் பின் மது சட்டவிரோதமானதாக ஆக்கப்படவேண்டுமென கூறிக்கொண்டே இருந்தார். இவ்வேளை "விசுவாசிகளே, மதுபோதையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுகைக்குச் செல்லாதீர்கள்." (நிசா-43) எனும் கட்டளை வந்தபோதும் அவர் திருப்திப்படவில்லை. முழுமையாகத் தடைசெய்யப்படவேண்டுமென நாடினார், பின்னர் மது தடைசெய்யப்பட்டுவிட்டது என்ற சூறா மாயிதாவின் 90,91ம் வசனங்கள் இறங்கிய பின்பே திருப்தியடைந்தார்.

7- இதேபோன்றுதான் பெண்களுக்கு குறிப்பாக நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்கட்கு "ஹிஜாப்" கடமையாக்கப்பட வேண்டுமென எதிர்பார்த்தார். நபி (ஸல்) அவர்களிடமும் பேசினார். பின்னர் அவர் கூறியது போல் "ஹிஜாப்" வசனம் இறங்கியதும் மகிழ்ச்சியடைந்தார்.

8- மதீனாவில் முனாபிக்குகளின் தலைவனாக இருந்த அப்துல்லா பின் உபை பின் சலூல் காலமானதும் அவரைத் தொழுவிக்க நபி (ஸல்) அவர்களை அவரின் மகன் அழைத்தார். நபி(ஸல்) அவர்கள் போக ஆயத்தமான போது உமர்(றழி) ஆட்சேபனை தெரிவித்தார், விவாதித்தார். இவ்வேளை "தொழ வேண்டாம்" என தடுக்கும் (தவ்பா 84) வசனம் இறங்கியதும் உமரின் கருத்துக்கேற்ப குர்ஆன் இறங்கியதால் அவர் மகிழ்ச்சியடைந்தார்.

9- நபி (ஸல்) அவர்களிடம் மக்காமு இப்றாஹீமை தொழும் இடமாக எடுத்தால் நல்லமே என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டார். " மக்காமு இப்றாஹீமை தொழும் இடமாக ஆக்குங்கள்' என்ற அல் குர்ஆன் வசனமும் இறங்கியது.

10- இஸ்லாத்தை ஏற்றது முதல் நபி (ஸல்) அவர்களோடு இணைந்திருந்ததுடன் முக்கிய யுத்தங்கள் அனைத்திலும் கலந்து கொண்டவர்.

11- பல்வேறு விடயங்களில் நபி(ஸல்) அவர்களின் ஆலோசகராக இருந்தவர்.

12- ஹிஜ்ரிக்கலண்டரை முதலில் ஏற்படுத்தியவர்.

13- பைத்துல்மால் எனும் திறைசேரியை ஏற்படுத்தியவர்.

14- இரவு வேளைகளில் ஊர் சுற்றி மக்கள் குறைகளை அறிந்தவர்.

15-றமழான் மாதத்தில் தறாவீஹ் தொழுகையை ஒரே ஜமாஅத்தாக ஏற்படுத்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தங்களும் வெற்றிகளும்

அரேபியத்தீவில் இஸ்லாமியச்சுடர் பிரகாசித்தபோது பக்கத்தில் ரோம, பாரசீக வல்லரசுகள் பெரும் சக்தி வாய்ந்ததாகக்காணப்பட்டன. ஈரான், ஈராக், சிரியாவின் கிழக்குப்பகுதிகள், அரேபியாவின் வடபகுதிகள், ஆர்மேனியா போன்ற பிரதேசங்கள் பாரசீகப் பேரரசின் கீழ் இருந்தன. அவர்களின் ஆட்சியாளர் கிஸ்ரா என அழைக்கப்பட்டார். "மதாயின்" அவர்களின் தலைநகராக இருந்தது.

பலஸ்தீன், சிரியா, ஜோர்தான், லெபனான், துருக்கி, எகிப்து, வடஆபிரிக்கா ஆகிய நாடுகள் ரோம ராஜ்யமாக மிளிர்ந்தன. "கைஸர்" அதன் ஆட்சியாளராக இருந்தார். கொஸ்தன்தீனியா அவர்களது தலைநகராகும். இஸ்லாத்தின் வரவு கண்ட இந்த ஆட்சியாளர்கள் அதனை அழித்துவிட பல்வேறு சதிகளை இரகசியமான முறையில் மேற்கொண்டனர். பொய் நபிகளுக்கு உதவி செய்தனர். கிளர்ச்சியாளர்களைத் தூண்டிவிட்டனர். எனவேதான் கலீபா அபூபக்கர்(ரழி) ஆட்சி காலத்தில் பாரசீகப் பிரதேசங்களில் ஒன்றான ஈராக் மீது படையெடுத்து அதனை பணிய வைத்தார்கள். காலித் பின் வலீத்(ரழி) சிரியாவுக்குச்சென்ற சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி ஈராக்கை மீண்டும் தம் வசப்படுத்த உமர் (ரழி) காலத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஹீராவைக் கைப்பற்றிய முஸ்லிம்களைத் துரத்துவதற்காக பாரசீக மன்னன், ஹுர்முஸ் என்ற தளபதியின் தலைமையின் கீழ் ஒரு பெரும்படையைத்தயார் செய்து அனுப்பிய போதும் ஈராக்கில் நிலை கொண்டிருந்த இஸ்லாமிய தளபதி முதன்னா பின் ஹாரிதா(ரழி) அவர்களைத் தோற்கடித்தார்.

## ஜிஸ்ர் (பாலம்) யுத்தம்

ஈராக்கின் தலைநகராக விளங்கிய ஹீரா முஸ்லிம்கள் கையில் இருப்பது பாரசீக அரசுக்கு பாரிய இழுக்கானது. இதனை எப்படியோ மீட்கவேண்டுமெனத்துணிந்த பாரசீகர்கள் றுஸ்தும் என்ற தளபதி தலைமையில் பாரிய சேனையைத் தயார் செய்தனர். யானைப்படை, குதிரைப்படைகள் சகிதம் பல்லாயிரக்கணக்கில் வீரர்கள் கலந்து கொண்டனர். பாரசீகப்படை யூபிரதிஸ் நதியின் கிழக்குக்கரையில் பாளையமிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளை அபூஉபைதா பின் மஸ்ஊத் தகபி தலைமையிலான முஸ்லிம் சேனை யூப்பிரட்டிஸ் நதியின் மேற்குக்கரையில் முகாமிட்டது. யூப்பிரட்டிஸ் நதியைக்கடந்து முஸ்லிம் படை சென்றதும் யானைப்படைக்கு முன் முஸ்லிம்களின் குதிரைப்படை நின்று பிடிக்க முடியாமல் போனதும் பாலத்தை முஸ்லிம்களே தகர்த்து விட்டதும் எதிரிகளின் கையோங்க வழியானது. முஸ்லிம் தளபதி உட்பட பெரும்பாலான படைவீரர்கள் வெட்டப்பட்டும் நீரில் மூழ்கியும் சுமார் 4000வீரர்கள் ஷஹீதானார்கள். ஹிஜ்ரி 13ல் ஷஃபானில் நடந்த இவ்யுத்தத்தில் ஹீரா நகரையும் முஸ்லிம்கள் இழந்தனர். முஸ்லிம்களுக்கெதிராக பாரசீகர்கள் வெற்றி பெற்ற ஒரேயொரு யுத்தமாகவும் இது மிளிர்ந்தது.

## புவைப் யுத்தம்

ஜிஸ்ர் (பால) யுத்தத்தில் முஸ்லிம்கள் அடைந்த தோல்விக்கு பரிகாரமாக ஹீராவிலிருந்து எதிரிகளைத் துரத்துவதற்காக கலீபா மற்றொரு படையை அனுப்பி வைத்தார். ஹிஜ்ரி 13 றமழான் மாதம் நடைபெற்ற இவ்யுத்தத்தில் முஸ்லிம் படை வெற்றி பெற்றதுடன் ஹீரா நகரையும் அம்மாகாணத்தையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.

## காதிஸிய்யா யுத்தம்

பாரசீகர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நடந்த பாரிய போர்களில் ஹிஜ்ரி 15ல் நடைபெற்ற காதிஸிய்யா போரும் ஒன்று. பாரசீகத்தின் மன்னனான இளம் வயதான யஸ்தஜர்த் என்பவன் முடிசூடினான். ஹீராவில் முஸ்லிம்கள் நிலைகொண்டிருப்பது ஆபத்தானதென நினைத்தான். அவர்களைத் துடைத்தெறிவதற்காக பாரிய படையொன்றைத் தயார் செய்தான். றுஸ்தும் என்ற புகழ்பெற்ற தளபதி தலைமையில் 120,000 பேர் கொண்ட படை தயாரானது.

இப்பிரதேசத்தில் முஸ்லிம் படைகளின் தளபதியாகவிருக்கும் முதன்னா பின் ஹாரிதா (ரழி) கலீபாவுக்கு ஆபத்தான நிலை பற்றி விளக்கி செய்தி அனுப்பினார். கலீபா மதீனாவில் இதுபற்றி அறிவித்து புதிய தளபதியாக ஷஃது பின் அபீவக்காஸ் (ரழி) அவர்களை நியமித்து அவர் தலைமையில் 30,000 பேர் கொண்ட படையை அனுப்பிவைத்தார்.

LENDING SECTION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் சேனை யூப்பிரிட்டிஸ் நதிக்கு அண்மையிலுள்ள காதிஸிய்யா என்ற இடத்தை அடைந்தது. றுஸ்தும் தலைமையிலான படையும் அங்கு நதியைக்கடந்து வந்தது. றுஸ்தும் தமது படையுடன் முப்பதுக்கு மேற்பட்ட யானைப்படைகளையும் கொண்டு வந்திருந்தான். யுத்தம் மூன்று நாட்கள் நீடித்தது. யானைப்படையின் சண்டையால் முதலாம் நாள் பாரசீகர்களின் கை ஓங்கியிருந்தது. மறுநாள் முஸ்லிம்களுக்கு சிரியாப்பக்கமிருந்து உதவி வந்துசேர பாரிய தாக்குதல்களை மேற்கொண்டனர். றுஸ்தும் விரண்டோடினான். துரத்திச்சென்ற ஹிலால் பின் அல்கமா அவனைக்கொன்றார். சுமார் 30,000 பாரசீக வீரர்கள் கொல்லப்பட்டனர். ஏராளமான குதிரைகளும் பொருட்களும் முஸ்லிம்கள் வசமாகின. முஸ்லிம்கள் சார்பில் சுமார் 8000 பேர் ஷஹீதாகினர். முன்பு பொய் நபியாக வாதிட்ட துலைஹா முஸ்லிம்கள் சார்பில் போரிட்டு காயமுற்றார்.

இவ்யுத்தம் ஆரம்பமாகுமுன் தளபதி றுஸ்தும் முஸ்லிம் தளபதியிடம் ஒரு தூதரை அனுப்புமாறு வேண்டினார். றப்யீ பின் ஆமிர் என்ற தோழரை அவர் அனுப்பிவைத்தார். தங்கத்தலையணை, பட்டுமெத்தை, மாணிக்கம், வைடூரியம் பிரகாசிக்க தங்கக்கட்டிலிலே தளபதி றுஸ்தும் அமர்ந்திருந்தார்.

றப்யீ அவர்களோ தமது வாள், கவசம் உடன் குதிரையில் சென்று சிம்மாசனத்தின் பக்கத்தில் போய் இறங்கினார். ஆயுதத்தோடு அவர் செல்ல முற்படுகையில் ஆயுதங்களை வைத்துவிட்டுச் செல்லுமாறு கேட்கப்பட அவர் மறுத்தார். நான் வேண்டுமென்று வரவில்லை நீங்கள் அழைத்தே வந்துள்ளேன். நீங்கள் விரும்பினால் இப்படியேதான் வருவேன், இல்லையென்றால் போய்விடுகின்றேன் என்றார். இதனை அவதானித்துக்கொண்டிருந்த தளபதி அவரை அனுமதியுங்கள் என்றான். தனது ஈட்டியை அவர்களின் படாடோப விரிப்பில் ஊண்டியவராகச்சென்று அமர்ந்தார். தளபதியிடம் "படைப்பை வணங்குபவர்களை படைத்தவனை வணங்குபவர்களாக மாற்றுவதற்கும் சுருங்கிய உலகை விட்டு விரிந்த உலகிற்கும் மார்க்கங்களின் அநியாயத்தை விட்டும் இஸ்லாமிய நீதியின் பக்கம் அழைக்கவும் அவனது மார்க்கத்தின் பால் மக்களை அழைக்கவும் நாம் அனுப்பப்பட்டுள்ளோம். அதனை ஏற்றுக்கொண்டால் நாம் சென்று விடுவோம். ஏற்காவிட்டால் நாம் சண்டையிடுவோம். இவ்வாறு அங்கு கர்சித்தார் வீரச்சிங்கம் றப்யீ பின் ஆமிர் அவர்கள். "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதிஸிய்யாப்போரின் தோல்வி பாரசீக ஆட்சியின் முடிவின் ஆரம்பமாக அமைந்தது. ஈராக்கிய மக்கள் இஸ்லாத்தைத் தழுவவும் வாய்ப்பை ஏற்படுத்தியது. பாரசீக தலைநகர் மதாயினை வெல்வதற்கும் ஒரு மானுஷீக உற்சாகத்தை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தியது.

## மதாயின்

பாரசீக ஆட்சியின் தலைநகரம் மதாயின். அங்கு ஹிஜ்ரி 16ல் நடைபெற்ற சண்டையில் அரசன் யஸ்தஜர்த் தோற்கடிக்கப்பட்டான். சுமார் இரண்டு மாதங்கள் அவனது கோட்டை முற்றுகையிடப்பட்டதால் தப்பியோடுவதைத்தவிர அவனுக்கு வேறு வழியிருக்கவில்லை.

இதேபோல் ஹிஜ்ரி 21ல் யஸ்தஜர்த் பாரிய படையெடுப்பொன்றை நஹாவந்து யுத்தத்திற்காக ஏற்பாடு செய்திருந்த போதும் கலீபாவினால் அனுப்பப்பட்ட நு.:.மான் பின் முகர்ரின் தலைமையிலான படையினால் தோற்கடிக்கப்பட்டான். இதன் மூலம் பாரசீகத்தின் பெரும்பகுதி கலீபா உமர்(ரழி) அவர்களின் காலத்தில் இஸ்லாமியக்கொடியின் கீழ் வந்தது.

## ரோம இராஜ்யத்திலே

கலீபா அபூபக்கர்(ரழி) அவர்களின் அந்திமக்காலத்தில் நடந்த "யர்மூக்" சண்டையில் முஸ்லிம்கள் பெருவெற்றியைப் பெற்றதைத் தொடர்ந்து முஸ்லிம்களின் வீரத்தன்மை ரோம ராஜ்யத்தில் பேசப்படும் விடயமாக மாறியது. இஸ்லாமியப்படை முன்னால் தாம் நின்று பிடிக்க முடியாது என்ற நிலையையும் உருவாக்கியது.

கலீபா உமர் (ரழி) காலத்தில் டமஸ்கஸ், ஹிம்மஸ், பஹ்ல், கின்னிஸ்றீன், அஜ்னாதீன் போன்ற பகுதிகள் இஸ்லாத்தின் கீழ் வந்தன.

## பைத்துல் முகத்தஸ்

அஜ்னாதீன் என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் முஸ்லிம் படை பெருவெற்றி பெற்றதைத்தொடர்ந்து ரோமப்படைகள் பைத்துல்முகத்தஸை நோக்கி ஓடிவந்தன.

முஸ்லிம்களின் தளபதி அம்றுப்னுல்ஆஸ் (ரழி) அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஜ்னாதீனில் பெற்ற வெற்றியைத்தொடர்ந்து பலஸ்தீனத்திலிருந்து கடற்கரை வழியாகவுள்ள ஒவ்வொரு பிரதேசங்களையும் வெற்றிகொண்டவராக வந்தார். காரணம் கரைவழியால் ரோமர்களின் உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காகவே கடலோரங்களை வெற்றிகொண்டுவந்த அவர் கலீபா உமரின் கட்டளையின் பேரில் பைத்துல் முகத்தஸை முற்றுகையிட்டார்.

சுமார் நான்கு மாதங்கள் நீடித்த முற்றுகையைத் தொடர்ந்து அவ்வூர் மக்கள் தாங்கள் சமாதானம் செய்துகொள்ள விரும்புவதாகவும் தங்களின் புனிதமான இந்நகரத்தை அமீறுல்மு.்.மினீன் கைகளிலேயே ஒப்படைக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டனர்.

இச்செய்தியை தளபதி கலீபாவுக்கு அறிவிக்க கலீபா அவர்கள் மதீனாவில் அலி(ரழி) அவர்களை பதில் கடமைக்கு நியமித்துவிட்டு அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப்(ரழி) சகிதம் பைத்துல்முகத்தஸ் நோக்கி வரும் போது "ஜாபியா" எனும் இடத்துக்கு வருமாறு தனது தளபதிகளுக்குக்கட்டளை இட்ட ர்கள். இதன் பிரகாரம் யஸீத் பின் அபூசுப்யான், அபூஉபைதா, காலித் பின் வலீத் ஆகியோர் அங்கு வந்து சேர்ந்தனர். அங்கு ஒரு பிரசங்கத்தை நிகழ்த்திய பின் பைத்துல்முகத்தஸ் நோக்கி வந்தார். ஹிஜ்ரி 15ல் கலீபாவிடம் இந்நகரம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் கலீபா அங்குள்ள கிறிஸ்தவ மக்களுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இதன்மூலம் அவர்களது மதம், சொத்து, உயிர், உரிமை அனைத்தும் பாதுகாக்கப்படுமென்றும் அவர்கள் இஸ்லாமிய அரசுக்கு "ஜிஸ்யா" எனும் தலைவரி செலுத்த வேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

## மஸ்ஜிதுல் அக்ஸாவிலே

நபி (ஸல்) அவர்கள் மி.்.ராஜ் சென்ற இரவு எந்த வாசலால் மஸ்ஜிதில் நுழைந்தார்களோ அதே வாசலால் நுழைந்து மிஹ்றாபு தாவூத் எனுமிடத்தில் 'தஹிய்யதுல் மஸ்ஜித்' தொழுதார்கள். பின்னர் சுப்ஹுை தொழுவித்தார்கள். முதல் ரகஅத்தில் "சாத்" எனும் அத்தியாயத்தை ஓதி "சஜதா" செய்ததுடன் இரண்டாம் ரகஅத்தில் சூறத்துல் "இஸ்றாஉ" வை ஓதினார்கள்.

## எகிப்து வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகன்று விரிந்த ரோம இராஜ்யத்தின் ஒரு பிராந்தியமாக எகிப்து திகழ்ந்தது. அதன் ஆட்சியாளர்கள் வரிக்கு மேல் வரிவைத்து மக்களை வதைத்துக்கொண்டிருந்தனர். ஒருவர் மரணமடைந்தால் அவரை அடக்கம் செய்வதற்கும் வரி செலுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அம்மக்களுக்கு. கைசர் மன்னனின் கொடுமையிலிருந்து விடுபட வேண்டுமென்ற தேவை மக்களுக்கு. டமஸ்கஸ் முதல் ரோம ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளில் இஸ்லாமியர்கள் ஆட்சியைப் பிடித்துள்ளமையும் அவர்களின் நீதி, நேர்மையான ஆட்சியையும் கேள்வியுற்ற மக்கள் நமக்கும் இந்த ஆட்சி ஏற்படாதா என ஆவல் கொண்டிருந்தனர்.

கலீபா உமர் (ரழி) அவர்கள் பலஸ்தீன் வந்திருந்த போது தளபதி அம்றுப்னுல் ஆஸ் (ரழி) அவர்கள் எகிப்தை வெற்றிகொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள். கலீபா முதலில் இதற்கு சம்மதிக்கவில்லை. ஆனால் எகிப்தின் வெற்றி மூலமே டமஸ்கஸ் மேலும் சிரியப்பிரதேசங்கள், பலஸ்தீன் வெற்றிகளை உறுதிப்படுத்த முடியும். இல்லையேல் எகிப்தின் மூலம் அவைகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனக்குறிப்பிடப்பட்டதைக் கவனத்தில் கொண்ட கலீபா அதற்கு அனுமதி வழங்கியதுடன் நாலாயிரம் போர் வீரர்களையும் அம்றுப்னு ஆஸ் தலைமைக்கு வழங்கினார்.

தமது படையினருடன் சினாய் மலைக்குன்றுகளைக் கடந்து வந்த தளபதி அம்றுப்னுஆஸ் முதலில் "அறீஸ்" என்ற இடத்தை ஹிஜ்ரி 18ல் கைப்பற்றினார். இங்கு எவ்வித எதிர்ப்பும் காட்டப்படவில்லை. இங்கிருந்த கோட்டைகளும் ஊறுதியானதாக அமையவில்லை. அங்கு வெற்றியை உறுதிப்படுத்திய பின் அங்கிருந்து பழைமைவாய்ந்த நகரமான "அல்-பர்மா" வை நோக்கிச்சென்றார். கோட்டைகள், தேவாலயங்கள் நிறைந்த நகரம் அது. அதன் கடற்கரையிலே ஒரு துறைமுகமும் இருந்தது. எகிப்தின் திறவுகோலாக இந்நகரம் திகழ்ந்தது. ஒரு மாதம் வரை முற்றுகை நீடித்தது. ஹிஜ்ரி 19 முஹர்ரம் மாதம் "பர்மா" முஸ்லிம்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இவ்வெற்றிக்கு உள்ளூர் மக்களும் ஆதரவாக அமைந்தனர்.

பல்பைஸ், மஜ்தல், உம்முதனீன் போன்ற பிரதேசங்களையும் வெற்றிவாகை சூடி வந்த நிலையில் மேலும் படையினர் தேவை என்பதை கலீபாவுக்கு அறிவித்தார் தளபதி. சுபைர் பின் அவாம்(ரழி), உபாதத் பின் சாமித்(ரழி), மஸ்லமா(ரழி), மிக்தாத் (ரழி) ஆகிய நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட சஹாபாக்களுடன் 4000 வீரர்களை கலீபா அனுப்பிவைத்தார்.

## பாபிலியோன் கோட்டை முற்றுகை

ஹிஜ்ரி 20ம் ஆண்டு அம்றுப்னுல் ஆஸ்(ரழி) தலைமையிலான படை பாபிலியோன் கோட்டையை முற்றுகையிட்டது. ஏழு மாதங்களாக இம்முற்றுகை நீடித்தது. கோட்டை முஸ்லிம்கள் கைவசமாகும் எனப்பயந்த மன்னன் முகவ்கிஸ் அம்றுப்னுல் ஆஸ்(றழி) அவர்கட்கு தூதனுப்பி சமாதானத்துக்கான தனது விருப்பத்தை வெளியிட்டார். முகவ்கிஸின் தூதுவர்கள் வந்த போது

1- நீங்கள் இஸ்லாத்தில் நுழையுங்கள். எமது சகோதரர்களாக மாறுவீர்கள்.
2- இல்லையென்றால் நீங்கள் ஆள்வரி செலுத்த வேண்டும்.
3- அதற்கும் உடன்படவில்லையென்றால் யுத்தம்தான்.

என்ற செய்தியை அம்றுப்னுல் ஆஸ்(ரழி) அனுப்பிவைத்தார். முகவ்கிஸ் தனது தூதுவர்களிடம் முஸ்லிம்களின் நிலை எவ்வாறுள்ளது? எனக்கேட்க அவர்கள் "வாழ்வதைவிட மரணிப்பதை மிகவும் விரும்புகிறார்கள். பெருமையை விடப்பணிந்து செல்வதை விரும்புகிறார்கள். உலகத்தைப்பற்றிய எந்த ஆசையும் அவர்களிடம் கிடையாது. பூமியிலேயே இருக்கிறார்கள். அவர்களின் தலைவரும் அவர்களில் ஒருவர். உயர்ந்தவர், தாழ்ந்தவர்என்ற வித்தியாசமோ அடிமை, எசமான் என்ற பாகுபாடோ அவர்களிடம் கிடையாது. தொழுகை நேரம் வந்தால் நீரால் கழுவி விட்டு எல்லோரும் தொழுகிறார்கள். அதில் மிகவும் பயபக்தியாக உள்ளனர்." என்றனர்.

இவ்வார்த்தையைக் கேட்டுப்பயந்த முகவ்கிஸ் பேச்சுவார்த்தை நடத்த இணங்கி முஸ்லிம் தரப்பிடம் பேசுவதற்கு ஆளனுப்புமாறு வேண்ட உபாதத் பின் ஸாமித்(ரழி) அவர்களைப் பேச்சாளராகக்கொண்டு பத்துப்பேரை அம்றுப்னுல் ஆஸ் (ரழி) அனுப்பிவைத்தார். அவர்களிடம் மேற்கூறிய மூன்று தெரிவுகள் தவிர்ந்த நான்காவது ஒன்றைக்கூறுமாறு கேட்க உபாதா அவர்கள் வானம், பூமி அனைத்தினதும் இறைவன் மீது ஆணை, இது தவிர்ந்த வேறு தேர்வு கிடையாது என மறுத்துவிட்டார். அப்போது முகவ்கிஸ் தமது மக்களிடம் இம்மூன்றிலொன்றை நாம் ஏற்காவிடின் இதைவிட மோசமானதொன்றைப் பெறவேண்டும் எனக்கூறி பேரரசன் ஹிரக்லுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபற்றி எழுதினார்.

சமாதானத்தை ஹிறக்ல் விரும்பாமல் மறுத்து சண்டைக்கு உத்தரவிட்டபோதும் அதனை முகவ்கிஸ் ஏற்காமல் சமாதானத்தைத் தெரிந்தெடுத்தார்.

## அலக்ஸாந்திரியா வெற்றி

LENDING SECTION

எகிப்தின் முக்கிய நகரங்களில் அலக்ஸாந்திரியாவும் ஒன்று. ரோம சாம்ராஜ்யத்தின் இரண்டாவது தலைநகரம் அது. உலகின் முக்கிய வர்த்தக கேந்திர நிலையம். இந்நகர் முஸ்லிம்கள் கையில் வீழ்ந்தால் எகிப்தில் இனி அவர்களின் ஆட்சியே இருக்காது என்பதால் பாரிய படையெடுப்புக்கு உத்தரவிட்டான் மன்னன் ஹிறக்ல். நகரின் வாசல்களை மூடி பாதுகாப்பு அரண்களை அமைத்துப்பாதுகாத்தனர் அவனின் படையினர்.

பாபிலியொன் நகரை வென்ற முஸ்லிம் படையினர் அலக்ஸாந்திரியா நோக்கி வந்தனர். வழியில் இருந்த கிராமங்களை வெற்றி கொண்டு வந்தனர். அம்றுப்னுஆஸ் (ரழி) அவர்களின் புதல்வன் அப்துல்லா தலைமையில் வந்த இப்படையில் 12,000 வீரர்கள் இருந்தனர். சுமார் 50,000 பேர் கொண்ட ரோமப்படை இவர்களை எதிர்க்கத்தயாராகவிருந்தது. சுமார் 4 மாதம் முற்றுகைக்குள்ளான ரோமப்படை பின்னர் சமாதானத்துக்கு இணங்கியது. இதனால் எகிப்தின் சகல பிரதேசங்களும் கலீபா உமர் (ரழி) காலத்தில் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

## நீதித்துறை

நீதிக்கோர் உமர் எனப்புகழப்படுபவர் அவர். அவரது ஆட்சியில் நீதித்துறை சிறந்து விளங்கியது. இவரது காலத்தில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்கும் நீதிபதிகளாகப் பின்வருவோரை நியமித்தார்.

1- அபுத்தர்தாஉ (ரழி) மதீனா
2- சுறைஹ் பின் ஹாரிஸ் (ரழி) கூபா
3- அபூமூசல் அஷ்அரி (ரழி) பஸரா
4- கைஸ் பின் அபில் ஆஸ் சஹ்மி (ரழி) எகிப்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பிராந்தியங்களில் அதற்குரிய கவர்னர்களே நீதிபதிப்பொறுப்பையும் ஏற்றுச்செயற்பட்டனர்.

நீதிபதிக்கென செயலாளர்களோ அல்லது பதிவு ஏடுகளோ இருக்கவில்லை. முறைப்பாடுகள் இப்படித்தான் அமைய வேண்டும் என்ற முறையோ, ஒழுங்கோ இருக்கவில்லை. நிலைமைக்கேற்ற முறையில் இது மேற்கொள்ளப்பட்டது.

## பொதுச்சொத்தும் பேணுதலும்

கலீபா உமர் (ரழி) அவர்கள் காலத்தில் இஸ்லாமிய அரசு செல்வச்செழிப்புள்ள ஓர் அரசாக மாறிய போதும் பிராந்தியங்களிருந்து வரிகளும் பொருட்களும் வந்து குவிந்த போதும் வறுமை வாழ்க்கையையும் பொதுச்சொத்தில் மிகப்பேணுதலையும் கடைப்பிடித்த ஒருவராக கலீபாவைப் பார்க்க முடிகின்றது. ஒரு சாதாரண பிரஜையின் வாழ்க்கைத்தரத்தை விட ஆட்சித்தலைவரின் வாழ்க்கைத்தரம் எவ்விதத்திலும் உயர்ந்ததாக இருக்கக்கூடாது என்பதில் அவர் மிகவும் கண்டிப்பாக இருந்தார். அரச சொத்திலிருந்து அவர் சம்பளமாகப்பெற்றது அவரது குடும்ப வாழ்க்கைக்குப் போதவில்லை. சிலவேளை திறைசேரியிலிருந்து அவர் கடனாகப்பெற்று குறிப்பிட்ட திகதிக்கு அதனை திருப்பிக்கொடுக்க முடியாமல்போகும் போது சம்பளத்தை எடுத்து கடனை இறுத்துவிட்டு செலவுக்கு கஷ்டப்படுவார்.

இவரது குடும்பக்கஷ்டங்களை அறிந்த சில நபித்தோழர்கள் குறிப்பாக உதுமான், அலி, தல்ஹா, சுபைர் ஆகியோர் இவரது சம்பளத்தை அதிகரித்துக்கொள்ளச்சொல்ல வேண்டுமென முடிவெடுத்தனர். நேரடியாகக்கூறுவதற்குப் பயந்த அவர்கள் அவரது மகளும் நபி தூதர் (ஸல்) அவர்களின் மனைவியுமான ஹப்ஸா (ரழி) அவர்களிடம் வந்து விடயத்தைக்கூறியதுடன் தங்கள் பெயர்களை கூறவேண்டாமெனவும் வேண்டினர்.

மகளார் தந்தையிடம் விடயத்தைக்கூறவும் அவர் கோபப்பட்டார். யார் இவ்வாறு கூறியதென்று கேட்டு ஆத்திரப்பட்டார். பின்னர் மகளிடம் கேட்டார் நபி (ஸல்) அவர்களிடம் எத்தனை உடுப்பிருந்தது? இரண்டு உடுப்புகள்தான்! அவற்றைத்தான் தூதுக்கோஷ்டிகள் சந்திக்க வரும்போதும் பயன்படுத்தினார்கள் என்றார் ஹப்ஸா. அவர்கள் சாப்பிட்ட உயர்வான உணவு எது? கேட்டார் உமர்! நெய் கலந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY

கோதுமை ரொட்டி என்றார் மகள். அவர்களிடம் எத்தகைய விரிப்பு இருந்தது? தடிப்பான ஒரு போர்வை என்றார் ஹப்ஸா. உடனே உமர் (ரழி) , உன்னிடம் கூறியவர்களிடம் சொல். எனது உதாரணம் எதைப்போன்றதென்றால் மூவர் இருந்தனர். முதலாமவர் ஒரு வழியில் சென்றார். அதனை இரண்டாமவர் பின்பற்றினார். மூன்றாவது வந்தவர் அதே வழியைப் பின்பற்றினால் மோட்சமடைவார். வேறு வழியை இவர் பின்பற்றினால் நற்பேறை அடையமாட்டார். எனக்குறிப்பிட்டு கஷ்டமான வாழ்வே தனக்குரியது எனத்தேர்ந்து கொண்டார் கலீபா உமர் (ரழி) அவர்கள்.

## தனது புதல்வர்களாயினும்

கலீபாவின் இரு புதல்வர்களான அப்துல்லாஹ்வும், உபைதுல்லாஹ்வும் யுத்தத்திற்காக ஈராக் சென்றிருந்தனர். திரும்பும்போது பஸராவின் கவர்னராகவிருந்த அபூமூஸல் அஷ்அரீ (ரழி) அவர்களைச் சந்திக்கச் சென்றனர். அவர்களிடம் அமீறுல் மு.்.மினுக்கு அனுப்பவேண்டிய பணம் உள்ளது. அப்பணத்தை எடுத்து நீங்கள் இங்குள்ள பொருட்களை வாங்கிக்கொண்டுபோய் மதீனாவில் விற்றுவிட்டு இலாபத்தை எடுத்து விட்டு முதலை கலீபாவிடம் கொடுக்கலாம் என் ஆலோசனை கூறினார் அபூமூஸா. இருவரும் சம்மதித்தனர். பின்னர் கலீபாவுக்கு இருவரிடமும் பணம் கொடுக்கப்பட்டுள்ளதாக எழுதினார்.

இருவரும் பொருட்களை வாங்கிக்கொண்டுவந்து விற்றுவிட்டு கலீபாவிடம் பணத்தை கொடுக்கச்சென்றனர். விடயத்தை கேள்வியுற்ற கலீபா படையினர் எல்லோருக்கும் கவர்னர் கடன் கொடுத்தாரா? எனக்கேட்டுவிட்டு முதலையும் இலாபத்தையும் கையளியுங்கள் எனக்கட்டளையிட்டார் தந்தை. அப்துல்லா எதுவும் பேசாத போதும் உபைதுல்லா “ இப்பணம் குறைந்திருந்தால் அல்லது அழிந்திருந்தால் நாங்கள் இருவரும்தானே பொறுப்பு. இலாபத்தைக்கேட்க வேண்டாம்” என்றார் அவர். மீண்டும் கலீபா பணத்தையும் இலாபத்தையும் ஒப்படையுங்கள் என்று கூற உபைதுல்லா தந்தையிடம் வாதிட சபையிலே இருந்த ஒருவர் “ கலீபா அவர்களே இதனைக் “கிறாள்” வியாபார முறையாகக்கருதினால் என்ன?” எனக்கேட்டார். அதனை ஏற்றுக்கொண்ட கலீபா அரசுக்கு அவர்களின் இலாபத்தில் சரி அரைவாசியைப் பெற்றுக்கொண்டார். “கிறாள்” என்றால் ஒருவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY

பணத்தைக்கொடுக்க மற்றவர் வியாபார முயற்சியில் ஈடுபடல். இலாபத்தை இருவருமாகப்பிரித்துக்கொள்ளல்.

## உம்மு குல்தூம் பெற்ற அன்பளிப்பு

உரோம அதிபதியுடன் நல்லுறவு நிலவிய காலமது. உமர்(ரழி) அவரோடு கடிதத்தொடர்புகளை பேணிவந்தார். ஒரு முறை கலீபாவின் கடிதங்களுடன் தூதுவர் சென்ற போது அவரிடம் கலீபாவின் மனைவி உம்மு குல்தூம் கலீபாவுக்குத்தெரியாமல் அந்நாட்டு அரசிக்கு சில அன்பளிப்புக்களையும் சேர்த்து அனுப்பியிருந்தார். வாசனைத்திரவியங்கள், பெண்களின் பொருட்கள் கொண்ட அன்பளிப்புக்களைப்பெற்றுக்கொண்ட அரசி அதே தூதுவரிடம் உம்மு குல்தூமுக்கு விலையுயர்ந்த மாலையொன்றை அன்பளிப்பாகக் கொடுத்து அனுப்பியிருந்தார்.

தூதுவர் மாலையுடன் வந்ததை அறிந்த கலீபா மாலையை கைப்பற்றிவிட்டு பொதுமக்களை மஸ்ஜிதுக்கு அழைத்து நடந்த விடயத்தை மக்களுக்குக்கூறி அவர்களின் ஆலோசனையைக்கேட்டார். வந்திருந்த மக்கள் அவருக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டதை நாங்கள் கவனிக்கத்தேவையில்லையே என்ற தொனியில் கருத்துத்தெரிவித்தனர். எனினும் கலீபா 'சென்ற தூதுவர் அரசாங்க (பொதுமக்களின்) தூதர்; தபால் சேவையும் அரசுடையது இதிலே தனிப்பட்ட விடயம் கவனிக்க முடியாது' எனக்கூறி வந்த மாலையை அரச உடமையாக மாற்றினார்.

கலீபா எப்போதும் ஒரு விடயத்தை பொதுமக்களைச் செய்யவேண்டாமெனக்கூறினால் தனது குடும்பத்தாரை அழைத்து நான் பொதுமக்களை இதை, இதைச் செய்யவேண்டாமெனப் பணித்துள்ளேன். இறைச்சியைப் பறவைகள் பார்ப்பதுபோல் உங்களைப் பொதுமக்கள் கவனிப்பார்கள். உங்களில் யாரில் நான் தடுத்திருப்பவற்றைச் செய்தால் இரு மடங்கு தண்டனை வழங்குவேன் எனக்கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L 10910

## பிறர் கருத்துக்கு இடம்

உமர் (ரழி) அவர்களின் காலத்தில் பல்வேறு நாடுகள் பிடிபட்டு பணப்புழக்கம் மக்கள் மத்தியில் அதிகரித்ததால் பெண்களுக்கு திருமணத்திற்காக வழங்கும் "மஹர்" தொகையும் அதிகரித்தது. இத்தொகை அளவு கடந்து செல்லவே இதனைக்கட்டுப்படுத்த முயன்றார் கலீபா. அவ்வேளை மஸ்ஜிதின் தொலைவிலிருந்த ஒரு பெண் இறைவன் அல்-குர்ஆனிலே " பெண்களுக்கு பொற்குவியலைக் கொடுக்குமாறு கூறும்போது நீரோ சில நாணயங்கள் கொடுப்பதைத் தடுக்க வருகிறீரா? எனக்கேட்டார். உடனே கலீபா அப்பெண் கூறுவது சரி. உமர்தான் தவறிழைத்துவிட்டார்," எனக்கூறி தனது கருத்தை வாபஸ்பெற்றார் பார் போற்றும் ஆட்சியாளர் உமர் (ரழி) அவர்கள்.

மற்றொரு நாள் பிரசங்கம் நிகழ்த்தும் போது மனிதர்களே! நான் சரியாக நடந்தால் எனக்கு உதவி செய்யுங்கள்! நான் பிழையாக நடந்தால் என்னைத்திருத்துங்கள் என்றதும் மஸ்ஜிதின் பிற்பகுதியில் இருந்த ஒருவன் எழுந்து "உம்மிடத்திலே பிழையைக்கண்டால் எமது வாளால் திருத்துவோம்" என்றான். இந்தளவுக்கு பேச்சுச்சுதந்திரம் அவரது ஆட்சியில் மக்களுக்கிருந்தது.

## கலீபா கொல்லப்படல்

ஹிஜ்ரி 23 துல்ஹஜ்ஜி பிறை 23 சுப்ஹு தொழுவிப்பதற்காக நிற்கின்றார் கலீபா. அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய அபூலு..லுஆ பைறூஸ் என்ற நெருப்பு வணங்கி இரு தலையுள்ள குத்துவாள் ஒன்றைக்கொண்டு சென்று ஆறு குத்துக்களை அவர்கள் மீது பாய்ச்சுகின்றான். அவனைப்பிடிக்க முயன்றவர்கள் 13 பேர் அவனது குத்துக்கு இலக்காகிறார்கள். அப்துர் ரஹ்மான் பின் அவ்ப்(ரழி) தனது போர்வையை எறிந்து அவனைப்பிடிக்க முயன்றபோது தானும் தற்கொலை செய்துகொண்டான்.

தாக்குதலுக்கு இலக்கான கலீபா அவர்கள் அப்துர் ரஹ்மான் பின் அவ்பு அவர்களைப்பிடித்து தொழுகையை நடத்துமாறு கோருகிறார்கள். பின்னர் மயக்கமடைகிறார்கள். முன் வரிசைகளில் நின்றவர்களைத்தவிர மஸ்ஜிதில் நிரம்பியவர்கட்குத்தெரியாமல் தொழுகை முடிகிறது. மயக்கம் தெளிந்த கலீபா தொழுகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்துவிட்டதா? எனக்கேட்க ஆமெனக்கூறப்பட்டதும் வுளூச்செய்துகொண்டு தொழுதார்கள். தன்னைக்குத்தியவன் யாரென கலீபா கேட்க முஹீரத்து பின் ஷு.்.பாவின் அடிமையான அபூலு.்.லுஆ எனக்கூறப்பட்டபோது அல்லாஹ்வை சுஜூதே செய்திராத ஒருவன் என்னைக் குத்தியதையிட்டு நான் அல்லாஹ்வைப் புகழ்கின்றேன் என்றார் கலீபா.

அன்சாரியான ஒரு மருத்துவர் வந்து கலீபாவுக்கு பால் புகட்டியபோது அப்பால் காயத்தினூடாக வெளியேற இனிப்பிழைப்பது கடினம் என மருத்துவர் தெரிவிக்க கூடியிருந்தவர்கள் அழ ஆரம்பித்தனர். அழுகைச் சத்தத்தைக்கேட்ட கலீபா இவ்விடத்தில் அழாமல் வெளியேறுங்கள் அதன் ஆட்கள் அழுவதால் மையித் வேதனை செய்யப்படும் என்ற நபிமொழி உங்களுக்குத் தெரியாதா? என்றார்கள். பின்னர் தனது மகன் அப்துல்லாஹ்வை அழைத்து தனது கடன்களை அடைக்குமாறும் ஆயிஷா (ரழி)விடம் சென்று அவரது வீட்டில் நபி(ஸல்) அவர்கட்குப் பக்கத்தில் தன்னை அடக்க அனுமதி கேட்குமாறும் கூறினார். தனக்காக தான் வைத்துள்ள இடத்தை உமர் (ரழி) அவர்கட்கு வழங்குவதாக ஆயிஷா (ரழி) கூறினார்.

## புதிய கலீபா

உமர் (ரழி) அவர்கள் மரணிக்கப்போகின்றார் என்பதை அறிந்த ஸஹாபாக்கள் புதிய ஒரு கலீபாவைத் தெரியுமாறு அவரைக்கேட்டார்கள். இதனை மகன் அப்துல்லா அவரிடம் தெரிவித்தபோதும் தான் அப்பொறுப்பிலிருந்து விடுபடவே கலீபா விரும்பினார். எனினும் வற்புறுத்தலின் பேரில் அல்லாஹ்வின் தூதரால் சுவனவாதிகள் என்று நன்மாராயம் கூறப்பட்ட உதுமான் (ரழி),அலி(ரழி) அப்துர் ரஹ்மான் பின் அவ்பு (ரழி), தல்ஹா (ரழி), சுபைர் (ரழி), ச.்.துபின் அபீவக்காஸ் (ரழி) ஆகியோர்களிலிருந்து ஒருவரை இப்பதவிக்கு மூன்று நாட்களுள் தெரிவு செய்யப்படவேண்டுமெனவும் தனது மகன் அப்துல்லா (ரழி) தெரிவுக்குழுவில் ஆலோசகராக இடம்பெறவேண்டுமெனவும் அவர் கலீபாவாகத் தெரிவு செய்யப்படக்கூடாதெனவும் கலீபா குறிப்பிட்டார். அவ்வேளை சுவனவாதியென நன்மாராயம் கூறப்பட்ட சயீத் பின் ஸைத் (ரழி) அவர்களை கலீபா இக்குழுவில் நியமிக்கவில்லை. அவர் கலீபா உமரின் கபீலாவைச் சேர்ந்தவர் என்பதற்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MARUTHAMUNAI
PUBLIC LIBRARY

தொழுகை நடத்துவதற்காக பனூஜத்ஆன் அவர்களால் உரிமையிடப்பட்ட அடிமை சுஹைப் நியமிக்கப்பட்டார்.

## மரணம்

மூன்று நாட்கள் நோய்வாய்ப்பட்டிருந்த கலீபா ஹிஜ்ரி 23 துல்ஹஜ் மாதம் 27 புதன்கிழமை தனது 63ம் வயதில் காலமானார்கள். மகன் அப்துல்லா குளிப்பாட்டி கபனிட சுஹைப் அவர்கள் தொழுகை நடத்தினார்கள்.

## கொலைகாரன்

கூபாவின் கவர்னராகவிருந்த முஹீரத் பின் சு.'.பா கலீபாவிடம் தனது பணியாளான அபூலு.'.லுஆ மதீனாவுக்கு வந்து வேலைசெய்ய அனுமதிக்குமாறு வேண்டினார். அவன் தேர்ச்சி பெற்ற தச்சனும் கைவேலைப்பாடுகளில் கைதேர்ந்தவனுமாவான்.

## கலீபா உமர் ஒரு கண்ணோட்டம்

சமூகத்தில் தானும் ஒரு நபரே எனக்கருதிய கலீபா மற்றப்பிரஜைகளை விட தனக்கு எவ்வித சிறப்பும் கிடையாது எனக்கருதினார். அவரது தலைமைத்துவத்தை மக்கள் ஏற்றனர். அவர்அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தார். மக்களின் பொறுப்பு தன்மீது சுமத்தப்பட்டுள்ளது எனக்கருதிய அவர் அவர்கள் பற்றியே சதாவும் சிந்தித்தார். அம்மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சுருக்குதல் நாளை இறுதி நாளில் அல்லாஹ்விடம் கேள்விக்குட்படுத்தப்படும் எனப்பயந்தார். இதனால் குறைந்த தூக்கம், எளிமையான உணவு, சாதாரண ஆடை போன்ற எளிமையான வாழ்க்கை. இறைவனைப்பயந்து அழுவார். அதிகம் தொழுபவரும் நோன்பு பிடிப்பவரும் கலீபாவான இவரே!

இவரது காலத்தில் பல நாடுகள் பாரிய வெற்றிகொள்ளப்பட்டன. இதனால் நிறையப்பொருட்கள் அரசுக்கு வந்து சேர்ந்தன. இது தனக்கு ஒரு சோதனை எனக்கருதினார். நபிதூதர் அவர்கட்கும் அபூபக்கருக்கும் இப்படி பொருட்கள் குவியவில்லையே! என்னைச்சோதிக்கவே இவ்வாறு கிடைக்கிறது எனக்கூறி அழுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிய உணவை உண்ட அவர் ஒரு கறிக்குமேல் சாப்பிடமாட்டார். ஒரு முறை அவரது மகள் ஹப்ஸா ஒரு கறியை அவருக்குக் கொண்டு வந்தார். அதிலே சொற்பமாக எண்ணெயை ஊற்றினார். ஒரு பாத்திரத்தில் இரண்டு கறியா? நான் உண்ணவேமாட்டேன் என மறுத்துவிட்டார். சிரியாவுக்கு அவர் சென்ற போது விசேடமான உணவுகள் பரிமாறப்பட்டபோது கோதுமை ரொட்டிக்கும் வழியின்றி மரணித்த எமது ஏழை முஸ்லிம்களை நாம் எண்ணிப்பார்ப்பதில்லையா? என காலித் பின் வலீதிடம் கேட்டார். அவர்களுக்கு அல்லாஹ் சுவனத்தை அல்லவா வழங்கியிருப்பான் என காலித் கூறியதும் உமரின் கண்கள் குளமாகின.

ஒட்டுப்போட்ட சட்டை, கிழிந்த தைத்த செருப்பு இதுவே இவரது ஆடைகள். நடுநிசி வரை தொழுகையில் ஈடுபடுவார்.

கவர்னர்கள் தமது கடமைகளில் தவறும்போது அவர்கட்குத் தண்டனை வழங்குவதில்கூட பின்நிற்கமாட்டார். தன் மகனானாலும் தண்டனை வழங்காமல் விடமாட்டார். கவர்னர்களின்நடத்தைகள், உணவுகள், வீடுகளைக்கூட இவர் கவனிப்பார்.ஹஜ்ஜுக்காலத்தில் எல்லாக்கவர்னர்களையும் அழைத்து விசாரிப்பார். மக்கள் கவர்னர் மீது கூறும் முறைப்பாடுகளை விசாரிப்பார்.

அம்றுப்னு ஆஸ் (ரழி) அவர்கள் எகிப்திய கவர்னராக இருந்த போது அவரின் மகன் முஹம்மத் என்பவர் எகிப்திய வாலிபர் ஒருவரை சாட்டையால் அடித்ததுடன் நான் பெரிய இடத்துப் பிள்ளை தெரியுமா? என்றும் கூறினார் இவ்விடயத்தை அவ்வாலிபர் மதீனா சென்று கலீபா உமர் (ரழி) அவர்களிடம் முறையிட்டார்.

அங்கு நடந்த சம்பவத்தை நபித் தோழர்களில் ஒருவரான அனஸ் பின் மாலிக் (ரழி) அவர்கள் விளக்குகின்றார்கள்.

நாங்கள் கலீபா உமரின் சபையில் இருந்தோம்.எகிப்திய வாலிபர் ஒருவர் அங்கு வந்து தான் ஒரு முறைப்பாடு தெரிவிப்பதாகக் கூறினார்.அதனைக் கூறுமாறு கேட்டபோது எகிப்தில் குதிரை ஓட்டப்போட்டி நடந்தது.அதில் ஒரு குதிரை முன்னேறி வந்த போது கவர்னர் அம்றுப்னுல் ஆஸ்(ரழி) அவர்களின் மகன் அது அவருடைய குதிரை என்று ஆர்ப்பரித்தார்.குதிரை அண்மித்ததும் அது என்னுடைய குதிரை என்பது தெளிவானது.அதனை நான் எல்லோரிடமும் கூறினேன்.அவருடைய குதிரை பிந்தி வந்ததால் ஆத்திரமடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்.அவ்வாறு நான் கூறியதும் எனக்கு சாட்டையால் அடித்து விட்டார்.நான் பெரிய இடத்துப் பிள்ளை தெரியுமா என்றும் கூறினார்.இவ்விடயம் கவர்னருக்கு எட்டியவுடன் நான் உங்களிடம் வந்து முறையிட்டு விடுவேன் என்ற பயத்தில் என்னை சிறையில் அடைத்தார். சிறையில் இருந்து விடுவித்த பின்னர் நான் உங்களிடம் வந்துள்ளேன் என்று கூறினார்.

அனஸ் (ரழி) கூறினார்கள் இவ்வாறு அவ்வாலிபன் கூறியவுடன் கலீபா அவர்கள் எகிப்திய கவர்னர் அம்றுப்னுல் ஆஸ் (ரழி) அவர்களுக்கு 'எனது இக்கடிதம் கிடைத்தவுடன் உனது மகன் முஹம்மதை அழைத்துக் கொண்டு இங்கே வாரும்' என எழுதி அனுப்பியவுடன் அந்த வாலிபரை அவர் மதீனா வரும் வரை தங்கியிருக்குமாறு கலீபா கேட்டுக் கொண்டார். கடிதம் கிடைத்ததும் அம்றுப்னுல் ஆஸ் (ரழி) அவர்கள் தன் மகனுடன் மதீனா வந்து சேர்ந்தார்.

அனஸ்(ரழி)அவர்கள் கூறினார்கள்.

நாங்கள் கலீபா உமரின் சபையில் இருந்தோம். அப்பொழுது எகிப்தின் கவர்னர் அம்று இப்னுல் ஆஸ் அவர்கள் மகனுடன் வந்திருந்தார். விசாரணை நடத்திய பின் அவர்கள் எகிப்திய வாலிபன் எங்கே? என்று கேட்டார்கள்.அவர் வந்ததும் அவ்வாலிபனிடம் சாட்டையைக் கொடுத்து 'அந்த பெரிய இடத்துப் பிள்ளையை அடியும்' என்று கூறினார்கள். அவ்வாலிபரோ தனது கோபம் தீருமளவு கடுமையாக அடித்தார்.அவ்வாலிபர் அடிக்கும் போது உமர் (ரழி)அவர்கள் பெரிய இடத்துப் பிள்ளையை அடியும் என்று கூறிக் கொண்டேயிருந்தார். அடித்து விட்டு அவ்வாலிபன் 'எனக்கு அடித்தவரை அடித்து விடடேன்" நான் ஆறுதல் அடைந்து விட்டேன் என்று கூறினார் பின்னர் கலீபா அம்று இப்னுல் ஆஸ் அவர்களைப் பார்த்து அம்ரே! எப்போது மனிதர்களை அடிமைகளாக்கி அடக்கி ஆளத் துணிந்துவிட்டீர்கள்? அவர்களை அவர்களது தாய்மார்கள் சுதந்திரமானவர்களாகவே பெற்றுள்ளனர். இவ்வாறு கலீபா கூறியதும் அம்று இப்னுல் ஆஸ் அவர்கள் நடந்த சம்பவத்தையிட்டு வருத்தம் தெரிவித்தார்.இதனை நான் அறிந்திருக்கவில்லை" என்றும் கூறினார். அந்த எகிப்திய வாலிபரை அழைத்த கலீபா 'இதற்குப் பிறகு உனக்கு ஏதாவது நடந்தால் எனக்கு உடனே எழுது' என்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் குறைகேட்டல்

இரவு வேளைகளில் ஊர்சுற்றி மக்கள் குறை அறிவார். சில வேளைகளில் தமது மனைவிமார்களை அழைத்துச்சென்று பெண்களின் குறைகளைத் தேவைகளை கேட்டறிவார்.

இதே போல் கடைத்தெருக்களில் சுற்றுவார். மக்களிடையே வரும் பிணக்குகளைத் தீர்ப்பார். தொழுது முடிந்த பின் மக்களுடன் இருந்து பேசிக்கொண்டிருப்பார். அவரது வீட்டிலே வாசலோ, காவலாளியோ இல்லாத அளவுக்கு அவரது வீடு எவ்வேளையும் திறந்திருக்கும்.

## திம்மிகளுடன்

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழும் முஸ்லிம் அல்லாதவர்கள் 'திம்மி' கள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் நீதியாக நடத்தப்பட்டனர். அவர்கட்கு எவ்வித அநீதியும் இழைக்கப்படக்கூடாதென கவர்னர்களுக்கும் அறிவித்திருந்தார். அவர்களின் சக்திக்கு மேல் எவ்வித சுமைகளையும் கொடுக்கக்கூடாதென்றும் வேண்டியிருந்தார். சொத்து சுகங்களை அனுபவித்தவர்களாக இவரது ஆட்சியில் அவர்கள் திகழ்ந்தார்கள். முஸ்லிம்கள் என்ன சுதந்திரத்தை அனுபவித்தனரோ எவ்வாறு சொத்து வைத்திருக்க அனுமதிக்கப் பட்டனரோ எவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டனரோ அதே உரிமைகள் திம்மிகளுக்கும் வழங்கப்பட்டன. கண் பார்வையற்ற ஒரு திம்மி பிச்சை வாங்கிச்செல்வதை கலீபா கவனித்தார். கலீபா அம்மனிதரிடம் சென்று அவரது கையைப்பிடித்து,'நீர் எந்த வேதத்தைப் பின்பற்றுபவர்' எனக் கேட்க 'தான் ஒரு யூதன் 'என அவர் கூறினார். உடனே கலீபா அவர்கள் அவரது கையைப்பிடித்துக் கொண்டு தனது வீட்டில் இருந்து சில உதவிகளை அவருக்குக் கொடுத்து விட்டு,திறைசேரி (பைத்துல்மால்) யின் பொறுப்பாளரிடம் இவரை அனுப்பி இவரையும் இவர் போன்றோரையும் நீ பார். நாங்கள் இவர்களுக்கு நீதி வழங்கத் தவறி விட்டோம்.அவர்களின் வாலிபக்காலத்தில் அவர்களிடம் வரி அறவிடுகின்றோம். அவர்கள் முதுமை அடைந்து விட்டால் கவனிக்காமல் வீணே விட்டு விடுகின்றோம். எனவே இவரினதும் இவர் போன்றோரினதும் வரியை நீக்கு' என எழுதி விட்டு பின்னர் இவர் போன்றோருக்கு பொது நிதியிலிருந்து உபகாரச் சம்பள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையொன்றை உருவாக்கினார்கள். இதே கலீபா உமர் (ரழி) அவர்கள் சிரியாவில் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த குஷ்டரோகிகளுக்கு ஸதகாப் பணத்திலிருந்து தர்மப் பணம் வழங்குமாறும் அவர்களுக்கு உணவு வழங்குமாறும் உத்தரவிட்டார்கள்.

## நிருவாக ஒழுங்கு

கலீபா உமர் (ரழி) அவர்களின் ஆட்சியில் கிழக்கிலும் மேற்கிலும் பல நாடுகள் வெற்றிகொள்ளப்பட்டதால் பல்வேறு தொடர்புகளை அது கொண்டிருந்ததாலும் சிறப்பான நிருவாக கட்டமைப்பு ஒன்றை கலீபா ஏற்படுத்தினார்கள்.

❖ வரிமுறை

1- நிலவரி –

யுத்தத்தில் பிடிக்கப்பட்ட வயல் நிலங்களை உரியவர்களிடம் ஒப்படைத்து விளைவில் ஒரு பகுதியை வரியாகப்பெறும் வரிமுறையை கலீபா ஏற்படுத்தினார். நபி தூதர் (ஸல்) அவர்கள் காலத்தில் நடந்த "கைபர்" யுத்தத்தின் பின் இவ்வாறான வரிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

2- ஜிஸ்யா எனும் ஆள்வரி –

இஸ்லாமிய அரசு உயிர் உடமைகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக முஸ்லிம் அல்லாத திம்மிகளிடமிருந்து இந்த வரி அறவிடப்பட்டது. பெண்கள், பிள்ளைகள், முதியோர், ஏழைகள் என்போரிடம் இவ்வரி அறவிடப்படமாட்டாது.

❖ தீவான் எனும் பேரேடு

1- அரசாங்கத்தின் வரவு செலவுகளை பதிவு செய்வதற்காக தீவானுல் கராஜ் எனும் பேரேடும்,

2- படைகளின் பெயர்களை எழுதி அவர்கட்கு கொடுப்பனவுகள் வழங்குவதற்காக தீவானுல் ஜுன்து எனும் பேரேடும்,

3- அரச உதவி பெறுவோரைப்பதிவு செய்வதற்காக தீவானுல் அதா எனும் பேரேடும் கலீபாவினால் உருவாக்கப்பட்டன.

❖ ஹிஜ்ரிக் கலண்டர் அறிமுகம்

கவர்னராக இருந்த அபூமூஸல் அஷ்அரி (ரழி) அரசாங்கத்தின் கடிதங்கள் வரும்போது திகதி குறிப்பிட வேண்டிய அவசியத்தை எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பினார்கள். எனவே கலீபா இது தொடர்பாக ஆலோசனை செய்த போது நபி தூதர் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களை ஏற்படுத்தியதால் அதனையே கலண்டராகக்கொள்ள வேண்டுமென முடிவு எடுக்கப்பட்டது.

## பிராந்திய கவர்னர்கள்

பின்வருவோர் உமர் (ரழி) கால கவர்னர்களாகப் பணிபுரிந்தனர்.

| | |
|---|---|
| மக்கா | நாபி். பின் ஹாரிஸ் அல்-குஸாயீ |
| தாயிப் | சுப்யான் பின் அப்துல்லா தகபி |
| சன்ஆ | ய்.லா பின் முனப்பிஹ் |
| பஸறா | அபூமூஸா அல்.அஷ்அரி |
| கூபா | முஹீறத்து பின் சு்.பா |
| எகிப்து | அம்றுப்னுல் ஆஸ் |
| பஹ்ரைன் | உதுமான் பின் அபில் ஆஸ் |
| சீரியா (டமஸ்கஸ்) | முஆவியா பி ர் அபீசுப்யான் |
| ஹிம்மஸ் | உமைர் பின் ச்.து |

## நகர நிர்மாணம்

கலீபா உமர் அவர்களின் முக்கிய சேவைகளில் நகர நிர்மாணங்களும் ஒன்றாகும். நீர் நிலைகள் மேய்ச்சல் தலங்களுக்கு அண்மித்ததாக இராணுவ முக்கியத்துவம் நிறைந்த இடங்களைத்தேர்ந்தெடுத்து பஸரா, கூபா, புஸ்தாத் போன்ற நகரங்களை நிர்மாணித்தார்கள்.

## இரவில் குறைகேட்டல்

தனது பிரஜைகட்கு ஒரு சிறு குறையும் ஏற்படக்கூடாதென்பதில் கவனம் செலுத்துபவர் கலீபா. இரவு வேளைகளில் நகரத்தைச் சுற்றிப்பார்த்து குறைகேட்டு நிவர்த்திப்பவர் அவர். அவருடைய பணியாள் அஸ்லம் என்பவர் அறிவிக்கிறார். 'நாங்கள் ஒரு நாள் கலீபாவுடன் இரவு வேளையில் வாகிம் என்ற பகுதிக்குச்சென்றோம். அங்கே ஓரிடத்தில் வெளிச்சம் எரிந்துகொண்டிருப்பதை அவதானித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலீபா அங்கே எங்களையும் அழைத்துக்கொண்டு சென்றார். அங்கே ஒரு பெண் அவளோடு இரு பிள்ளைகள். ஒரு பானை அடுப்பிலே போடப்பட்டுள்ளது. அப்பிள்ளைகள் இரண்டும் அழுதுகொண்டிருந்தன. அப்பெண்ணுக்கு ஸலாம் கூறிய கலீபா கிட்ட வரலாமா? என்று கேட்க அனுமதி வழங்கப்படவே அவ்விடம் வந்த கலீபா இப்பிள்ளைகள் ஏன் அழுகிறார்கள் எனக்கேட்க, பசியால் என்றாள் அம்மாது. பானையினுள் என்ன? எனக்கேட்க வெறும் தண்ணீர்தான் பிள்ளைகளை அமைதிப்படுத்துவதற்காக சும்மா கொதிக்க வைத்துக்கொண்டிருக் கின்றேன் என்ற அப்பெண் இந்த உமரினால் என்ன பயன் என்று குறைபடவே உமர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமெனக்கேட்க அவர் எங்கள் பொறுப்பைச்சுமந்தவர் எம்மை மறந்துள்ளார் என்றார் அப்பெண். உடனே கலீபாவுடன் நாங்கள் மாக்களஞ்சியத்திற்கு சென்று மாமூடையும் வெண்ணைக்கட்டியும் எடுத்தோம். கலீபா அவைகளைத் தனது தோளில் ஏற்றிவிடச்சொன்னார். நான் தூக்குகிறேனே என்றேன். கியாமத்து நாளில் எனது பாவங்களை நீ சுமப்பீரா எனக்கேட்க அவர்மீது ஏற்றிவிட்டேன். ஓடோடி அப்பெண் இடத்துக்கு சுமந்துகொண்டு வந்தார். நான் ஓடோடிப் பின் தொடர்ந்தேன். மூடையிலிருந்து மாவை எடுத்துக்கொடுத்து அப்பானையினுள் போடச்சொல்லி அடுப்பை கலீபா ஊதினார். கலீபாவின் தாடிக்கிடையில் புகை வெளிவருவதை நான் பார்த்தேன். சமைத்து முடிந்ததும் அப்பெண்ணிடத்திலே பிள்ளைகட்கு உணவைக்கொடுக்குமாறு கலீபா கேட்டார். அவர்கள் சாப்பிட்டு முடியும் வரை கலீபா அவ்விடத்திலேயே இருந்தார். உணவு உண்ட பின் மீதிப்பொருட்களை அவர்களிடமே கொடுத்துவிட்டு வரும்போது அப்பெண் உங்களுக்கு அல்லாஹ் நற்கூலி தருவானாக, நீங்கள் அமீறுல் மு..மினீனைவிட எமக்கு மேலானவர் என்றாள் அப்பெண்.... இவ்வாறு அஸ்லம் அந்த சம்பவத்தைக் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -கலீபா உஸ்மான்(ரழி)

இவரது பெயர் உஸ்மான். தந்தையின் பெயர் அப்பான். தாய் உம்மு அர்வா. அர்வாவின் தாய் அப்துல் முத்தலிபின் மகளான பைளா என்பவர் நபி தூதர் (ஸல்) அவர்கட்கு மாமி முறையானவர். குறைஷிக்குலத்தில் உமையாக்குடும்பத்தைச் சேர்ந்தவர் உஸ்மான் (ரழி) அவர்கள்.

நபி(ஸல்) அவர்கட்கு ஆறுவருடங்கள் இளையவரான இவர் ஹிஜ்ரத்துக்கு முன் 47ம் ஆண்டில் அதாவது யானை வருடம் 6 ம் ஆண்டில் தாயிபில் பிறந்தார்கள். இவரது தந்தை அப்பான் ஒரு வியாபாரி; செல்வந்தரும் கூட, தந்தை ஷாமுக்கு வியாபாரத்துக்கு சென்றிருந்த வேளை காலமானதால் அவரது சொத்துக்கள் இவர் வசமாகின. பனூஉமையா குடும்பத்தில் செல்வாக்குப் பெற்றவரான உஸ்மான்(றழி) அவர்கள் மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றவர்.

நபி (ஸல்)அவர்கட்கு நபித்துவம் அருளப்பட்ட வேளை இவருக்கு வயது 34. ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தில் நுழைந்தவர்களில் இவரும் ஒருவர். இவரது வருகையாலும் இஸ்லாம் சிறப்பிடத்தைப்பெற்றது. வெட்கம், கொடை ஆகிய இரு பண்புகளை விசேடமாகக்கொண்ட இவரது சிறப்புக்களை பல ஹதீஸ்கள் குறிப்பிட்டிருக்கின்றன.

## குடும்ப வாழ்க்கை

நபி தூதர் (ஸல்) அவர்களின் புதல்வி றுகையா அவர்களைத் திருமணம் செய்து அவர்மூலம் அப்துல்லாஹ் என்ற குழந்தைக்குத்தந்தையானார். ஆறு வயதில்அக்குழந்தை காலமானது. குறைஷிகளின் துன்பம் எல்லை கடந்தபோது அபீசீனியாவுக்கு ஹிஜ்றத் சென்ற அத்தம்பதியினர் பின்னர் மதீனாவுக்கு ஹிஜ்றத் சென்றனர். பத்று யுத்த காலத்தின் போது றுகையா கடுமையாக நோயுற்றதால் உதுமான் (ரழி) அவர்கள் யுத்தத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. அந்நோயினாலேயே அவர் காலமானார். பின்னர் நபிகளாரின் மற்றொரு மகளான உம்மு குல்தூமை உதுமான்(ரழி) மணம் முடித்ததால் "துன்னூரைன்"(இரண்டு ஒளிகளையுடையவர்) என்ற சிறப்புக்குரியவரானார். உம்முகுல்தூமால் இவருக்குக் குழந்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LENDING SECTION

கிடைக்கவில்லை உம்மு குல்தூமும் காலமாகி விட்டார். "எனக்கு இன்னுமொரு மகள்இருந்திருந்தால் உஸ்மானுக்கு அவளை திருமணம் முடித்துக் கொடுத்திருப்பேன்" என்ற நபி(ஸல்)அவர்களின் கூற்று இவரது சிறப்பை எமக்கு எடுத்துக்காட்டுகிறது.

ஹஸ்வானின் மகள் பாகிதா என்பவரை இவர் மணம் செய்து சிறிய அப்துல்லாஹ் என்ற குழந்தையையும் ஜுன்துப் மகள் உம்மு அம்று என்பவரை மணம் செய்து உமர், காலித். அபான்,அம்று,மர்யம் எனும் குழந்தைகளையும் மக்சூம் கிளையைச் சேர்ந்தவலீத் மகள் பாத்திமாவை மணம் செய்து சயீத் வலீத், உம்மு சயீத் ஆகிய குழந்தைகளையும் உம்முல் பனீன் என்பவரின் திருமணத்தின் மூலம் மலிக் எனும் குழந்தையும் ஷைபாவின் மகள் றம்ஸாவின் திருமணத்தின் மூலம் ஆயிஷா, உம்மு அபான், உம்மு அம்று ஆகிய பெண்குழந்தைகளும் நாயிலா என்பவரை மணம்செய்து மர்யம் எனும் குழந்தையையும் பெற்றார். மொத்தம் எட்டு பெண்களை மணந்த உஸ்மான் அவர்கட்கு 9 ஆண்குழந்தைகள் 6 பெண்மக்கள், இவரதுமனைவிமார்களில் சிலர் இளமையிலேயே காலமாகி விட்டனர்.

MARUTHAMUNAI
PUBLIC LIBRARY

## சிறப்புக்கள்

சுவனத்தைக்கொண்டு நன்மாராயம் சொல்லப்பட்டவர்களில் ஒருவரான உஸ்மான்(ரழி)சதா காலமும் பகல் வேளைகளில் நோன்பு நோற்றவர். விலக்கப்பட்ட நாட்கள் தவிர்ந்த அனைத்து நாட்களிலும் நோன்புநோற்பார். ஹிஜ்ரி 6ம் ஆண்டு உம்றாச்செய்வதற்காக நபி(ஸல்) அவர்களின் தலைமையில் தோழர்கள் மக்கா சென்ற போது குறைஷிகள் அவர்களை மக்காவுக்குள் அனுமதிக்க மறுத்த போது அவர்களோடு பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக அவர்களையே நபி(ஸல்) அவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள். இவர் திரும்பி வருவது தாமதமானபோது இவர் கொல்லப்பட்டுவிட்டார் என்ற ஒரு வதந்தியும் பரவ ஆரம்பித்தது. இவருக்காக பழிவாங்க வேண்டும் என்று பைஅத் செய்யப்பட்டது இதுவே 'பைஅதுர் ரிழ்வான் என வரலாற்றில் அழைக்கப்படுகிறது. ஹிஜ்ரி 9ல் தபூக் யுத்தத்திற்காக பஞ்சமான ஒரு கால கட்டத்தில் படையை ஆயத்தம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. முப்பதினாயிரம் பேர் கொண்ட இப்படைக்கு போதிய நிதி தேவைப்பட்டது. நபி(ஸல்) அவர்கள் நிதியுதவி கோரியபோது 950ஒட்டைகைகளையும் 50 குதிரைகளையும் மேலும் ஆயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீனார்களையும் (பவுண்களை) தமது மடியினுள் சுமந்து வந்து நபி(ஸல்) அவர்களின் மடியினுள் கொட்டினார்கள். வஹி எழுதுபவர்களில் ஒருவராகக்கடமையாற்றிய உதுமான் (ரழி)அவர்கள் கலீபா அபூபக்கர் ஆட்சியின் போது அவரது செயலாளராகக் கடமை புரிந்தார். கலீபா உமரின் நியமனக் கடிதத்தை இவரே தமது கையால் எழுதினார்.

கலீபா அபூக்ர்(ரழி) அவர்களின் காலத்தில் பஞ்சம் ஏற்பட்டது . கலீபாவிடம் வந்த மக்கள் மழை பொழியவில்லை; எதுவும் விளைய வில்லை மக்கள் பட்டினியால் அழியப் பார்க்கிறார்கள் என்ன செய்வது என்று கேட்டார்கள். அல்லாஹ் ஒருவழியை ஏற்படுத்துவான் பொறுமையாகயிருங்கள் என்றார் கலீபா. அன்றுமாலையே ஷாமிலிருந்து உதுமான்(ரழி)அவர்களுக்குச் சொந்தமான ஓட்டகைக் கூட்டங்கள்,கோதுமை ,நெல், எண்ணெய் என்பவற்றை சுமந்து வந்து சேர்ந்தன .இவை வந்து சேர்ந்ததும் வியாபாரிகள் அவற்றை வாங்குவதற்கு போட்டி போட்டனர். என்ன விலை கொடுத்தாலும் வாங்க முயன்றனர். ஆனால் உதுமான்(ரழி) அவர்கள் அவையனைத்தையும் மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள்.

இருபதினாயிரம் திர்ஹம் கொடுத்து ஒரு யூதனிடமிருந்து "பிஃறுறூமா" எனும் கிணற்றை வாங்கி இறை பாதையில் தர்மம் செய்தவர் இவர். இக்கிணற்றை வாங்கி ஏழைகளுக்கு வழங்குபவர்களுக்கு சுவனம் கிடைக்கும் என நபி(ஸல்) அவர்கள் கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மஸ்ஜிதுன் நபவியின் விஸ்தரிப்புக்காக தனது சொந்தப்பணத்தில் நிலம் ஒன்றை வாங்கி அன்பளிப்பு செய்தார்கள்.முஅத்தின்களுக்கு பொதுநிதியிலிருந்து சம்பளத்தை ஏற்படுத்தியவர் இவரே!

## ஜாமிஉல் குர்ஆன்

அல்குர்ஆனை ஒன்று சேர்த்தவர் எனும் பொருள்படும் 'ஜாமிஉல் குர்ஆன்' எனும் சிறப்பு பெயரால் அழைக்கப்பட்டவர் உதுமான் (ரழி) அவர்கள். குர்ஆனை நூலுருவிலாக்கியவர் கலீபா அபூபக்கர் (ரழி) என மேலே நாம் படித்துள்ளோம். காலம் செல்லச் செல்ல நாடுகள் விரிவாக விரிவாக அல்குர்ஆனை பலரும் பல விதமாக ஓத ஆரம்பித்தனர். ஒரு யுத்தத்தின் போது அல்குர்ஆனை ஓதுவதில் முஸ்லிம்கள் மத்தியில் பல்வேறு முரண்பாடுகள் இருப்பதை ஹுதைபதுல் யமான்(ரழி)அவர்கள் அவதானித்தார்கள். யுத்தம் முடிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கலீபா உதுமான் (ரழி)அவர்களிடம் வந்து விடயத்தைக் கூறினார்கள். எனவே கலீபா அவர்கள் தீவிரமாக செயற்பட்டார்கள். அபூபக்கர் (ரழி) காலத்தில் நூலுருவிலாக்கப்பட்டு ஹப்ஸா(ரழி) அவர்களின் வீட்டில் பாதுகாக்கப்பட்ட அல்குர்ஆன் மூலப்பிரதியைப் பெற்று அபூக்கர்(ரழி) காலத்திலும் நூலுருவாக்கும் பணியில் ஈடுபட்ட ஸைத் பின் தாபித் (ரழி) அவர்களிடத்தில் சூறாக்களை ஒழுங்கு படுத்தி மூலப்பிரதிக்கேற்ப பல பிரதிகளை குறைஷிகளின் மொழியில் எழுத வைத்து பல்வேறு பிராந்தியங்களில் ஒவ்வொரு வகையாக ஓதப்பட்டதை தவிர்த்தார்கள். இப்பணிமூலம் அல்குர்ஆனுக்கு பாரிய சேவையைச் செய்தார்கள் கலீபா அவர்கள்.

## மஷூறா சபையும் கலீபாத்தேர்வும்

உமர்(ரழி) அவர்கள் மரணத்தறுவாயில் உள்ளார்கள் என்பதை உணர்ந்த தோழர்கள் புதிய கலீபாவை நியமிக்குமாறு அவரை வேண்டவே அப்பொறுப்பிலிருந்து விடுபடவே விரும்பினார்கள். இந்த உம்மத்தின் நம்பிக்கைப்பாத்திரமானவர் என நபி(ஸல்)அவர்களால் கூறப்பட்ட அபூ உபைதா பின் ஜர்ராஹ்(ரழி) உயிரோடு இருந்தால் அவரை நான் நியமிக்கலாம் அல்லது அபூ உபைதாவினால் விடுவிக்கப்பட்ட அடிமை ஸாலிம் இருந்தால் அவரை நான் நியமிக்கலாம் ஏனெனில் அவர் அல்லாஹ்விடம் அதிகம் நேசம் உள்ளவர் என நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன் என்று கூறி தெரிவு செய்வதில் உள்ள சிரமத்தை வெளிப்படுத்த தோழர்கள் தொடர்ந்து அவரை வலியுறுத்தினர்.

எனவே இதன் மூலம் பிரச்சினை வராமல் தடுப்பதற்காக பின்வருமாறு கலீபா அறிவித்தார்

01- சுவனத்தைக்கொண்டு நன்மாராயம் கூறப்பட்ட வர்களில் அவ்வேளை உயிரோடிருந்த அறுவரான உஸ்மான் (ரழி), அலி(ரழி), அப்துர் ரஹ்மான் பின் அவ்ப்(ரழி), தல்ஹா (ரழி) ஸுபைர் (ரழி) ஸஃது இப்னு அபீ வக்காஸ் (ரழி) ஆகியோர்களிலிருந்து ஒருவர் கலீபாவாகத் தெரிவு செய்யப்படல் வேண்டும் (நற் செய்தி கூறப்பட்டவர்களில் மற்றவரான ஸயீது பின் ஸஃது கலீபாஉமரின் கபீலாவைச் சேர்ந்தவர் என்பதால் அவரை கலீபாதெரிவு செய்யவில்லை )

02- இத்தெரிவுக்குழுவில் ஒருவராக இப்னு உமர் (ரழி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுவார் ஆனால் அவர் கலீபாவாகத் தெரிவு செய்யப்படக் கூடாது

03- மூன்று நாட்களுக்குள் தெரிவுமேற்கொள்ளப்படல் வேண்டும்

04- தெரிவு நடை பெறும் போது அபூ தல்ஹா அன்ஸாரி தலைமையிலான ஐம்பது பேர் கொண்ட குழு ஆலோசனைக் குழுவுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

கலீபாவின் மரணத்தைத்தொடர்ந்து மிஸ்வர்பின் மக்ரமாவின் இல்லத்தில் தல்ஹா தவிர்ந்த ஐவரும் கூடினர். தல்ஹா (ரழி) இவ்வேளை மதீனாவில் இருக்கவில்லை. அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (ரழி) தவிர்ந்த ஒவ்வொருவரும் தாங்கள் பதவிக்கு வருவதையே விரும்பினர். அப்துர்ரஹ்மான் பின் அவ்ப் (ரழி) அவர்கள் சிரேஷ்ட நபித்தோழர்கள், படைத்தளபதிகள் போன்றோரிடம் ஆலோசனை நடத்திய வேளை உதுமான் அல்லது அலியே பொருத்தம் என்பதை அவர்கள் தெரிவித்தனர். தாங்கள் இல்லை என்றால் இப்பதவிக்கு யார் பொருத்தம் ? என அப்துர்ரஹ்மான் அலி(ரழி)யிடம் கேட்ட போது உதுமான் என்றார் அலி. உதுமானிடம் கேட்ட போது அலி என்றார் உதுமான். சுபைர்,ச:.து ஆகியவர்களிடம் கேட்க உதுமான் என்றே அவர்கள் கூறினார்கள்.

உமர் (ரழி) அவர்களினால் இடப்பட்ட மூன்றாம் நாள் காலக்கெடு அன்று அதிகாலை மஸ்ஜிதில் மக்கள் கூடினர். முஹாஜிர்கள் அன்ஸாரிகள் படைத்தளபதிகள் உட்பட மக்கள் கூட்டம் மஸ்ஜிதில் நிறைந்தது. ஒரு தரப்பினர் உதுமான் அவர்களை ஆதரிப்பவர்களாக மறு தரப்பினர் அலியை ஆதரிப்பவர்களாக காணப்பட்டனர். அதற்காக குரல் கொடுக்கவும் தலைப் பட்டனர். நிலைமையின் மோசத்தை அவதானித்த குழு உறுப்பினர் ச:.து பின் அபீவக்காஸ் (ரழி) மக்கள் குழப்பமடைய முன் முடிவைத் தெரிவிக்குமாறு வேண்டினார்.

பின்னர் அப்துர் ரஹ்மான் பின் அவ்ப்(றழி) எழுந்து தான் செய்த ஆலோசனைகளைக் குறிப்பிட்டு உதுமான் பின் அப்பான்(றழி) அவர்கட்கு பைஅத் செய்வதாக அறிவித்தார். அங்கு குழுமியிருந்தவர்களும் அதனை ஏற்று "பைஅத் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கலீபா மக்களை நோக்கி தனது பிரசங்கத்தை நிகழ்த்தினார். உலக வாழ்வில் மெய் மறந்து விடவேண்டாமென்றும் மறுமைக்காக உழைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.
பின்னர் பிராந்தியங்களிலுள்ள கவர்னர்கள், தளபதிகள், உத்தியோகத்தர்களுக்கு 'நன்மையை ஏவி தீமையைத்தடுக்குமாறும் அந்நிய சமூகத்தினருடன் இரக்கமாக நடக்குமாறும் வரி அறவீட்டில் நீதி நியாயமாக நடந்து கொள்ளுமாறும் எழுதினார்.

கலீபா அவர்கள் பதவியேற்பு ஹிஜ்ரி 24ம் ஆண்டு முஹர்ரம் தலைப் பிறை அன்று நிகழ்ந்தது.

## யுத்தங்களும் வெற்றிகளும்.

உமர் (ரழி) ஆட்சிக் காலத்தில் றோம, பாரசீகப் பிரதேசங்களில் ஆரம்பமான வெற்றிகள் உதுமான் (ரழி) அவர்களின் காலத்திலும் தொடர்ந்து கொண்டு இருந்தன. கலீபா அவர்களின் 12 வருட ஆட்சியில் முதல் பத்து வருடங்களும் பல்வேறு வெற்றிகளை அவர் குவித்தார். ஆர்மேனியா, ஆபிரிக்கா, சைப்ரஸ் போன்ற நாடுகள் உதுமான் (ரழி)காலத்தில் இஸ்லாமியக் கொடியின் கீழ் வந்தன. இக்கால எல்லையில் சயீத் பின் ஆஸ் தலைமையில் சென்ற படையினரால் தப்ரிஸ்தான் வெற்றி கொள்ளப்பட்டது. இப்படையில் நபி(ஸல்)அவர்களின் பேரர்களான ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி), இப்னுஅப்பாஸ் (ரழி), மற்றும் அம்றுப்னு ஆஸ் (ரழி), சுபைர் இப்னு அவாம் (ரழி) போன்ற பிரபலங்கள் இணைந்து சென்றமையும்.இப்படையிடம் ஜுர்ஜானிய மன்னன் வருடாந்தம் இரண்டு இலட்சம் திர்ஹம்கள் வரி செலுத்துவதாக சமாதான ஒப்பந்தம் செய்தமையும் குறிப்பிடத்தக்கன.

ஹிஜ்ரி 31ல் குராசானியர் ஒப்பந்தத்தை முறித்த போது பஸராவின் அதிபதியாக விருந்த இப்னு ஆமிர் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்ப அது மர்வ் ,நைசாபூர்,நசா,ஹுறாத் போன்ற பிரதேசங்களைக் கைப்பற்றின. பாரசீகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் படைகளைப் பலப்படுத்திய கலீபா அப்பிரதேசங்கள் அனைத்தையும் அடிபணிய வைத்தார். ஜுர்ஜான்,தல்கான்,பார்யால்,பல்க் போன்ற பகுதிகளும் அத்ரபைஜான் ,ஆர்மேனியா போன்ற பகுதிகளும் வெற்றி கொள்ளப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது கடற் படை

சிரியாவின் அதிபதியாக பதவியேற்ற முஆவியா கடற்படை ஒன்று தேவை என்பதை கலீபா உமருக்கு உணர்த்திய போதும் அவர் உடன்படவில்லை. ஆனால் கலீபா உதுமான் (ரழி) பதவிக்கு வந்த பின் முஆவியாவின் கோரிக்கையை அவரால் நிராகரிக்க முடியவில்லை.எனவே கலீபா உதுமான் (ரழி) இதற்கு அனுமதி வழங்கினார். அப்துல்லாஹ் பின் கைஸ் என்பவர் தலைமையில் உருவாக்கப்பட்ட கடற் படை உரோமர்களுடன் போரிட்டு அம்முரியா,சைப்ரஸ்,றோதஸ் தீவுகளை வெற்றி கொண்டது.

கலீபா உமர்(ரழி)அவர்கள் காலத்தில் பாரசீகம், சிரியா, எகிப்து போன்ற நாடுகள் இஸ்லாமியக் கொடியின் கீழ் வந்த போதிலும் ஆங்காங்கே உடன்படிக்கையை மீறல்,படையெடுப்பு போன்றவற்றால் மீண்டும் அங்கு படைஎடுக்க வேண்டிய பொறுப்பு கலீபாவுக்கு ஏற்பட்டது. அத்தோடு பல புதிய பிரதேசங்களையும் வெற்றி கொள்ள வேண்டிய அவசியம் உணரப்பட்டது.கலீபா உதுமான் (ரழி) அவர்களின் 12 வருட ஆட்சியில் முதல் பத்து வருடங்கள் இஸ்லாமிய வெற்றியைப் பொறுத்த வரை குறிப்பிடத்தக்க பாரிய வெற்றிகளை அவர் பெற்றார்.

## ஆர்மேனியா

ஆர்மேனியா என்பது வடக்கே கருங்கடலையும் குர்ஜிஸ்தானையும் கிழக்கே மேலும் குர்ஜிஸ்தானையும் பாரசீகத்தின் ஒரு பகுதியையும் தெற்கே ஆதர்பைஜானையும், ஜெஸீராவையும் மேற்கே சின்னாசியாவையும் கொண்ட ஒரு பரந்த பிரதேசமாகும். தாஜிஸ்தான், ஆதர்பைஜான், குர்திஸ்தான், கவ்காஸ் இன்றைய ரஷ்யாவின் பல் வேறு பிரதேசங்கள் இந்தப் பிரிவில் அடங்குகின்றன.

இப்பிரதேசம் வெற்றி கொள்ளப்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்த கலீபா உதுமான் (ரழி) அவர்கள் அவ்வேளை சிரியாவின் கவர்னராகவிருந்த முஆவியா பின் அபூசுப்யான் (ரழி) அவர்களை படையொன்றைத் தயார் செய்யுமாறு பணித்தார். இதன் பேரில் தளபதி ஹபீப் பின் மஸ்லமா தலைமையில் 1000 பேர் கொண்ட படையை முஆவியா அனுப்பிவைத்தார்.ஹிஜ்ரி 25ல் ஆர்மேனியா முஸ்லிம்கள் கையில் வீழ்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரசீகம் முழுமையாக முஸ்லிம்கள் வசம்

பாரசீக சாம்ராஜ்ஜியம் என்பது பாரிய நிலப்பரப்பையுடைய ஒரு ராஜ்யமாகும். பலூஜிஸ்தான், ஆப்கான், ஆதர்பைஜானில் ஒரு பகுதி, குர்திஸ்தான் ஆர்மேனியாவின் கஸ்பியன் கடலை அண்டிய கிழக்குப் பகுதி. மர்வ், பல்க், சஜஸ்தான் போன்ற புகழ் பெற்றபகுதிகள் இதில் அடங்கும்.
பாரசீக சாம்ராஜ்யத்தின் எல்லையை அறபிகள் பின் வருமாறு வகுத்தனர்.

### வட பிரதேசம்

மேற்கே ஆர்மேனியா வடக்கே கவ்காஸ் கொண்ட பகுதி. இதில் தப்ரீஸ், சன்ஜான், பப்ர், மங்கான், தைலாஸான் என்ற நகரங்கள் அடங்குகின்றன. கிழக்கே தைலம் என அழைக்கப்படும் பிரதேசங்கள். தென்கிழக்கே கஸ்பியன் கடல், தப்ரிஸ்தான், ஜுர்ஜான், தமாவந்த், தெற்கே அப்யோத், நசா, மர்வ் போன்ற பிரதேசங்கள் உள்ளடங்குகின்றன.

### மேற்குப் பிரதேசம்

ஈராக்கில் அறபிகள் அல்லாதவர்கள் வாழ்ந்த கவ்ஸிஸ்தான் போன்ற பகுதிகள், மதாயின், நஹ்றுவான், மனாதிர், நஹாவந்து, காஸான், இஸ்பஹான், அஹ்வாஸ் போன்ற நகரங்கள் உள்ளடங்கும்.

### தெற்குப் பிரதேசம்

பலூஜிஸ்தான்,முக்ரானுக்கும் ரோஸானுக்குமிடையேயுள்ள சஜஸ்தான், பாரசீக நகரங்களான இஸ்தஹர், பஸா, தாறுஅப்ஜர்த், கஸ்றூன், சைறஜான், கர்மான், முக்ரான் போன்ற நாடுகளையும் நகரங்களையும் உள்ளடங்கும்.

### வடகிழக்கு

இன்றைய ஆப்கானிஸ்தானின் பெரும் பகுதிகள், ரோஸான் தஹாரிஸ்தான், சாபலிஸ்தான், மர்வ், ஹுறாத், தூஸ், நைசாபூர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காபூல், பல்க், ஜல்ஹுன், ஜோர்தான் பொன்ற நாடுகளும் நகரங்களும் இதில் அடங்கும்

மேற்கூறிய அகன்று பரந்த பாரசீக சாம்ராஜ்யத்தின் பெரும் பகுதிகள் கலீபா உமர்(ரழி)அவர்களின் காலத்தில் இஸ்லாமிய ஆட்சியுடன் இணைக்கப்பட்டன. இஸ்லாத்திற்கு வரி செலுத்துவதாக இருந்த சில பிரதேசங்கள் வாக்கை மீறின. படைநடவடிக்கைகளை மேற்கொண்டன. இவற்றையெல்லாம் முறியடித்து ஆதிக்கத்தை வலுவாக்க வேண்டிய தேவை கலீபா உதுமான் (ரழி) அவர்களுக்கிருந்தது. மேலும் பாரசீகப் பிரதேசத்தில் இஸ்லாத்தில் இணையாத பகுதிகளை இணைக்க வேண்டிய தேவையும் புதிய கலீபாவுக்கிருந்தது. இவற்றிலெல்லாம் வென்று பாரசீக சாம்ராஜ்யம் முழுவதும் இஸ்லாமியக் கொடியின் கீழ் கலீபா உதுமான் (ரழி) அவர்களின் காலத்தில் வந்தது.

## குழப்பங்களும் பிரச்சினைகளும்

இளகிய மனமும் இரக்க சிந்தையும் வெட்க சுபாவமும் கொண்ட கலீபா உதுமான் (ரழி) அவர்கள் எழுபது வயதில் இஸ்லாத்தின் மூன்றாம் கலீபாவாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று 82 வயது வரை அப்பதவியை வகித்தார்கள். அவர்களின் ஆட்சியின் பிற்பட்ட பகுதி பாரிய குழப்பங்களும் பிரச்சினைகளும் கொண்டதாக அமைந்தது. இக்குழப்பம் கலீபா உதுமான் (ரழி) அவர்களை வீட்டிலே தடுத்து வைத்து கொலை செய்வதில் முடிந்தது.

கலீபா உமர்(ரழி)அவர்கள் கடும் போக்காளராக இருந்தார்கள். சட்டத்தையும் ஒழுங்கையும் சிறப்பாகப் பேணினார்கள். மக்கள் நினைத்த மாதிரி நடப்பதற்கு அவர் இடம் கொடுக்க வில்லை. ஆனால் கலீபா உதுமான் (ரழி)அவர்கள் கண்டிப்பானவராக இல்லாததைப் பலரும் பயன் படுத்த விரும்பினார்கள். இவரது காலத்தில் அரசு நிறைய வருமானங்களை பெற்றதால் மக்கள் செல்வமுள்ளவர்களாக மாறினார்கள். இதனால் நகரப் புறங்களை நாடுவதில் அவர்கள் ஆர்வம் காட்டினார்கள். கலீபா உமர் (ரழி) மதீனாவை விட்டு முக்கிய தோழர்கள் வெளியேற அனுமதிக்கவில்லை. ஆனால் கலீபா உதுமான் (ரழி) அவர்களின் காலத்தில் அவர்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். கலீபா அதனையிட்டு அலட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவில்லை. மேலும் கலீபா உதுமான் (ரழி) உமையாக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இக்குடும்பத்தினர் இவரது காலத்தில் பாரிய செல்வாக்குள்ளவர்களாகத் திகழ்ந்தனர். இவரது செயலாளராக நியமிக்கப்பட்ட இவரது குடும்பத்தைச் சேர்ந்த மர்வான் பின் ஹகம் என்பவரின் நிருவாக முறை பலரையும் அதிருப்திக்குள்ளாக்கியிருந்தது. இதே குடும்பத்தைச் சேர்ந்த முஆவியா அவர்கள் சிரியாவில் சக்தி மிக்கவராகத் திகழ்ந்தார். பனூஉமையா குடும்பத்தவர் பலர் அங்கு குடியேறி அவரது கரங்களைப் பலப்படுத்திக் கொண்டிருந்தனர். பல்வேறு பிரதேசங்களின் கவர்னர்களாக இதே குடும்பத்தினர் நியமனம் பெற்றுக் கொண்டிருந்தனர். அரச நிலங்களும் அதிகளவு இவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன.

இஸ்லாமிய உலகு செல்வச் செழிப்புள்ளதாக மாறியதால் மக்களும் செல்வ வாழ்வில் ஈடுபட ஆரம்பித்தனர். வீண் விளையாட்டுகளில் ஈடுபட்ட மக்களை கலீபா தண்டித்தாலும் அதை ஏற்கும் நிலையில் அவர்கள் இருக்க வில்லை. மாறாக கலீபா மீது வஞ்சம் கொண்டார்கள். மார்க்க விடயங்கள் சிலவற்றில் கலீபா அவர்கள் நடந்து கொண்ட முறை பலருக்கு அதிருப்தியை அளித்தது. நபி(ஸல்)அவர்கள், அபூபக்கர் (ரழி), உமர் (ரழி) போன்றோர் செய்திராத சில விடயங்களை கலீபா உதுமான் செய்தார். ஜும்ஆ தினத்தன்று மேலும் ஓர் அதான் கூறப்பணித்தார். பெருநாள் தொழுகைக்கு முன் குத்பாவை முற்படுத்தினார். மக்களே தங்கள் ஸகாத்தை விநியோகிக்கப் பணித்தார். குதிரைகள் மீது ஸகாத்தை விதியாக்கினார். மினா, அறபாவில் தொழுகைகளைச் சுருக்காமல் தொழுதார். இவ்வாறான விடயங்கள் கலீபா மீது மக்களின் அதிருப்திக்கு வழி வகுத்தது.

ஹகம் பின் ஆஸ் என்ற உதுமான் அவர்களின் உறவினர் ஒருவரை நபி (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து வெளியேற்றி இருந்தார்கள். ஆனால் உதுமான்(ரழி)அவர்கள் அவரையும் அவரது குடும்பத்தாரையும் மதீனாவில் குடியேற அனுமதித்தார். அவரது மகனான மர்வானை அமைச்சராகவும் ஆலோசகராகவும் நியமித்து ஆட்சி நடத்துபவராகவும் அவரே செயற்பட்டார்.

MARUTHAMUNAI
PUBLIC LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவர்னர்கள் பதவி நீக்கப்படல்

கலீபா உதுமான் அவர்கள் காலத்தில் பல கவர்னர்கள் பதவி நீக்கப்பட்டனர். கூபாவில் கவர்னராகவிருந்த முஹீரத்து பின் ஷு∴பா பதவி நீக்கப்பட்டார். அவரது இடத்திற்கு ச∴து பின் அபீவக்காஸ்(ரழி) அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். பின்னர் இவருக்கும் திறைசேரி பொறுப்புதாரியாகவிருந்த இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களுக்குமிடையில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக இவர் பதவி நீக்கப்பட்டு வலீத் பின் உக்பா கூபா கவர்னராக நியமிக்கப்பட்டார். அவர் பற்றி மக்கள் நிறைய முறைப்பாடு செய்ததன் பேரில் சயித் பின் ஆஸ் நியமனம் பெற்றார்.

பஸராவின் கவர்னராக விருந்த அபூமூஸா அல்அஸ்அரி(ரழி) பதவி நீக்கப்பட்டு அவரது இடத்திற்கு அப்துல்லாஹ் பின் ஆமிர் பின் கரீஸ் என்பவர் நியமிக்கப்பட்டார்.

எகிப்திய கவர்னராக விருந்த அம்றுப்னுல் ஆஸ் (ரழி) பதவி நீக்கப்பட்டு அப்துல்லாஹ் பின் ச∴து பின் அபீ சறஹ் எனும் உதுமான் (ரழி) அவர்களின் பால் குடிச் சகோதரர் நியமனம் பெற்றார்.

கலீபா உமர்(ரழி) நியமித்த பல கவர்னர்களை நீக்கி தமது உறவினர்களை அப்பதவிக்கு நியமித்ததாக மக்கள் குற்றம் சாட்டினார்கள்.

இதனால் அங்கு குடியேறிய சிரேஷ்ட சஹாபாக்களுடன் மக்கள் தொடர்பை அதிகரித்து அவர்களே ஆட்சியாளர்களாக வேண்டுமெனவும் எதிர்பார்த்தனர். கலிபாவுக்கு எதிரான கிளர்ச்சி ஆரம்பமான போது பஸராவில் வாழ்ந்த சுபைர் (ரழி) அவர்களை கலீபாவாக்குவோம் என பஸராவாசிகளும் கூபாவில் வாழ்ந்த தல்ஹா (ரழி) அவர்களை நியமிப்போம் என கூபா வாசிகளும் கூறியமை இதற்கு சான்றாகும்.

## அபூ தர்ருல் கிபாரி (ரழி)

சஹாபாக்களில் சிரேஷ்டமானவர் இவர். சிறந்த ஹதீஸ் அறிப்பாளரும் கூட. சொத்துக்கள் அனைத்தையும் மக்களிடம் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கையுடையவர். உதுமான்(ரழி) காலப் பொருளாதாரக்கொள்கை இவருக்குத்திருப் தியளிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சிரியாவில் கவர்னராகவிருந்த உதுமான்(ரழி)அவர்களின் உறவினர் முஆவியாவின் செயற்பாடுகளிலும் இவர் அதிருப்தியடைந்தார். மதீனாவில் வாழ்ந்த இவரை 'றபதா"என்ற இடத்துக்குச் செல்லுமாறு கலீபா பணித்தார்.ஏனெனில் இவர் ஆட்சிக்கெதிராக மக்களைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளானார்.மேலும் இவரைஅப்துல்லாஹ் பின் சபா என்ற வம்பனும் பயன் படுத்த ஆரம்பித்தான்.என்றும் தனித்துவ போக்குடைய அபூதர் அவர்களை வெளியில் அனுப்புவதைத்தவிர வேறு வழி கலீபாவுக்கிருக்கவில்லை இதுவும் கலீபா மீது ஓரளவு அதிருப்தியைத் தோற்றுவித்தது.

L 10910

## இப்னு சபாவின் பிரச்சாரம்

அமைதிப் பூங்காவாக இருந்த இஸ்லாமிய உலகை ஆட்டமுறச் செய்யவும் தீச்சுவாலையை அங்கு எரிய வைக்கவும் திட்டமிட்டான் ஒரு யூதன். எமனின் சன்ஆவைச் சேர்ந்த கறுப்பனான இவன் உதுமான் (ரழி) காலத்தில் இஸ்லாத்தை ஏற்பதாகக் கூறி இஸ்லாமிய வட்டத்திற்குள் நுழைந்தான் முதலில் முஸ்லிம்கள் கொண்டிருக்கும் பல இஸ்லாமியக் கொள்கைகளில் (அகீதா) ஆட்டங்காண வைக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

ஈஸா இறுதி காலத்தில் உலகுக்கு வருவார் எனக்கூறுவோர் முஹம்மத் வரமாட்டார் எனக் கூறுவது ஆச்சரியமானதாகும். முஹம்மத் ஈஸாவை விட மீண்டுவருவதற்கு பாத்திரமானவர் எனக்கூறி பலவீனமான மக்கள் மத்தியில் நச்சு விதையை விதைத்தான்.

நபி(ஸல்) அவர்களுக்குப்பிறகு ஆட்சிக்குரியவர் அலியே என்றும் தற்போதைய உதுமானின் ஆட்சி சட்ட விரோதமானது என்றும் பிரசாரம் செய்தான். அபூபக்கர் (ரழி), உமர் (ரழி) போன்றவர்களையிட்டும் குறை கூறினான். கூபா, பஸரா, எகிப்து போன்ற இடங்களில் தனது நச்சுக் கருத்துகளை விதைத்தான். கலீபா உதுமான் (ரழி) அவர்கள் தனது குடும்பத்தை பதவியில் அமர்த்துவதாகவும் முறையற்ற ஆட்சி செய்வதாகவும் பிரச்சாரம் செய்தான். ஆட்சி மீது அதிருப்தி கொண்ட பலர் இவருடன் ஒத்துழைத்தனர். முதலில் கூபாவில் பிரச்சாரத்தை இவன் மேற்கொண்ட போதும் அவனால் அங்கு நிலைக்க முடியவில்லை.

இப்னு சபாவின் பிரச்சாரத்துக்கு பஸரா நல்ல தளமாக அமைந்தது. எனினும் கவர்னர் அப்துல்லாஹ் பின் ஆமிரால் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரத்தப்பட்டான். பின்னர் கூபாவிலும் நச்சு விதைகளை விதைத்தான். சிரியாவுக்கும் சென்றான். அங்கெல்லாம் துரத்தப்பட்டு பின்னர் எகிப்துக்குச் சென்று தன்னை ஒரு மார்க்க வாதியாக காட்டிச் செயற்பட்டதுடன் கூபா, பஸராவிலுள்ள அதிருப்தியாளர்களுடன் தொடர்பைப் பேணினான். எகிப்து கவர்னர் அப்துல்லாஹ் பின் ஸஃது பின் அபி சறஹ் உடனும் கலீபா உதுமான் அவர்களிடமும் அதிருப்தியுற்றவர்கள் இவனது துர்ப்பிரச்சாரத்தில் இணைந்தனர். அபூபக்கர் (ரழி)அவர்களின் மகன் முஹம்மத், அபூஹு"தைபாவின் மகன் முஹம்மத் போன்றோர் இதில் முக்கியமானவர்கள்.

## கலீபாவின் நடவடிக்கை

பஸரா, கூபா, எகிப்து, சிரியா போன்ற பிராந்தியங்களில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலை பற்றி ஆராய்வதற்காக, கலீபா அவர்கள் சில பிரதி நிதிகளை அனுப்பி வைத்தார்கள். முஹம்மத் பின் மஸ்லமா (ரழி) கூபாவிற்கும் உசாமா பின் சைத் (ரழி) பஸராவுக்கும் இப்னு உமர் (ரழி) சிரியாவுக்கும் அம்மார் பின் யாசிர் எகிப்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். எகிப்துக்கு சென்ற பழம் பெரும் ஸஹாபியான அம்மார் (ரழி) அதிருப்தியாளர்களுடன் இணைந்து கொண்டார். மற்றத் தூதுவர்கள் கலீபாவிடம் வந்து நிலைமையைத் தெளிவு படுத்தினார்கள்.

## மதீனாவை நோக்கி அதிருப்தியாளர்கள்.

இப்னு சபா தீட்டிய திட்டத்தை அமுல் படுத்த முன் வந்தார் முஹம்மத் பின் அபூஹு"தைபா. பஸரா, கூபா, எகிப்திய அதிருப்தியாளர்கள் மொத்தம் 600பேர் மதீனா நோக்கிச் சென்றனர்.கலீபாவை பதவி நீக்க வேண்டும்; புதிய ஒருவரை நியமிக்க வேண்டும் என்பதே அவர்களது திட்டம்.ஆனால் யாரை நியமிப்பது என்பதில் அவர்களுக்குள் பிரச்சினை. சுபைர்(ரழி) நியமிக்கப்பட வேண்டும் என்பது பஸரா வாசிகளின் கருத்து! தல்ஹா (ரழி) நியமிக்கப்பட வேண்டும் என்பது கூபா வாசிகளின் கருத்து! அலி(ரழி)தான் நியமிக்கப்படல் வேண்டும் என எகிப்தியர்கள் விரும்பினர். கிளர்ச்சியாளர்கள் மதீனா வருகிறார்கள் என்பதை அறிந்த கலீபா அவர்களை ஒரு கிராமத்தில் சந்தித்தார்.இது துல்கஃதா பிறை ஒன்றில் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குள் ஒற்றுமைப்படாமலேயே கலீபாவை அவர்கள் சந்தித்து அவர் மீது குற்றச் சாட்டுகளைச் சொரிந்தார்கள்.ஒவ்வொன்றுக்கும் மிக ஆறுதலாகவும் அடக்கமாகவும் பதிலளித்தார் கலீபா. எவ்வித குற்றமும் அற்றவர் அவர் என்பதை நிருபித்தார். அவர்கள் கேட்டுக் கொண்டது போல் சில கவர்னர்களை நீக்கி அவர்கள் கூறியவர்களை நியமித்தார்.இப்னு ஆமிரை பஸராவுக்கும் அபூ மூஸல் அஸ்அரீயை கூபாவுக்கும் அம்றுப்னு ஆஸை மீண்டும் எகிப்துக்கும் நியமிப்பதாகக் கூறினார் கலீபா.

கிளர்ச்சியாளர்களுக்கோ குற்றமே பிடிக்க முடியாத நிலை.அமைதியாக வந்த வழியைப் பார்த்து திரும்ப வேண்டிய கட்டாயம். தம் தரப்பில் நியாயம் இல்லை என்பது அவர்களுக்கும் தெரிந்ததுதான். மதினாவிலிருந்து திரும்பி எகிப்துக்குச் செல்வதாக் கூறியவர்கள் திரும்பிச் செல்லாமல் வழியில் ஒருவர் ஒட்டகையில் பிரயாணம் செய்வதைக் கண்டு அவரை சோதித்துப் பார்த்ததாகவும் அரச முத்திரை பொறிக்கப்பட்ட கடிதம் ஒன்று இருந்ததாகவும் எகிப்திய கவர்னருக்கு எழுதப்பட்ட அக்கடிதத்தில் புரட்சிக்காரர்கள் சிலரின் பெயர் குறிக்கப்பட்டு அவர்கள் கொல்லப்பட வேண்டும் என்று பொறிக்கப்பட்டு இருந்ததாகவும் கூறி மீண்டும் அவர்கள் மதீனா நோக்கிப் படை எடுத்தனர்.கலீபாவிடம் வந்து குற்றத்தைச் சுமத்த எதுவும் தெரியாமல் திணறினார் கலீபா.அவரின் நிருவாகச் செயலாளர் மர்வான் பின் ஹகம் அவர்களை ஒப்படைக்க வேண்டுமென வேண்டி நின்றனர் கிளர்ச்சிக்காரர்கள். செய்யாத குற்றத்தை செய்ததாகக் கூறி நின்றனர் அந்தப்பாவிகள்.கலீபா அனுப்பியதாக கூறிய கடிதத்தை எந்த சிரேஷ்ட ஸஹாபாக்களிடமும் காட்டவுமில்லை அதை எவரும் உறுதிப்படுத்தவுமில்லை.

## வீடு முற்றுகை

கலீபாவின் வீடு முற்றுகையிடப்பட்டது. அவரது உயிரைப் பறிப்பதையே நோக்காகக் கொண்டு வெளியில் காத்து நின்றனர் சதிகாரர்கள். சமரசம் செய்ய பலர் முயன்றும் முடியவில்லை.தொழுகை நடத்தவும் கலீபா அனுமதிக்கப்படவில்லை.உணவு,நீர் போன்றவை கலீபாவின் வீடு செல்வது தடுக்கப்பட்டது.அவர்களோடு போரிட சில இளைஞர்கள் முன் வந்த போதும் அதனைக் கலீபா விரும்பவில்லை. கலிபாப் பதவியை விட்டுக் கொடுப்பது பற்றி ஆலோசித்த போதும் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமானதாக அமையாது என சில சஹாபாக்கள் சுட்டிக்காட்டினர். ஹாரிதா பின் நு.ஃமான்,முகீறத் பின் ஷு.ஃபா,அப்துல்லாஹ் பின் சுபைர்,ஹஸன் பின் அலி போன்றோர் கலீபாவிடம் வந்து முற்றுகையாளர்களோடு போரிட அனுமதி கோரிய போது நபி(ஸல்) அவர்களின் உம்மத்திலே இரத்தத்தை ஓடச்செய்த முதல் கலீபாவாக நான் ஆகவிரும்பவில்லை என முகீறாவிடம் கூறியபோது அவர்களோடு போரிடுவது உங்களுக்கு ஆகுமானதல்லவா என அப்துல்லாஹ் பின் சுபைர் கூற அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் அவர்களுடன் ஒரு போதும் போரிடமாட்டேன் என மறுத்தார் கலீபா.

க.ஃபு பின் மாலிக்(ரழி) அவர்கள் மதீனத்து அன்சாரிகளிடம் இஸ்லாத்துக்கு மீண்டும் ஒரு முறை உதவியாளராக இருப்போம் என அழைப்பு விடுத்தார். அன்சாரிகள் கலீபாவிடம் வர ஸைத் பின் தாபித்(ரழி) அவர்கள் கலீபாவிடம் வந்து நாம் இந்நிலையில் உதவத் தயாராக இருக்கிறோம் எனக் கூறிய போது சண்டை செய்வதை கலீபா முற்றாக நிராகரித்தார்.அப்துல்லாஹ் பின் உமர், அபூஹுறைறா, அப்துல்லாஹ்பின் சுபைர்,ஹஸன், ஹுஸைன், மர்வான் போன்றோர் ஆயுதங்கள் தரித்து நின்ற போதும் கலீபா அனுமதியளிக்க மறுத்து விட்டார். தன்னைக் கொல்ல வந்தவர்களுடனும் கடுமையாக நடந்து கொள்ள முடியாத இளகிய மனம் கலீபாவுக்கு!

முற்றுகையாளர்கள் கலீபாவை கொல்வதே நோக்கமென நிற்கும் போது அவர்களோடு சண்டையிட கலீபா மறுக்கும் நிலையைக் கவனத்திற் கொண்ட அப்துல்லா பின் சுபைர்,முஹீரத்து பின் ஷு.ஃபா,உசாமா பின் ஸைத் போன்றோர்கள் கலீபாவிடம் போரிட விரும்பவில்லை என்றால் மக்காவுக்கு தப்பிச் செல்லுமாறு கேட்க அதற்கும் கலீபா மறுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலீபா தான் கனவொன்றைக் கண்டு கூடியிருந்தவர்களுக்கு அறிவிக்கிறார் 'கனவிலே நபி(ஸல்) அவர்களைக் கண்டேன். அவர்களுடன் அபூபக்கரும் ,உமரும் இருந்தார்கள் நபி(ஸல்)அவர்கள் உதுமானே! எம்மிடம் இன்று நோன்பைத் திறவும் என்றார்கள். அன்று உதுமான் (ரழி) அவர்களும் நோன்பாளியாக இருந்தார்கள். அதே தினத்தில் அவர்கள் கொல்லப்பட்டார்கள்.

ஹிஜ்ரி 35 துல்ஹஜ்ஜ"மாதம் பிறை 12 வெள்ளிக்கிழமை காலைப் பொழுதில் கலீபா வீட்டில் இருந்து கொண்டிருந்தார். அவர்களைப் பாதுகாப்பதெற்கென வீட்டில் இருந்து கொண்டிருந்த ஹஸன் (ரழி) ,இப்னு உமர் (ரழி) ,இப்னு சுபைர் (ரழி) இப்னு ஆமிர்(ரழி) இப்னு றபிஆ ,முஹம்மத் பின் ஹாதிம் ,மர்வான் பின் ஹகம் ,கதீர் பின் ஸலத் போன்றோரை வெளியிலே செல்லுமாறு வேண்டுகின்றார் கலீபா. அவர்கள் எவ்வளவு கூறியும் கலீபா விரும்பவில்லை. எனவே கலீபாவின் வீட்டில் அவரது குடும்பத்தினரைத்தவிர வேறு எவரும் இல்லாத நிலையில் வெளியேறினர். பின்னர் கலீபா வந்து தனது வீட்டுக் கதவைத் திறந்தார். நோன்பாளியான அவர் அல்குர்ஆனை எடுத்து ஓத ஆரம்பித்தார். அவ்வேளையில் கிளர்ச்சியாளர்களில் ஒருவன் உள்நுழைய அவனிடம் உனக்கும் எனக்குமிடையில் அல்லாஹ்வின் வேதம் இருக்கிறது எனக்கூற அவன் வெளியேறி விட்டான். அதன் பின்னால் வந்தவன் கலீபாவின் கழுத்தைப் பிடித்து திருகியதுடன் அவன் கொண்டு வந்த கூரிய இரும்பினால் குத்தினான்.ஓடி வந்த அவரது மனைவி நாயிலா கணவனைக் காப்பாத்த முயன்ற போது அவரது விரலையும் இழந்தார்.

அல்குர்ஆன் முன்னால் இருக்க வஹீ எழுதிய ஜாமிஉல் குர்ஆன் ஆகிய உதுமான் (ரழி)அவர்கள் ஸஹீத் ஆக்கப்பட்டார்கள். அவர்களின் இரத்தம் சூறா பகறாவின் 127ம் வசனத்தில் உள்ள "அல்லாஹ் போதுமானவன். அவன் செவியுறுவோனும் நன்கறிபவனாகவும் இருக்கிறான் என்ற இடத்தில் வீழ்ந்தது.

கலீபா அவர்களை எகிப்தைச் சேர்ந்த கறுப்பு நிறத்தவனான ஜிப்லா என்ற புனைப் பெயர் கொண்டவனே கொன்றவன் ஆகும். 82ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதில் கொல்லப்பட்ட இவர்கள் கெட்ட கூட்டமொன்று இவர்களைக்கொல்லும் என்ற நபி(ஸல்) அவர்களின் கூற்றை உறுதிப்படுத்தினார்கள்.

கலிபாவைக் கொன்றவர்கள் வீட்டைக் கொள்ளை இட்டதுடன் பைத்துல்மால் 'பணங்களையும் கொள்ளை அடித்தனர். ஹஜ்ஜுக் காலத்தில் கலீபா ஷஹீதாக்கப்பட்டார். ஹஜ்ஜிலிருந்து திரும்பிய மக்கள் தங்களது கலீபா கொல்லப்பட்டதையும் மதீனாவின் பாதுகாப்பு நிலை மோசமாக இருப்பதையும் கண்டு கொண்டார்கள். ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தவர்களில் ஆயிஷா(ரழி) அவர்களும் ஒருவர்.

அனஸ் (ரழி) அறிவிக்கின்றார்கள் ஒரு நாள் (மதீனாவிலுள்ள) உஹது மலையிலே நபி(ஸல்) அவர்களும் அபூபக்கர் (ரழி), உமர் (ரழி),உதுமான் (ரழி) ஆகியோரும் நின்று கொண்டிருந்தனர். அவ்வேளையில் மலை நடுங்கியது. அப்போது நபி(ஸல்) அவர்கள் உஹதே! நீ அமைதியாகு! உன்னிடம் நபியும் சித்திக்கும் இரண்டு 'ஷஹீத்களும் உள்ளனர் என்றார்கள்.

இந்த ஹதீஸில் உமர் (ரழி),உதுமான் (ரழி) இருவரும் சஹீத்கள் என நபி(ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. கலீபா அலி (ரலி)

இவரது தந்தை நபி(ஸல்) அவர்களின் சிறிய தந்தை அபூதாலிப் ஆவார். பாத்திமா பின்து அஸத் என்பவர் இவரது தாய். இத்தாய் இஸ்லாத்தை ஆரம்பத்திலேயே ஏற்றுக்கொண்டு ஹிஜ்ரத் சென்றவர்களில் ஒருவர். அபுல்ஹஸன், அபூதுராப் என்பன இவரது காரணப் பெயர்கள். தாலிப், அகீல், ஜ.்.பர், உம்முல் ஹானி, ஜுமான் ஆகியோர் இவரது சகோதரர்கள்.

இவரது தந்தையான அபூதாலிபின் சொந்தப்பெயர் அப்துல்மனாப். இவர் நபி(ஸல்) அவர்கள்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார் எனினும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

அலி (ரலி) அவர்கள் நான்காவது கலீபாவும் சுவனத்தைக் கொண்டு நற்செய்தி கூறப்பட்டவர்களில் ஒருவருமாவார்.

சிறுவர்களில் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர். அதன்போது அவரது வயது 10. சிலை வணக்கத்தை அறிந்திராதவர் அவர். நபி(ஸல்) அவர்களுடன் ஒரு வீட்டில் வாழ்ந்தவர்.

நபித்துவம் அருளப்பட பத்து ஆண்டுக்கு முன் பிறந்தார். அதாவது இவர் பிறக்கும்போது நபி(ஸல்) அவர்களுக்கு 30வயது. பத்று, உஹத், அகழி, ஹுதைபிய்யா ஒப்பந்தம், மக்கா வெற்றி, ஹுனைன் போன்ற யுத்தங்களில் கலந்து தனது போர்த் திறமைகளை நிரூபித்தார். தபூக் யுத்தத்திற்கு நபி(ஸல்) அவர்கள் சென்ற போது மதீனாவிற்கு இவரையே தமது பிரதி நிதியாக நியமித்தார்கள். பத்று யுத்தத்தின் பின்னரே பாத்திமா (ரலி)யுடன் திருமண வாழ்வில் இணைந்தார்கள்.

## குடும்ப வாழ்க்கை

அலி (ரலி) அவர்களின் முதல் மனைவி நபி (ஸல்) அவர்களின் மகள் பாத்திமா(ரலி) ஆகும். அவர்கள் உயிரோடு இருக்கும் வரை வேறு எந்த பெண்ணையும் இவர் திருமணம் செய்யவில்லை. இத்தம்பதியினருக்கு ஹஸன், ஹுஸைன், முஹ்ஸின் ஆகிய ஆண் குழந்தைகளும் செய்னப், உம்முகுல்தூம் ஆகிய பெண்குழந்தைகளும் பிறந்தன.

பாத்திமா (ரலி)யின் மரணத்தின் பின் இவர் திருமணம் செய்த பெண்கள்

01) உம்முல் பனீன் பின்து ஹிஸாம் இவர் மூலம் அப்பாஸ், ஜ.்.பர், அப்துல்லாஹ், உதுமான் ஆகிய பிள்ளைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்மூலம் உபைதுல்லாஹ், அபூபக்கர் ஆகியோரும்

03) அஸ்மா பின்து உமைஸ் என்பவரை மணம் செய்து அவர் மூலம் யஹ்யா, முஹம்மத் எனும் குழந்தைகளும்
04) ஸஹ்பா எனப்படும் உம்மு ஹபீப் பின்து றபீஆவை மணம் செய்து அவர் மூலம் உமர், றுகையா ஆகிய குழந்தைகளும்
05) உம்மு சயீத் பின்து உருவா வை மணம் செய்து அவர் மூலம் உம்முல் ஹஸன், றம்லா ஆகிய குழந்தை களும்
06) இம்றஉல்கைஸ் பின் அதி என்பவரின் மகளையும்
07) உமாமா பின்து அபுல்ஆஸ் என்பவரையும் மணம் செய்து அவர் மூலம் முஹம்மத் அல்அவ்ஸத் என்ற குழந்தையும் இவருடைய இல்வாழ்வுக்கு பரிசுகளாகக் கிடைத்தன

பல பெண்களை திருமணம் செய்த போதும் அவர்களில் பலரை விவாகரத்து செய்திருந்தார். இவர் மரணமாகும் போது நான்கு மனைவிமார்களும் சில அடிமை பெண்களும் இவர் வசம் இருந்தனர். இவருக்கு 14ஆண் பிள்ளைகளும் 17பெண் பிள்ளைகளும் இருந்தனர் என இப்னு ஜரீர் குறிப்பிடுகின்றார்.

## சிறப்புக்கள்

அலிப் புலி எனக் கூறும் அளவுக்கு வீரர் என பெயர் பெற்றவர் இவர். ஹிஜ்ரத் சென்ற போது நபி(ஸல்) அவர்கள் மக்கா குறைஷிகள் தம்மிடம் நம்பிக்கையாக கொடுத்த பொருட்களை திருப்பிக் கொடுப்பதற்காக தனது படுக்கையில் இவரையே அமர்த்திச் சென்றார்கள். அப்போது அவரது வயது 23 ஆகம்.

பத்று யுத்தத்தில் முன்னனியில் நிறுத்தப்பட்ட இவர் வலீத் பின் உத்பாவை கொன்றார். உத்பா பின் றபீஆவை கொல்வதிலும் பங்கெடுத்தார்.

உஹது களத்தில் தமது திறமையை வெளிப்படுத்தினார். அகழியை பாதுகாத்து நின்ற போது அதனை உடைத்து முன்னேற முயன்ற அம்று பின் வுத்துல்ஆமிரியைக் கொன்றார். கைபர் போரின் போது முஸ்லீம்களின் கொடியைத் தாங்கி நின்றார். தபூக்கிற்கு நபி(ஸல்) அவர்கள் சென்ற போது மதீனாவிற்கு அமீராக இவரை நியமித்துச் சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமர்(ரலி) சொன்னார்கள் "அலி(ரலி) எங்களில் சிறந்த நீதிபதி. உமர் வெளியே சென்றால் அவரே மதீனாவுக்கு அமீர். அவரே சிறந்த ஆலோசகர். தனது மகள் உம்முகுல்தூமை இவர் உமர்(ரலி) அவர்களுக்கு திருமணம் முடித்துக் கொடுத்தார்.

உதுமான்(ரலி) கலீபாவாக பதவியேற்றபோது அவருக்கு ஆலோசகராக கடமைபுரிந்தார். உதுமான்(ரலி)யை முற்றுகை இட்ட போது அவருக்கு பக்கத்தில் உதவியாளராக இருந்தார்.

பொது நிதியில் கண்டிப்பானவர் அவர். உறவினர் எவராயினும் பொதுச் சொத்தை பயன் படுத்த அவர் அனுமதிக்கவில்லை, அவரது தம்பியான அகீல் கலீபாவிடம் வந்து பைத்துல் மாலில் இருந்துமேலதிகமாகக் கேட்ட போது பைத்துல் மாலில் இருந்து உனக்கு மேலதிகமாகத் தரமுடியாது. சற்று பொறு எனக்கு ஏதாவது பணம் வந்தால் அதை உனக்குத் தருகிறேன் என்றார். இப்பதிலால் ஆத்திரமுற்ற அகீல் தமது சகோதரனை விட்டுப் பிரிந்து அவரது எதிராளியான முஆவியாவிடம் சிரியா சென்று சேர்ந்தார்.

தனது மக்களான ஹஸன், ஹுஸைன் ஆகியோர்கட்கும் எந்தப் பாகுபாடும் காட்டமாட்டார் இந்தப் புனிதர்.

## கலீபாவாகப் பதவியேற்பு

இஸ்லாமிய உலகின் முக்கிய கலீபா ஒருவர் குழப்பவாதிகளால் கொல்லப்பட்ட நிலையில் அடுத்ததாகப் பதவியேற்பவர் சுகந்தமானதொரு சூழலில் பதவியேற்க, கடமை புரிய முடியும் என எதிர்பார்க்க முடியாது.

உதுமான்(ரலி) கொலை செய்யப்பட்டதுடன் ஆயுததாரிகளின் கைகளே மதீனாவில் ஓங்கியிருந்தன. அவர்கள் கூறுவதே சட்டமாக இருந்தது. அவர்கள் நினைப்பதே நடக்கவேண்டி இருந்தது. அவர்களின் தலைவனாகிய ஹாபிகி பின் ஹர்புவின் கட்டுப்பாட்டிலேயே மதீனா இருந்தது. இவர்களில் ஒரு பகுதியினர் கலீபா பதவியை ஏற்குமாறு அலி(ரலி)யை வேண்டிய போது அவர் அதனை விரும்பாது ஒழித்துக்கொண்டார். பின்னர் முக்கிய நபித் தோழர்கள் வலியுறுத்திய போது ஒருவாறு சம்மதம் தெரிவித்தார்.

ஹிஜ்ரி 35துல் ஹஜ் பிறை 18 வெள்ளிக் கிழமை கலீபா உதுமான்(ரலி) ஷஹீதாக்கப்பட்டபின்னர் ஐந்து நாட்கள் கழிந்த நிலையில் பிறை 24வியாழக்கிழமை தல்ஹா, சுபைர் போன்றமுக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஹாபாக்களுடன் பலரும் புதிய கலீபாவுக்கு "பைஅத்" செய்தனர். பின்னர் வெள்ளிக்கிழமை பொதுமக்கள் பைஅத் செய்தனர்.

கிளர்ச்சிக்காரர்களின் முக்கியஸ்தரான அஷ்தர் என்பவரே முதலில் பைஅத் செய்தவரென்றும் இவரின் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே தல்ஹா. சுபைர் போன்றவர்கள் பைஅத் செய்தனர் என்றும் கூபா வாசிகள் கூறினர். நிர்ப்பந்த நிலையிலும் ச:.து பின் அபீவக்காஸ், இப்னு உமர், இப்னு சலாம் போன்ற சிரேஷ்ட சஹாபாக்கள் பைஅத் செய்யவில்லை. சில மதீனா வாசிகள் பைஅத் செய்யாமலேயே சிரியாவுக்கு ஓடினர்.

## முதல் பிரசங்கம்

பதவியேற்ற கலீபா அலி(ரலி) அவர்கள் தனது முதல் பிரசங்கத்தை நிகழ்த்தினார்கள். இறைவன் நன்மை எது? தீமை எது? என்பதைத் தெளிவுபடுத்தும் நேர்வழிகாட்டும் வேதத்தை எமக்கு அருளியுள்ளான். நன்மைகளை எடுத்து நடவுங்கள்; தீமைகளை விட்டு விலகுங்கள்; இறைவன் எத்தனையோ விடயங்களை தடுத்துள்ளான்; அதில் ஒரு முஸ்லிமுடைய கண்ணியத்தையே முதன்மைப்படுத்தியுள்ளான். முஸ்லிம்களின் உரிமைகள் தீனின்பால் பிணைந்துள்ளன; ஒரு முஸ்லிம் என்பவன் மற்ற முஸ்லிம்கள் அவனது நாவினால், கையினால் நிம்மதிபெற வேண்டும் எந்த ஒரு முஸ்லிமையும் அவன் துன்பம் செய்யக் கூடாது.

உங்கள் முன் மனிதர்கள் உள்ளனர்; உங்கள்பின்னால் மறுமை உங்களை எதிர்பார்த்துள்ளது; அல்லாஹ்வின் அடியார்கள் விடயத்திலும் அவனது நாடுகள் விடயத்திலும் அவனைப் பயந்து நடவுங்கள் உங்களின் மிருகங்கள், இடங்கள் உட்பட அனைத்து விடயங்களிலும் கேள்வி கேட்கப்படுவீர்கள். அல்லாஹ்வுக்கு வழிபட்டு நடவுங்கள்; அவனுக்கு மாறு செய்யாதீர்கள்; நன்மையான ஒரு விடயத்தைக் கண்டால் அதை எடுத்து நடவுங்கள். தீயதைத் தடுத்துக்கொள்ளுங்கள் "நீங்கள் பூமியில்(மக்காவில்) பலவீனமான மிகச்சிறுபான்மையினராக இருந்து உங்களை எம் மனிதரும் இறாய்ஞ்சிக்கொண்டு போய்விடுவரோ என்று நீங்கள் அஞ்சிக்கொண்டிருந்த சமயத்தில் அவன் உங்களுக்கு (மதீனாவில்) இடமளித்து தன் உதவியைக்கொண்டு உங்களைப் பலப்படுத்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்தமான ஆகாரங்களை உங்களுக்கு அளித்ததையும் நினைத்துப் பாருங்கள் இதற்கு நீங்கள் நன்றி செலுத்துவீர்களாக!

விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மோசம் செய்யாதீர்கள்; தவிர நீங்கள் செய்வது அக்கிரமம் என அறிந்து கொண்டே உங்களிடம் உள்ள அமானிதப் பொருள்களிலும் மோசம் செய்யாதீர்கள். (அன்பால் 26, 27ம் வசனங்கள்)
என்ற அல்-குர்ஆன் வசனத்தைக் கூறி தனது பிரசங்கத்தை நிறைவு செய்தார்கள்.

## புதிய கலீபாவுடன்

பைஅத் முடிந்த நிலையில் முக்கிய சஹாபாக்கள் சிலர் கலீபாவிடம் வந்து கலீபா உதுமான்(ரலி) அவர்களைக் கொலை செய்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். அப்போது அவர்களிடம் கலீபா நீங்கள் கூறும் விடயத்தை நான் அறியாதவனல்ல; இன்று அவர்களின் பலம் ஓங்கியுள்ளது; ஒரு பெரும் கூட்டம் அவர்கள் பின்னால் உள்ளது; எம்மைவிட மேலோங்கியுள்ள அவர்களுக்குத் தண்டனை கொடுக்க முடியும் என நீங்கள் காண்கின்றீர்களா? எனக் கலீபா கேட்க இல்லை என அவர்கள் பதிலளித்தார்கள். பொறுத்திருக்குமாறு கலீபா அவர்களிடம் வேண்டிக் கொண்டார். சஹாபாக்கள் மிகத்திருப்தியுடன் வெளியேறினார்கள்.

## கலீபாவின் முதற்பணிகள்

எந்தவொரு ஆட்சியாளரும் தாம் பதவிக்கு வந்த பின்னர் தமக்கு வாய்ப்பானவர்களை பதவியிலமர்த்தவே விரும்புவர். கலீபா அவர்களும் இதற்கு விதிவிலக்கானவரல்லர். ஒரு குழப்ப நிலையில் அதுவும் பிரதேசங்கள் கருத்து வேறுபட்ட நிலையில் பதவியேற்ற கலீபா தமக்கு வாய்ப்பானவர்களை கவர்னர்களாக நியமிக்க வேண்டியது அவசியமே! இதனையே கலீபா அலி(ரலி) அவர்கள் தனது முதற்கடமையாகச் செய்தார்கள். உதுமான்(ரலி) அவர்களால் நியமிக்கப்பட்ட பெரும்பாலானோரின் கவர்னர் பதவிகளை நீக்கினார்கள்.

கலீபா உதுமான்(ரலி) கொல்லப்பட்ட போது கூபாவின் கவர்னராக அபூமூஸா அல் அஷ்அரி அவர்களும், பஸராவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல்லாஹ் பின் ஆமிர் அவர்களும், எகிப்தில் அப்துல்லாஹ் பின் ச.்.து பின் அபீ சறஹ் அவர்களும், சிரியாவில் முஆவியா அவர்களும், ஜோர்தானில் அபுல் அ.்.வர் பின் சுப்யான் அவர்களும், பலஸ்தீனில் அல்கமா பின் ஹகீம் அவர்களும், ஆதர்பீஜானில் அஷ்அத் பின் கைஸ் அவர்களும், கின்ஸரீன் பகுதிக்கு ஹபீப் பின் மஸ்லமா அவர்களும்,

பைத்துல் மாலுக்கு பொறுப்புதாரியாக உக்பத் பின் அம்று அவர்களும், மதீனாவின் நீதிபதியாக ஸெய்து பின் தாபித் அவர்களும் கடமையாற்றியதாக தபரீ குறிப்பிடுகிறார்.

கலீபா அலி(ரலி) அவர்கள் பதவியேற்றதுடன் மேற்கூறிய பகுதிகளில் கவர்னர்களாகப் பதவி வகித்தவர்களை பெரும்பாலும் பதவி நீக்கிவிட்டு உதுமான் பின் ஹுனைப்(ரலி) அவர்களை பஸராவுக்கும் உமாறா பின் ஷிஹாப் அவர்களை கூபாவுக்கும் கைஸ் பின் ச.்.து பின் உபாதா அவர்களை எகிப்துக்கும் உபைதுல்லாஹ் பின் அப்பாஸ் அவர்களை எமனுக்கும் சிரியாவுக்கு சஹ்ல் பின் ஹனீப் என்பவரையும் நியமித்தார்கள்.

**சவால்**

கலீபாவின் இந்த நியமனங்கள் இஸ்லாமிய உலகில் சலசலப்புக்களை ஏற்படுத்தின. கலீபாவின் கவர்னர்களை ஏற்றுக்கொள்ள பலர் மறுப்புத் தெரிவித்தனர்.

சிரியாவில் உமர்(ரலி) அவர்கள் காலம் முதல் பதவி வகித்தவர் முஆவியா அவர்கள். மக்கள் ஆதரவு நிறைந்தவராகக் காணப்பட்டார். கலீபாவால் சிரியாவுக்கு நியமிக்கப்பட்ட சஹ்ல் அவர்கள் சிரியா நோக்கிச் சென்று கொண்டிருந்த போது தபூக் என்ற இடத்தில் முஆவியாவின் குதிரைப்படை வழிமறித்தது. அவரிடம் நீங்கள் யார் எனக் கேட்க தான் கவர்னர் என்றார். எப்பிரதேசத்திற்கு என மீண்டும் வினவ சிரியாவுக்கு என்றதும் உதுமான்(ரலி) அவர்கள் உங்களை நியமித்திருந்தால் வாருங்கள் இன்றேல் திரும்பி விடுங்கள் எனக்கூறியதும் நிலைமையை புரிந்து கொண்டு அவர் திரும்பிவிட்டார்

கைஸ் அவர்கள் எகிப்து சென்றதும் சிலர் அவரை எதிர்க்க முயன்றதுடன் உதுமானின் கொலையாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொண்டாலும் பல பிரதேசங்களில் நிலைமை கலீபாவுக்கு சாதகமாக அமைந்திருக்கவில்லை.

LEND ... TION

## தீச்சுவாலை

கலீபாவாக இருந்த ஹஸரத் உதுமான்(ரலி) அவர்கள் கொல்லப்பட்டதும் கொலை செய்தவர்கள் சுதந்திரமாக நடமாடித்திரிந்ததும் கவர்னர்களாக இருந்தவர்கள் பதவி நீக்கப்பட்டதும் தல்ஹா(ரலி), சுபைர்(ரலி) போன்ற சிரேஷ்ட சஹாபாக்கள் கலீபா பதவி ஏற்றவுடன் அவரிடம் விடுத்த கொலைஞர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் கவனத்தில் எடுக்கப்படாமல் உள்ளது என்ற கவலையும் ஒரு போராட்டமாக வெடிக்குமளவுக்கு நிலைமை மோசமானது. உபாதத்பின் ஸாமித்(ரலி), அபுதர்தாஉ(ரலி), அபூஉமாமா(ரலி) போன்ற சிரேஷ்ட சஹாபாக்களும் இப்போராட்டத்தில் குதித்தனர்.

சிரியாவின் கவர்னர் முஆவியா(ரலி) அவர்கள் கலீபா உதுமான்(ரலி) கொலை செய்யப்பட்ட போது அணிந்திருந்த இரத்தம் தோய்ந்த ஆடையைக்காட்டி மக்களை கலீபா அலிக்கெதிராகத் தூண்டிக் கொண்டிருந்தார்.

## தல்ஹாவும் சுபைரும்

சிரேஷ்ட சஹாபாக்களான இவர்கள் கலீபா உமர்(ரலி) நியமித்த கலீபாவைத் தேர்ந் தெடுக்கும் குழுவில் இருந்தவர்கள். அஷ்தர் என்பவன் வாள் முனையில் இவர்கள் இருவரையும் கலீபா அலிக்கு பைஅத் செய்ய வைத்தான். இவர்கள் இருவரும் மேலும் சில சிரேஷ்டசஹாபாக்களும் சென்று புதிய கலீபாவிடம் கொலைஞர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் நிலைமை இவர்கட்குத்திருப்தியளிக்கவில்லை; கொலைஞர்கள் கையில் தேசம் இருப்பது போல் கவலை இவர்கட்கு! கலீபாவிடம் இருவரும் சென்று தாங்கள் மக்காவுக்குப் போவதாக அனுமதி பெற்று மதீனாவை விட்டு வெளியேறினார்கள்.

MARUTHAMUNAI
PUBLIC LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜமல் யுத்தம்

ஹஸரத் உதுமான்(ரலி) கொல்லப்பட்டதும் கொலை செய்தவர்கள் சுதந்திரமாக நடமாடித்திரிந்ததும் ஏன் சிலவேளை சட்டத்தை அவர்கள் கையில் எடுத்துக் கொண்டதும் கலீபா அலி(ரலி) அவர்களிடம் இவர்கள்மீது சட்டநடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டபோது தற்போதைய நிலையில் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என அவர் கையை விரித்ததும் சிரேஷ்ட சஹாபாக்கள் பலர் கலீபா மீது அதிருப்தி கொள்ள வைத்தது எனப் படித்துள்ளீர்கள்.

ஹஸரத் உதுமான்(ரலி) கொல்லப்பட்டபோது ஹஜ்ஜுக்கு சென்றிருந்த ஆயிஷா(ரலி) அவர்கள் அங்கிருந்து கொண்டே நிலைமையை அவதானித்த போது பெரிதும் கவலையடைந்தார்கள். இஸ்லாமிய சட்டம் நடைமுறையில் இல்லாத நிலை கண்டு வேதனை அடைந்தார்கள்.

சிரேஷ்ட சஹாபாக்களான தல்ஹா(ரலி), சுபைர்(ரலி) போன்றவர்களும் மக்கா சென்று ஆயிஷா நாயகியிடம் நிலைமையினை சுட்டிக்காட்டி பஸரா இராஜ்ஜியத்திற்குச் சென்று அங்குள்ள மக்களின் துணையுடன் பஸராவின் நிருவாகத்தை பொறுப்பெடுத்து அங்கிருந்து கொண்டே கொலைஞர்கட்கு தண்டனை வழங்கமுடியும் எனவும் சுட்டிக்காட்டினர்.

எனவே ஆயிஷா(ரலி) அவர்கள் பஸராவை நோக்கிச் செல்ல ஆயத்தமானதுடன் அதற்கான அழைப்பையும் விடுத்தார்கள்.

## நபிகளாரின் மனைவிமார்கள்

ஆயிஷா(ரலி) அவர்களின் அழைப்பை ஏற்று பஸரா செல்ல ஹப்ஸா(ரலி) அவர்களும் ஆயத்தமானார்கள். ஆனால் அவரது சகோதரர் அப்துல்லாஹ் அதற்கு இணங்க மறுத்து அவரைத் தடுத்து விட்டார்

மற்றொரு உம்முஹாத்துல் மு∴மினான உம்மு சல்மா ஆயிஷா நாயகி அவர்களிடம் இப்பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். எனினும் அவ்வேண்டுகோள் ஆயிஷா நாயகியால் நிராகரிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழைப்பை ஏற்றுக்கொள்ளல்

பஸறாப் பயண அழைப்பை இப்னு ஆமிர், உமையாக் கிளையினர் போன்றோர் ஏற்றனர். உதுமான்(ரலி) அவர்கள் கால யமன் கவர்னரான யஃலா பின் உமையா என்பவர் 600 ஒட்டகை மற்றும் அறுநூறாயிரம் வெள்ளி நாணயங்களுடன் சென்று மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

பஸராவில் உதுமான்(ரலி) காலத்தில் பதவி வகித்த இப்னு ஆமிரும் மக்கா வந்துசேர்ந்தார். கலீபாவுக்கு எதிரான ஒரு பெரும் கூட்டம் மக்காவில் ஒன்று சேர்ந்தது.

சுமார் ஆயிரம் பேர் கொண்ட படையினை யஃலா ஏற்பாடு செய்தார். அஸ்கர் என்ற ஒட்டகையை வாங்கி அதில் அம்பாரி ஒன்றைச் செய்து ஆயிஷா(ரலி) செல்வதற்கு ஏற்பாடு செய்தார் யஃலா.

பஸராவை அண்மித்த போது கலீபா அலியின் கவர்னர் உதுமான் பின் ஹுனைப் அவர்கள் இம்ரான் பின் ஹுஸைன், அபுல்அஸ்வத் துஅலி ஆகியோரை அனுப்பி தாங்கள் வந்த நோக்கம் என்னவென விசாரித்து வருமாறு அனுப்பினார். அப்போது அவர்களிடம் ஆயிஷா(ரலி) அவர்கள் "ஹஸரத் உதுமான்(ரலி) அவர்கள் சங்கையான மாதத்தில் சங்கையான பூமியில் அநியாயமாக கொல்லப்பட்டார்கள். அதற்கு பழிவாங்குவதைக் கேட்கவே நாம் வந்துள்ளோம்" எனக்கூறி அனுப்பினார்கள். பின்னர் அவர்கள் இருவரும் தல்ஹா(ரலி)அவர்களிடம் வினவ ஆயிஷா(ரலி) கூறிய பதிலையே அவரும் கூற நீர் உதுமானுக்கு பைஅத் செய்தவரல்லவா எனக் கேட்க ஆம் வாள் என் கழுத்தில் வைக்கப்படவே நான் அவ்வாறு செய்தேன் எனக்கூறினார். சுபைர்(ரலி) அவர்களும் இந்தப் பதிலையே கூறினார்.

## பஸரா வீழ்ச்சி

பஸராவின் மேற்குப் பகுதியில் ஒட்டகைச் சந்தை இருந்த "மிர்பத்" எனுமிடத்தில் ஆயிஷா(ரலி) அவர்களின் படை முகாமிட்டது. பஸராவைச் சேர்ந்த பலர் ஆயிஷா(ரலி) தரப்பில் இணைந்தனர். ஹிஜ்ரி 36றபீஉல் ஆகிர் பிற்பகுதியில் நடைபெற்ற சிறிய ஜமல் யுத்தம் எனப்படும் சிறுசண்டையில் கலீபா உதுமானின் கொலையுடன் சம்மந்தப்பட்ட எழுபது பேர் உட்பட அவர்களின் தலைவர்களில் ஒருவரான ஹுகைம் பின் ஜபலா என்பவரும் கொல்லப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலீபா விரைவு

பஸராவில் நிலமை மோசமாவதைக்கண்ட கலீபா அலி(ரலி) அவர்கள் 900பேர் கொண்ட ஒரு படையைத்திரட்டிக் கொண்டு பஸரா நோக்கிப் புறப்பட்டார். மேலும் கூபா வாசிகளுக்கு முஹம்மத் பின் அபூபக்கர் மூலம் செய்தி அனுப்பி அவர்களையும் தம் தரப்பில் இணைந்து கொள்ளுமாறு செய்தி அனுப்பினார்கள்.

றபதாவிலிருந்து புறப்பட்ட கலீபா அலியும், அவரது சேனையும் பஸராவிலுள்ள "தீகார்" என்ற இடத்தை வந்தடைந்தது. கவர்னர் உதுமான் பின் ஹுனைப் கலீபாவைச் சந்தித்து நிலைமையை எடுத்து விளக்கினார். தீகாரில் தரித்திருந்த கலீபா கூபாவுக்கு தான் அனுப்பிய செய்திக்கு விடையை எதிர்பார்த்துக் காத்திருந்தார். அங்கிருந்த மக்கள் கலிபாவுடன் இணைந்து போரிட தமது விருப்பத்தை தெரிவித்தனர்.

## சமாதானத் தூது

கலீபா அலி(ரலி) அவர்கள் க.்.காஉ பின் அம்று என்பவரைத் தெரிந்து அவரை தல்ஹா(ரலி), சுபைர்(ரலி) போன்ற எதிர் தரப்பினரைச் சந்தித்து சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டார். பஸரா சென்ற க.்.காஉ ஆயிஷா நாயகியைச்சந்தித்து நீங்கள் வந்துள்ள நோக்கம் என்ன என வினவ மனிதர்கட்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தவே என்றார். பின்னர் அங்கு தல்ஹா, சுபைர் ஆகியவர்களை அழைத்து வினவ தாங்களும் சமாதானத்தை நாடுவதாகவே கூறினர்.

இரு தரப்பினரிடையே நடை பெற்ற இப்பேச்சுவார்த்தை பல்வேறு விடயங்களை ஆராய்ந்த பின் சமாதானத்தை மேற்கொள்வதென்ற முடிவு எட்டப்பட்டது. கலீபாவுக்கு விடயம் அறிவிக்கப்பட்டதும் அவரும் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். இரு தரப்பினரிடையேயும் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

## குழப்பவாதிகளின் அச்சம்

சண்டையிட வந்தவர்கள் சமாதானமாகப் போகின்றனரே என்ற கவலை உதுமான்(ரலி)யைக் கொன்றவர்கட்கு ஏற்பட்டது. சமாதானம் தமக்கு ஆபத்தில் முடியும் என்ற பயம் அவர்கட்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பவாதிகளான அஷ்தர், இப்னு சபா, சுறைஹ் பின் அவ்பா, சாலிம் பின் த.்லபா, அல்பா போன்ற விஷமிகள் ஒன்று சேர்ந்து சதியாலோசனையில் ஈடுபட்டனர். கலீபா அலி எமது விடயமாக இதுவரை எவ்வித நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தவில்லை. அவரை எமக்கு ஆபத்தானவராகவே கருத வேண்டும். அவரையும் கொல்வதே எமக்குப் பாதுகாப்பானது என்றனர். இவ்வாலோசனையை நிராகரித்த இப்னு சபா இரு தரப்பினரையும் சமாதானமாக விடாமல் தடுப்பதிலேயே வெற்றி உள்ளது எனக்கூறினான்.

இரு தரப்புத்தலைவர்களும் சமாதானம் வந்து விட்ட களிப்பில் இருந்தனர். ஒருவரையொருவர் சந்தித்துப் பேசினர். நல்லுறவை வெளிப்படுத்தினர். சமாதானமாகப் பிரிந்து செல்ல ஆயத்தமாகினர்.

## சதி

அதிகாலையில் படையினர் தூக்கத்திலிருந்தபோது ஹஸரத் அலி(ரலி) தரப்பில்வந்த சதிகாரர்கள் திடீரென எதிர்தரப்பினைத் தாக்கினர். விபரம் தெரியாத நேரத்தில் ஆயுதத்தால் பதிலளிப்பதைத் தவிர வழியில்லாத நிலைமையில் எங்கோ ஒரு மூலையில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

இருதரப்பிலும் பெரியவர்கள் யுத்தத்தை நிறுத்த எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அலி(ரலி) தரப்பில் இருபதாயிரம் வீரர்களும் ஆயிஷா(ரலி) தரப்பில் முப்பதினாயிரம் பேரும் போரில் குதித்தனர்.

யுத்தம் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. இரு தரப்பிலிருந்தும் தலைகள் உருண்டு கொண்டிருந்தன. தனதுமகன் ஹஸன்(ரலி)யைக் கட்டியணைத்த தந்தை அலி(ரலி) அவர்கள் நடைபெறும் நிகழ்வுகளுக்கு கவலை தெரிவித்தவராக "இதற்குப் பின் எந்த நன்மையைத்தான் நாம் எதிர்பார்க்க முடியும்' எனக் கேட்டு வருந்தினார்.

யுத்த களத்தில் ஆயிஷா பிராட்டியார் தமது ஒட்டகையில் இருந்து கொண்டிருந்தார். பஸராவின் நீதிபதியாக இருந்த க.்பு என்பவர் அல்-குர்ஆனை உயர்த்திப்பிடித்து இதன் கட்டளைக்கு அடிபணியுமாறு வேண்டினார். இதனை அவதானித்த வம்பன் இப்னு சபா தரப்பினர் அவர் மீது அம்பெறிந்து அவரைக் கொன்றனர். ஆயிஷா(ரலி) அவர்கள் உதுமான்(ரலி)யின் கொலைஞர்கட்கெதிராக பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள்.

MARUTHAMUNAI PUBLIC LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிழந்தவர், கையிழந்தவர், உயிரிழந்தவர் என சோகங்கள் நிறைந்து கொண்டிருந்தன. ஒட்டகம் நின்று கொண்டிருக்கும் வரை யுத்தம் நிறைவு பெறாது எனக்கண்ட அலி(ரலி) தரப்பினர் அதனைக் கொல்ல முயன்றனர். அதனை நெருங்கியவர்களின் கைகளைத் துண்டித்துக் கொண்டிருந்தார் மர்வான் பின் ஹகம் அவரும் காயங்களுக்குள்ளானார். அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கட்கு சுமார் 37காயங்கள் ஏற்பட்டன. இறுதியில் ஒட்டகையின் கால்களை ஒருவர் துண்டிக்க அது கீழே வீழ்ந்தது ஆயிஷா(ரலி) வீற்றிருந்த அம்பாரி மீது பதிந்திருந்த ஈட்டிகளால் அது முள்ளம்பன்றிபோல் காட்சியளித்தது.

ஆயிஷா நாயகியிடம் வந்த அவரது சகோதரர் முஹம்மத் பின் அபூபக்கர் ஏதும் காயம் ஏற்பட்டதா என வினவ அவர் இல்லை என்றார். பின்னர் அவரைப் பத்திரமாக அழைத்துச் சென்று பஸராவில் அப்துல்லாஹ் பின் கலப் என்பவர் வீட்டில் தங்கச் செய்யுமாறு முஹம்மத் பின் அபூபக்கரிடம் கலீபா அலி(ரலி) வேண்டுகோள் விடுத்திருந்தார். ஆயிஷா நாயகி உரிய கௌரவத்துடன் யுத்த மைதானத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டார்.

## தல்ஹா, சுபைர் கொல்லப்படல்

யுத்தம் முடிந்து திரும்பிக் கொண்டிருந்த சுபைர்(ரலி) அவர்கள் வாதிஸ் ஸிபாஉவில் தூங்கிக் கொண்டிருந்தார். அவரைப் பின்தொடர்ந்த அம்று பின் ஜர்மூஸ் என்பவன் அவரைக் கொன்றான். அதே மைதானத்தில் தல்ஹா(ரலி) அவர்களும் கொல்லப்பட்டார்கள்.

## யுத்தத்தின் முடிவு

ஒவ்வொரு தரப்பிலும் சுமார் ஐயாயிரம் வீதம் மொத்தம் பத்தாயிரம் பேர் கொல்லப்பட்டனர். யுத்த வெற்றியைத் தொடர்ந்து பஸராவைச் சேர்ந்த மக்கள் கலீபாவுக்கு பைஅத் செய்தனர். இது ஹிஜ்ரி 36ஜுமாதுல் ஆகிர் பிறை 14 திங்கள் அன்று நிகழ்ந்தது.

பஸராவின் புதிய கவர்னராக இப்னு அப்பாஸ்(ரலி) நியமிக்கப்பட்டார். ஸியாத் பின் அபூசுப்யான் நிதியமைச்சராக நியமனம் பெற்றார்.

PUBLIC LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலி(ரலி)யின் பெருந்தன்மை

பின்னர் அன்னை ஆயிஷா இருந்த வீட்டுக்குச் சென்று கலீபா அவர்கள் அவரது சுகநலனை விசாரித்ததுடன் அவர் பஸராவை விட்டுச் செல்வதற்கான வசதிகள் அனைத்தையும் செய்து கொடுத்தார். இருவரும் யுத்தத்தில் சஹீதானவர்கள் பற்றி கவலைப்பட்டதுடன் அவர்களுக்காகப் பிரார்த்தனையும் புரிந்தனர்.

## ஸிப்பீன் யுத்தம்

பஸராவில் எழுந்த கிளர்ச்சியை அடக்குவதில் வெற்றிகண்ட கலீபா அலி(ரலி) அவர்கள் சிரியாவில் ஹஸரத் முஆவியா அவர்கள் தனக்கு பைஅத் செய்யாமலும் தன்னால் சிரியாவுக்கு நியமிக்கப்பட்ட கவர்னருக்கு இடம் கொடுக்காமலும் இருப்பதுடன் தனக்கெதிராக பிரச்சாரம் செய்வதையும் கவனத்திற் கொண்டு சிரியாவுக்குச் சென்று அவரை அடக்கி கிலாபத்தை அங்கும் நிலைநாட்ட வேண்டும் என உறுதி பூண்டார்.

கலிபா உதுமான்(ரலி) அவர்களின் உமையா பரம்பரையைச் சேர்ந்த முஆவியா உதுமான்(ரலி) கொலை செய்யப்பட்ட போது அணிந்திருந்த இரத்தம் தோய்ந்த ஆடையையும் அச்சம்பவத்தின் போது விரலை இழந்த அவரது மனைவியின் விரலையும் டமஸ்கஸ் பள்ளியில் வைத்துக் கொண்டு கலீபாவுக் கெதிராக உக்கிரமான பிரச்சாரத்தை மேற் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது மேலும் அங்குள்ள மக்கள் உதுமான்(ரலி) அவர்களின் கொலையாளிகள் தண்டிக்கப்படும் வரை தங்கள் மனைவி மார்களுடன் சேர்வதில்லை; விரிப்புகளில் உறங்குவதுமில்லை என சபதம் எடுத்திருந்தனர். அந்தளவு சிரியாவில் மக்கள் உணர்ச்சி பூர்வமாக்கப்பட்டார்கள்.

## கலீபாவின் தூது

ஜமல் யுத்தத்தின் பின்னர் கூபாவில் நிலைகொண்டிருந்த கலீபா அவர்கள் ஜரீர் பின் அப்துல்லாஹ் அல்புஜலி மூலம் முஆவியாவுக்கு செய்தி ஒன்றை அனுப்பினார். அதில் முஹாஜிர்கள், அன்சாரிகள் ஏனைய முஸ்லீம்கள் பைஅத் செய்தது போல் அதனைப்பின்பற்றுமாறும் கேட்டுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலீபாவின் கடிதத்தை பெற்றுக் கொண்ட முஆவியா(ரலி) அவர்கள் அம்று பின் ஆஸ்(ரலி) அவர்களுடன் கலந்தாலோசித்து விட்டு பைஅத் செய்வதாயின் கொலையாளிகள் கொல்லப்பட வேண்டும் இல்லையேல் அவர்கள் எம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என நிபந்தனை விதித்தனர். ஜாபிர் அவர்கள் கலீபாவிடம் சென்று முஆவியாவின் நிபந்தனைகளைக் கூறினார்.

## ஸிப்பீனை நோக்கி

கலீபா அலி(ரலி) அவர்கள் கூபாவில் பதில் கடமையாற்ற அன்ஸாரிகளில் ஒருவரான அபூமஸ்ஊத் உக்பா பின் அம்று என்பவரை நியமித்து விட்டு 50,000 போர் வீரர்களுடன் புறப்பட்டு "நஜிலா" எனுமிடத்தில் முகாமிட்டார். பின்னர் அங்கிருந்து சிரியாவை நோக்கி வந்தார்.

கலீபா அலி(ரலி) அவர்களே படையுடன் வருகிறார் என்ற செய்தி அறிந்து முஆவியா(ரலி) அவர்கள் மந்திராலோசனை செய்த பின்னர் தானும் படையெடுத்து செல்வதென முடிவெடுத்து சிரியாவின் பல்வேறு பிரதேசங்களின் தலைவர்களுடன் சேர்ந்து 70,000 வீரர்களுடன் வந்து புறாத் (யூப்பிரடிஸ்) நதியின் கிழக்கேயுள்ள ஸிப்பீன் எனுமிடத்தில் முகாமிட்டார்.

## மீண்டும் தூது

இதுவரை காலமும் இஸ்லாத்தின் எதிரிகளுடன் போரிட்ட மக்கள் தமக்குள்ளேயே போரிடப் போகின்றனரே என்ற கவலை கலீபாவுக்கு! கிலாபத் ஆட்சி சின்னாபின்னமாகும் ஆபத்தை அனுமதிக்க முடியாது. எனவே மீண்டும் மூவரடங்கிய தூதுக்குழுவை ஹஸரத் முஆவியாவிடம் அனுப்பி வைத்தார் கலீபா. ஹஸரத் அலி(ரலி) அவர்களின் தூதுக்குழு சென்று எவ்வளவோ பேசியும் இணங்கி வரவில்லை முஆவியா அவர்கள். யுத்தத்தை தவிர வேறுவழியில்லை என்ற நிலை கலீபாவுக்கு!

## யுத்தம் ஆரம்பம்

சுமார் இரண்டு மாதங்கள் நீடித்த முற்றுகையும் பேச்சு வார்த்தையும் தோல்வியில் முடிய ஹிஜ்ரி 37 ஸபர் பிறை ஒன்று புதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமை யுத்தம் வெடித்தது. இரு தரப்பினரும் உக்கிரமான சண்டை! இருதரப்பிலும் பாரிய உயிரிழப்புக்கள்!

எனினும் கலிபா அலியின் வீரர்கள் உத்வேகத்துடன் போராட முஆவியாவின் படை வீரர்கள் பின் வாங்க ஆரம்பித்தனர். பாரிய அழிவிலிருந்து தப்பிக்கொள்ளும் முகமாக ஹஸரத் முஆவியாவின் ஆலோசகர் அம்று பின் ஆஸ் (ரலி) அவர்கள் அல்-குர்ஆனின் தீர்ப்புக்கு கட்டுப்படுவோம் என்ற கோஷத்துடன் அல்-குர்ஆனை ஈட்டியில் குத்தி உயர்த்தினார். குர்ஆனின் சமாதானத்தை ஏற்போம் என்ற முஆவியா தரப்பின் வாதத்தின் முன் யுத்தத்தை முன்னெடுக்க ஹஸரத் அலியின் தரப்பினர் பின்வாங்கினர். இது ஒரு மோசடிச் செயல்; அல்-குர்ஆனை பின்பற்ற அல்ல! அழிவிலிருந்து தப்பும் தந்திரம் இது. யுத்தத்தைத் தொடருங்கள் எனப் பணித்தார் ஹஸரத் அலி(ரலி). குர்ஆனுக்கு மேலாக நாம் போரிடமாட்டோம் என ஆயுதத்தை கீழே வைத்தனர் அந்த நீதிக்காய் போராடிய தீன் தாரிகள்; யுத்தம் நின்றது.

"நபியே! வேதத்தில் ஒரு பாகம் கொடுக்கப்பட்டவர்களை நீ கவனிக்கவில்லையா? அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டே அவர்களுக்கிடையில் தீர்ப்பளிக்க அவர்கள் அழைக்கப்பட்ட போது அவர்களில் ஒரு பிரிவினர் புறக்கணித்து விலகிக் கொண்டார்கள்."

(ஆல-இம்ரான் 23ம் வசனம்)

என்ற குர்ஆனின் குற்றச்சாட்டுக்கு ஆளாக விரும்பாத அந்த சஹாபாப் பெருமக்கள் அல்-குர்ஆனின் நீதியை நிலைநாட்ட உறுதி பூண்டார்கள்.

இஸ்லாமிய வரலாற்றில் துக்கமான நிகழ்வு இந்த சிப்பீன் யுத்தமாகும். முஆவியா(ரலி) அவர்களின் தரப்பிலிருந்து 45000பேரும் அலி(ரலி)தரப்பிலிருந்து 25000பேரும் மரணித்தனர் என ஒரு சாரார் கூறுகின்றனர்.

பைஹகீ இது பற்றி கூறும்போது இந்த யுத்தத்தின் போது முஆவியா(ரலி) தரப்பிலிருந்து 60000பேர் பங்கு பற்றியதாகவும் அதில் 20000பேர் கொல்லப்பட்டதாகவும் அலி(ரலி)தரப்பில் 120000பேர் கலந்து கொண்டதாகவும் அதில் 40000பேர் கொல்லப்பட்டதாகவும் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவர்கள்

ஸிப்பீனில் ஓடிய இரத்த ஆறு ஓய்ந்து குர்ஆன், ஹதீஸின் அடிப்படையில் உம்மத்தில் ஏற்பட்ட பிளவுக்குத் தீர்ப்புக் கூற அலி(ரலி) அவர்கள் தரப்பிலிருந்து அபூமூஸா அல் அஷ்அரி(ரலி) அவர்களும் முஆவியா(ரலி) தரப்பிலிருந்து அம்று பின் ஆஸ்(ரலி) அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அலி(ரலி)க்கு அபூமூஸல் அஷ்அரி(ரலி) மீது திருப்தி இல்லாத போதும் அதனை மாற்றியமைக்க முடியாத சூழலில் கலீபா இருந்தார். இரு தரப்பினரும் "தூமதுல்ஜன்தல்" எனுமிடத்தில் கூடி எதிர்வரும் ரமழான் மாதம் தீர்ப்புக் கூறுவதென்றும் அவர்கட்கு உதவியாக ஒவ்வொரு தரப்பிலிருந்தும் நானூறு பேர் ஒன்று சேர்வர் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

ஹிஜ்ரி 37சபர் 13புதன் கிழமை இம் முடிவு எடுக்கப்பட்ட பின் ஸிப்பீனில் கூடிய இரு தரப்பினரும் தத்தம் இடங்களுக்கு திரும்பிச் சென்றனர்.

## தீர்ப்பை எதிர்பார்த்து

கூபாவுக்கும் சிரியாவுக்கும் இடையிலுள்ள "தூமதுல் ஜன்தல்" எனும் இடத்தில் அல்லது வாகிதி என்ற சரித்திராசிரியரின் கருத்துப்படி அத்ரஹ் என்ற ஜோர்தானிலுள்ள ஒரு இடத்தில் தீர்ப்பு கூறும் வைபவம் இடம் பெற்றது.

இரு தரப்பிலிருந்தம் சிரேஷ்டதரத்திலுள்ள சஹாபாப் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

## நீதிபதிகள்

இரு நீதிபதிகளும் கலந்துரையாடி கூபாவாசிகளும் ஏனய இஸ்லாமிய உலக மக்களும் முஆவியாவை ஏற்கமாட்டார்கள். கலீபாவாக அலியை சிரிய மக்கள் ஏற்கமாட்டார்கள். எனவே இருவரையும் தவிர்த்து இஸ்லாமிய கிலாபத்திற்கு பொதுவாக புதிய ஒருவரை தெரியுமாறு தீர்ப்புக் கூறுவோம் என இரு நீதிபதிகளும் முடிவெடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலில் அபூ மூஸா

இஸ்லாமிய உலகு எதிர்பார்த்துக் காத்திருந்த தீர்ப்பை வெளியிட முதலில் எழுந்த அபூமூஸல் அஸ்அரி(ரலி) அவர்கள் நாங்கள் இருவரும் இருவரையும் பதவியிலிருந்து நீக்குகிறோம்; புதியஒருவரைத் தெரியுமாறு வேண்டுகிறோம் என அறிவித்தார்.

## அம்று பின் ஆஸ்

அம்று பின் ஆஸ்(ரலி) அவர்கள் எழுந்து அபூமூஸா அல்அஷ்அரி(ரலி) தீர்ப்புக் கூறியதுபோல் அவர் தரப்பு அலி(ரலி) அவர்களை நானும் பதவி நீக்குகிறேன். ஆனால் முஆவியா(ரலி) அவர்கள் தொடர்ந்து இஸ்லாமிய உலகின் கலீபாவாக பதவி வகிப்பார் என அறிவித்தார். அம்று பின் ஆஸ்(ரலி) அவர்களின் எதிர்பாராத இம் முடிவைக்கேட்ட அபூமூஸா அவர்கள் அம்று மோசடி செய்து விட்டார் எனப்பகிரங்கமாக அறிவித்தார். இத்தீர்ப்பில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக இஸ்லாமிய உலகும் அங்கு கூடியிருந்த மக்களும் பெரும் அதிருப்தியுற்றனர். மக்களின் பிரச்சினையை தீர்க்க புறப்பட்டவர்கள் பிரச்சினைகளை உருவாக்கி நின்றனர். இத்தீர்ப்பு அர்த்தமற்றதாகியது. அபூமூஸா மக்கா சென்றார். மக்கள் அவரவர் இடம் திரும்பினார்கள். இத் தீர்ப்பின் பின் ஹஸரத் அலியின் பலம் சற்று வீழ்ச்சி கண்டது; முஆவியாவின் கை ஓரளவு ஓங்கியது.

## கவாரிஜ்கள் தோற்றம்

"காரிஜ்" என்ற சொல்லின் பன்மைச் சொல் "கவாரிஜ்" என்பதாகும். கவாரிஜ் என்ற அறபுச் சொல்லுக்கு வெளியேறிச் சென்றோர் என்பது பொருள். ஸிப்பீன் யுத்தத்தின் பின் இரு நடுவர்களின் தீர்ப்பை கலீபா அலி(ரலி) அவர்கள் ஏற்றுக் கொள்வதாக அறிவித்ததை எதிர்த்து "அல்லாஹ்வை தவிர தீர்ப்புக் கூறும் அதிகாரம் யாருக்குமில்லை" எனக் கூறி ஹஸரத் அலியின் தரப்பிலிருந்து வெளியேறிச் சென்றவர்களையே "கவாரிஜ்" என அழைக்கப்படுகிறது. ஸிப்பீன் யுத்தம் ஏற்படுத்திய பாரிய விளைவுகளில் இந்த வெளியேற்றம் குறிப்பிடத் தக்கதாகும்.

ஸிப்பீன் யுத்தத்திலிருந்து முஆவியாவின் படை சிரியா திரும்பிக் கொண்டிருந்த போது ஹஸரத் அலியின் தரப்பினர் கூபா திரும்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த போது அலி(ரலி)யின் தரப்பிலிருந்தவர்கள் சுமார் 12000 பேர் கூபா செல்லாமல் அவர் தரப்பிலிருந்து வெளியேறி "ஹறூறா" எனும் இடத்தில் குடியேறினர். கலீபா சில பிரமுகர்களை அனுப்பி இவர்களுடன் விவாதித்ததை அடுத்து பலர் "ஹறூறா"வை விட்டு நீங்கி கூபா வந்து சேர்ந்தனர். எஞ்சியோர் அங்கிருந்து சென்று நஹர்வான் எனுமிடத்தில் குடியேறி வாழ்ந்தனர்.

கவாரிஜ்களாகிய தங்களைத்தவிர மற்றவர்கஸெல்லாம் "காபிர்கள்" எனப் பிரகடனப்படுத்திய அவர்கள் அவர்களுக்கு துன்பம் செய்வதையும் கொலை செய்வதையும் நல்லவைகளாகக் கருதினர்; பாரிய அழிவுகளைச் செய்தனர். இவர்களின் அழிவு வேலைகள் எல்லை கடந்து சென்றது. அவர்களின் அழிவு வேலைக்கு பின்வரும் சம்பவத்தை குறிப்பிடலாம்.

அவர்கள் பல முஸ்லிம்களைக் கொலை செய்தனர். அவ்வாறு அவர்கள் கொலை செய்யப்பிடித்தவர்களில் சிரேஷ்ட நபித்தோழரான கப்பாப் பின் அறத்(ரலி) என்பவரின் மகனான அப்துல்லாஹ்வும் ஒருவர். இவரும் ஒரு நபித்தோழர்! இவர் தனது மனைவியுடன் கழுதையில் பயணம் மேற்கொண்டார். அவரிடம் சென்று அதட்டி அவரை நிறுத்தினர். அவரிடம் நீர் யார்? என வினவ அவர் தனது பெயரைக் கூறினார். அவரிடம் நீர் உனது தந்தையிடம் இருந்து பெற்ற ஹதீஸைக் கூறு எனக் கேட்க குழப்பம் தொடர்பான ஹதீஸ் ஒன்றைக் கூறினார். இந்த ஹதீஸை அவர் கூறியபின் நான்கு கலீபாக்கள் பற்றி அவரது அபிப்பிராயத்தைக் கேட்க அவர்கள் பற்றி சிறப்பாகக் கூறினார். மனிதர்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தபின் ஹஸரத் அலி(ரலி) பற்றி உங்கள் அபிப்பிராயம் என்னவென மீண்டும் கேட்க அவர் உங்களைவிட அல்லாஹ்வை நன்கு அறிந்தவர்; மார்க்கத்தை பாதுகாப்பதில் உறுதியானவர் எனக் கூற நீர் மனிதர்களின் பெயர்பார்த்து கூறுகின்றீரே தவிர அவர்களது செயல்களைப் பார்த்து நீ கருத்துக் கூறவில்லை. உன்னை யாரையும் கொல்லாத முறையில் கொல்வோம் எனக் கூறி அவரை பிடித்து இழுத்து அவரை மாட்டை அறுப்பது போல் படுக்கவைத்து அறுத்துக் கொலை செய்தனர்.

அதுமட்டுமா! அவரது கர்ப்பினியான மனைவியிடம் வந்து அவரையும் அறுத்ததுடன் அவரது வயிற்றை பிளந்து பிள்ளையைவெளியே எடுத்தனர் அந்தக் கொடிய அரக்கர்கள். என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிடுங்கள்; கொல்லாதீர்கள். நான் கர்ப்பினியாகவுள்ளேன் எனக்கதறிய அம்மாதரசியின் வார்த்தைகள் அந்தக் கொடியவர்களின் உள்ளத்தைச் சென்றடையவில்லை.

இவ்வாறான செய்திகளை அறிந்த மக்கள் கலீபா அலியிடம் இந்தக் கொடியவர்களின் தீங்கிலிருந்து மக்களைப்பாதுகாருங்கள் என வேண்டினர். உடனே கலீபா தான் சிரியாவுக்கு படையெடுக்க உத்தேசித்ததை நிறுத்தி விட்டு கவாரிஜ்களின் கொட்டத்தை அடக்க டைக்ரஸ் நதிக்கரையிலுள்ள நஹர்வான் நகரை நோக்கிப் படையெடுத்தார்.

## தூதுவர் கொலை

ஹஸரத் அலி(ரலி) அவர்கள் படையெடுக்க முன் ஹாரிஸ் பின் முர்ரதுல் அபதி என்ற தூதுவரை அனுப்பி அவர்களை குழப்பத்தை விட்டுவிட்டு நேர்வழியின்பால் திரும்புமாறு அழைத்தார். எனினும் அந்த அரக்கர்களோ சென்ற தூதுவரையே கொலை செய்து விட்டனர். இச் செய்தி கலீபாவை எட்டியதும் அவர் படையை தயார் செய்து "நஹர்வான்" நோக்கி வந்தார்.

பல் வேறு பிரிவுகளாக வந்த கலீபாவின் படை கவாரிஜ் கூட்டத்தினரை நோக்கி "சரணடையுமாறும் கொலை செய்தவர்களை ஒப்படைக்குமாறும்" வேண்டினர். நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் உங்கள் தரப்பினரைக் கொலை செய்தோம்; யாரையும் காட்டித்தரமாட்டோம் என்றனர்.

கலீபாவின் சரணடையும் வேண்டுகோளை பலர் ஏற்க அவர்களின் தலைவரான அப்துல்லாஹ் பின் வஹப் அற்றாஸிபி தலைமையில் ஆயிரத்துக்குட்பட்டவர்களே ஒன்றுசேர்ந்தனர். கலீபா அலியின் படையால் அவர்கள் முறியடிக்கப்பட்டதுடன் அவர்களின் தலைவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். இந்த யுத்தம் ஹிஜ்ரி 37 ஷவ்வாலில் நடைபெற்றது.

## கவாரிஜ்கள் பற்றி காருண்ய நபி

கவாரிஜ்கள் பற்றி பல ஹதீஸ்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு ஹதீஸை இங்கு குறிப்பிடுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் "இறுதிக் காலத்தில் ஒரு கூட்டத்தினர் வருவார்கள். அவர்கள் சிறு வயது இளைஞர்களாயிருப்பார்கள். முதிர்ச்சியற்ற புத்தியுடையவர்களாயிருப் பார்கள். பூமியிலே சிறந்த (அல்-குர்ஆன்) வசனங்களை எடுத்துக் கூறுவார்கள். அவர்கள் வேட்டைப் பிராணியிலிருந்து அம்பு வெளிப்பட்டு சென்றுவிடுவதைப் போல் இஸ்லாத்திலிருந்து வெளியேறிச்சென்று விடுவார்கள். அவர்களுடைய இறைவிசுவாசம் அவர்களின் தொண்டைக்குழிகளைத் தாண்டிச் செல்லாது. அவர்களை எங்கு நீங்கள் சந்தித்தாலும் கொன்று விடுங்கள். ஏனெனில் அவர்களைக் கொன்றவர்களுக்கு மறுமையில் நற்பலன் கிடைக்கும்.

அறிவிப்பவர்: அலி(ரலி) ஆதாரம் : புஹாரி 3611

## எகிப்து முஆவியா கையில்

ஸிப்பீன் யுத்த நடுவர்களின் தீர்ப்பும் கவாரிஜ்களுக்கு எதிரான போரும் ஹஸரத் அலி அவர்களுக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தின. இவ்வேளை சிரியாவின் கவர்னர் அந்தஸ்தில் இருந்த முஆவியா இத்தீர்ப்பின் பின் போட்டி கலீபா அந்தஸ்துக்கு உயர்ந்தார். அவரை சிரியா மக்கள் கலீபாவாகவும் பைஅத் செய்தனர்.

இவ்வேளை எகிப்து ஹஸரத் அலி தரப்பு கவர்னர் முஹம்மத் பின் அபூபக்கர் அவர்களின் பொறுப்பில் இருந்தது. ஆனால் முஆவியா அவர்கள் தனது முக்கிய ஆலோசகரான அம்று பின் ஆஸ் அவர்களை எகிப்தை கைப்பற்றுமாறு வேண்டியதுடன் அவரை நிரந்தரமான கவர்னராகவும் நியமித்தார்.

எகிப்துக்கு படையெடுத்த அம்று பின் ஆஸ்(ரலி) கலீபா அலியின் கவர்னர் முஹம்மத் பின் அபூபக்கரைக் கொன்றதுடன் எகிப்தின் ஆட்சியைப் பொறுப்பேற்றார். இதன் மூலம் எகிப்து, சிரியா என்பன முஆவியாவின் ஆட்சியின் கீழ் வந்தன.

எகிப்தின் வெற்றியைத் தொடர்ந்து பஸரா, ஹிஜாஸ், எமன் போன்ற பிரதேசங்களுக்கும் தனது படையை அனுப்பி நாடு பிடிக்கும் படலத்தை முஆவியா ஆரம்பித்தபோதும் அது அவர்களுக்கு பெரும் வெற்றியை அளிக்கவில்லை. ஆனால் இதனால் மனித உயிர்கள் பலியாகிக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதான ஒப்பந்தம்

ஹஜ்ரி 40ம் ஆண்டு ஹஸரத் அலி, முஆவியா இருவருக்குமிடையே ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் பேரில் இரு தரப்பினரும் இனிமேல் சண்டை பிடிப்பதில்லை எனவும் ஈராக்கின் அதிகாரம் கலீபா அலியிடத்திலும் சிரியாவின் அதிகாரம் ஹஸரத் முஆவியாவிடத்திலும் இருப்பதெனவும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன் மூலம் இஸ்லாமிய உலகில் ஒரு நிம்மதி நிலை ஏற்பட்டது.

## கலீபா கொல்லப்படல்

நஹர்வான் சண்டையில் கவாரிஜ்கள் கொல்லப்பட்டமைக்கு பழிக்கு பழிவாங்க நினைத்தனர் கவாரிஜ்களில் சிலர். அலி(ரலி), முஆவியா(ரலி), அம்று பின் ஆஸ்(ரலி) ஆகிய மூவரும் உயிர் வாழும் வரை தமக்கு விமோசனம் இல்லை எனவும் கருதினர். இம்மூவரையும் கொன்றொழிப்பதே மேலான கைங்கரியம் எனக்கருதிய அப்துர்றஹ்மான் பின் முல்ஜம், புறக்பின் அப்துல்லாஹ் தமீமி, அம்று பின் பக்று தமீமி ஆகிய கொடியவர்கள் முறையே ஹஸரத் அலி(ரலி), முஆவியா(ரலி), அம்று பின் ஆஸ்(ரலி) ஆகியோரைக் கொல்வதற்கு சபதம் எடுத்தனர்.

ஹிஜ்ரி 40றமழான் மாதம் பிறை 17வெள்ளிக்கிழமை இப்னு முல்ஜம் கூபாவில் ஹஸரத் அலியைக் கொல்வதெனவும், புறக் என்பவன் சிரியா சென்று ஹஸரத் முஆவியாவையும் அம்று பின் பக்று எகிப்து சென்று அம்று ப்னுல் ஆஸ் அவர்களையும் அதே தினத்தில் கொல்வதெனவும் முடிவெடுத்து புறப்பட்டுச் சென்றனர்.

கூபாவந்த வம்பன் இப்னு முல்ஜம் தனக்கு உதவியாக பர்தான், ஷபீப் ஆகியோரை இணைத்துக் கொண்டான். குறிப்பிட்ட நாளில் கலீபா அவர்கள் தமது வீட்டிலிருந்து மஸ்ஜிதுக்கு வரும் வழியில் வம்பர்கள் உட்கார்ந்திருந்தனர். அதிகாலை வேளையில் கலீபா அவர்கள் தொழுகை. தொழுகை என்று படுத்தவர்களை எழுப்பிக் கொண்டிருக்க பாய்ந்த இப்னு முல்ஜமும் ஷபீபும் அவரை வெட்டினர். கலீபாவின் தலையிலிருந்து இரத்தம் ஓடியது. "விர்தான்" கொல்லப்பட ஷபீப் தப்பியோடினான். இப்னு முல்ஜம் கைது செய்யப்பட்டான்.

வெட்டப்பட்ட அன்றே கலீபா வபாத்தாக அவரது மக்களான ஹஸன்(ரலி), ஹுஸைன்(ரலி), இப்னு ஜஃபர்(ரலி) ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிப்பாட்டினர். ஹஸன்(ரலி) தொழுகையை நடத்தினார். கவாரிஜ்கள் அவரது உடம்பை திருடிவிடுவர் எனப் பயந்து பொது மயானத்தில் அடக்கம் செய்யப்படாமல் அரசாங்க செயலக வளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மிகவும் சோதனை மிகுந்த காலப்பகுதியில் ஆட்சி செய்த கலீபா அலி(றழி) அவர்கள் நான்கு வருடங்களும் 9மாதங்களும் ஆட்சி செய்தார்கள். தங்களது 63வது வயதில் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

ஹஸரத் முஆவியாவைக் கொலை செய்வதற்கு சிரியா சென்ற புறக் பின் அப்துல்லாஹ் என்பவனால் அவரைக் கொலை செய்ய முடியவில்லை. அவரைக் கொல்ல முயன்ற போது அவன் கைது செய்யப்பட்டு பின்னர் கொல்லப்பட்டான்.

அம்று பின் ஆஸ்(ரலி)யைக் கொல்வதற்கு எகிப்து சென்ற அம்று பின் பக்ர் என்பவன் அன்று சுகவீனம் காரணமாக அம்று பின் ஆஸ்(ரலி) அவர்கள் மஸ்ஜிதுக்கு வராமல் அவரது பாதுகாவல் பிரிவைச் சேர்ந்த காரிஜா என்பவரை தொழுவிக்குமாறு ஏவியிருந்தார். அவரை இவன் அம்று பின் ஆஸ் என நினைத்துக் கொன்று விட்டான். அவனும் பின்னர் கொல்லப்பட்டான்.

## ஹஸன்(ரலி) பதவியேற்பு

கலீபா அலி(ரலி) அவர்கள் கொல்லப்பட்டிருந்த நிலையில் அவரிடம் அவரது புதல்வர் ஹஸன்(ரலி) அவர்களைக் கலீபாவாக நியமிக்குமாறு கேட்கப்பட்ட போது அவர் அதனை நிராகரித்து நபி(ஸல்) அவர்கள் எவ்வாறு நியமனம் செய்யாமல் வபாத்தானார்களோ அதேபோல் நானும் நடந்து கொள்ள விரும்புகிறேன் என்றார். பின்னர் அவர் காலமாகிவிட்டார்.

கலீபா அலியின் மரணத்தைத் தொடர்ந்து ஆஜர்பீஜானில் கவர்னராக இருந்த ச.்து பின் உபாதாவின் மகன் கைஸ் என்பவரே முதலில் ஹஸன்(ரலி) அவர்களுக்கு பைஅத் செய்தார். அதனைத் தொடர்ந்து ஏனைய மக்கள் பைஅத் செய்தார்கள்.

## யுத்த நிர்ப்பந்தம்

புதிதாக பதவியேற்ற கலீபா ஹஸன்(ரலி) அவர்களிடம் அவருக்கு முதன்முதலாக பைஅத் செய்த கைஸ் என்பவர் சிரியாவை நோக்கி யுத்தம் செய்யுமாறும் தன்னிடம் உள்ள 40000 வீரர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காக தங்களை அர்ப்பணிக்க ஆயத்தமாக இருப்பதாகவும் கூறினார். வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது போல் கடல் போன்ற படையணி சிரியாவை நோக்கிச் சென்றது. ஆனால் கலீபா ஹஸனுக்கோ அப்படையை அனுப்ப விருப்பமே இருக்கவில்லை.

MARUTHAMUNAI PUBLIC LIBRARY

## சமாதான தூது

கலீபா ஹஸன்(ரலி) அவர்களின் நேசக் கரத்தை பலப்படுத்த விரும்பிய முஆவியா(ரலி) அவர்கள் அவருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அப்துல்லாஹ் பின் ஆமிர், அப்துர் ரஹ்மான் பின் சமுரா ஆகியோரை அனுப்பினார். சில நிபந்தனைகளின் பேரில் முஸ்லிம் சமூகம் தங்களுக்குள் இரத்தம் ஓட்டப்படுவதை நிறுத்துவதற்காக கலீபா பதவியை முஆவியாவிற்கு விட்டுக் கொடுக்க கலீபா ஹஸன்(ரலி) முன்வந்தார். இந்த யோசனையை அவரது சகோதரர் ஹுஸைன்(ரலி) ஏற்றுக் கொள்ளாத போதும் கலீபா ஹஸன்(ரலி) முன்வந்து தனது பதவியைத் துறந்ததுடன் தனது படைத் தளபதியான கைஸ் அவர்கட்கு இதற்குப்பின் முஆவியாவின் கட்டளைப்படி செயற்படும் படி அறிவித்தார்.

## ஆமுல் ஜமாஆ

கலீபா பதவியை ஹஸன்(றழி) அவர்கள் விட்டுக் கொடுத்த ஹிஜ்ரி 40ம் ஆண்டு இஸ்லாமிய வரலாற்றில் "ஆமுல் ஜமாஆ" (ஐக்கிய வருடம்) என அழைக்கப்படுகின்றது. எனக்கு பின் கிலாபத் முப்பது வருடங்கள் நிலைக்கும் அதன் பின் ஆட்சியாளர்கள் அரசர்களாக மாறுவர் என்ற நபி(ஸல்) அவர்களின் ஹதீஸ் குறிப்பிடும் முப்பது வருட ஆட்சியில் கலீபா ஹஸனின் ஆறு மாத கால ஆட்சியும் அடங்கும் என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

## அருள்வாக்கு

ஒரு முறை நபி(ஸல்) அவர்கள் மிம்பரில் ஏறினார்கள். ஹஸன்(ரலி) அவர்களும் பக்கத்தில் இருந்தார். அப்போது நபி(ஸல்) அவர்கள் மக்களே! இந்த எனது மகன் ஒரு தலைவர்! இரண்டு பெரும் கூட்டத்தினர் மத்தியில் இவர் சமாதானத்தை ஏற்படுத்துவார்; என்று அன்று கூறிய ஆரூடம் இச்செயலால் உண்மையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. கலீபாக்கள் காலம் ஒரு கண்ணோட்டம்

## அரசியல் நிருவாக அமைப்பு

PUBLIC LIBRARY

நபி(ஸல்) அவர்களின் வபாத்தின் பின் இஸ்லாமிய ஆட்சியின் முதல் தலைவர் கலீபா என அழைக்கப்பட்டார். நபி(ஸல்) அவர்களின் பிரதிநிதியாக மார்க்க, உலக விவகாரங்களில் பொதுத் தலைவராக இவர் கருதப்பட்டார். முதல் கலீபாவைத் தொடர்ந்து பதவி வகித்த இரண்டாவது கலீபா அமீறுல் முஃமினீன் எனும் பெயரில் அழைக்கப்பட்டார். அவர்களைத் தொடர்ந்து வந்த அனைத்து கலீபாக்களும் அமீறுல் முஃமினீன் (விசுவாசிகளின் தலைவர்) எனும் பெயரிலேயே அழைக்கப்பட்டனர்.

கலீபாக்கள் எவருக்கும் அமைச்சர்கள் இருக்கவில்லை. ஆனால் சிரேஷ்ட சஹாபாக்கள் உதவியாளர்களாகவும், ஆலோசகர்களாகவும் இருந்துள்ளனர். அபூபக்கர்(ரலி) அவர்கள் ஆட்சியில் உமர்(ரலி) அவர்கள் நீதிக்கும் ஸகாத் விநியோகத்திற்கும் பொறுப்பாக இருந்தார். அபூ உபைதா பின் ஜர்ராஹ்(ரலி) நிதிக்குப் பொறுப்பாக இருந்தார். உமர்(ரலி) நிருவாகத்தில் உதுமான்(ரலி) அவர்களும் அலி(ரலி) அவர்களும் முக்கிய ஆலோசகர்களாக இருந்தனர். அலி(ரலி) அவர்கள் நீதிபதியாகவும் செயலாளராகவும் கடமை புரிந்தார்.

## செயலாளர்கள்

கலீபா அபூபக்ர்(ரலி) ஆட்சியின் போது உதுமான்(ரலி)அவர்கள் அவரது செயலாளராக இருந்தார். உமர்(ரலி) தனது செயலாளர்களாக செய்த் பின் தாபித்(ரலி) அவர்களையும் அப்துல்லாஹ் பின் அர்கம்(ரலி) அவர்களையும் நியமித்தார். உதுமான்(ரலி) அவர்கள் மர்வான் பின் ஹகம் அவர்களையும் அலி(ரலி) அவர்கள் அப்துல்லாஹ் பின் றாபிஃ அவர்களையும் செயலாளர்களாக நியமித்தனர்.

## தீவான்கள்

தீவான் என்பது ஒரு பாரசீகச் சொல். கொப்பி, ஏடு என்பதைக் குறிக்கும். நிருவாக விவகாரங்கள், சட்டங்கள், கணக்குகள் பதியும் பேரேடுகள் ஆரம்பத்தில் இப்பெயரில் அழைக்கப்பட்டன. பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரேடுகள் வைக்கப்பட்டிருந்த இடத்தை தீவான் என அழைத்தனர். அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் செய்யும் வேலையை தீவான்கள் செய்தன. இஸ்லாமிய ஆட்சியில் தீவானை முதலில் உருவாக்கியவர் கலீபா உமர்(ரலி) ஆகம்.

01) "தீவானுல் ஜுன்த்" எனப்படும் படையினருக்கான திணைக்களத்தை உருவாக்கி அதில் படைவீரர்களின் பெயர்கள் அவர்கட்கு வழங்கும் நிதிகள் என்பவற்றைப் பதியவைத்தார். நபி(ஸல்) அவர்கள் காலத்திலோ, அபூபக்கர்(ரலி) காலத்திலோ இவ்வாறான திணைக்களம் இருக்கவில்லை. போர் வீரர்கள் யுத்தத்தில் கிடைப்பவற்றில் 4:5ஐ பெற்றுக் கொண்டார்கள். ஆனால் கலீபா உமர்(ரலி) காலத்தில் பொருட்களும் நிலங்களும் அதிகமாக கிடைத்ததால் வீரர்கட்கு போதுமான சம்பளத்தை அவர் நிர்ணயித்து தீவானில் பதிந்து வைத்தார்.

02) "தீவானுல் கராஜ்" எனும் திணைக்களத்தை உருவாக்கி அதில் அரசுக்கு வரும் நிதிகளைப் பதிய வைத்தார். கராஜ் என்றால் யுத்தத்தில் வெற்றி கொள்ளப்பட்ட நிலங்கள் சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அதிலிருந்து பெறப்படும் வரியாகும். இவ்வாறான வருமானம் இத்திணைக்களத்தில் பதியப்பட்டது.

03) "தீவானுர் ரஸாயில்" எனும் திணைக்களத்தை உருவாக்கி அதில் ஓர் உத்தியோகத்தரை நியமித்து அவர் கவர்னர்களிடமிருந்து வரும் கடிதங்களுக்கு பதிலளித்துக் கொண்டிருந்தார்.

04) தீவானுல் அதாஉ:. (பணிக் கொடைப்பிரிவு) உதவி பெறுவோர் அவர்கட்கான தொகை என்பன பதியப்பட்டு ஒழுங்காக வழங்கப்படுவதை இத்திணைக்களம் உறுதி செய்தது. நபி(ஸல்) அவர்களின் உறவினர்கள், யுத்தங்களில் பாதிக்கப்பட்டோர் முன்னுரிமை பெற்றனர்.

## கவர்னர்கள்

கலீபா அபூபக்கர்(ரலி) காலத்தில் இஸ்லாமிய உலகின் தலை நகரமாக நபி(ஸல்) அவர்கள் காலத்தில் இருந்ததுபோல் மதீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனவ்வரா திகழ்ந்தது. இஸ்லாமிய உலகம் பரந்து விரிந்து சென்றதால் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு கவர்னர் நியமிக்கப்பட்டார். மாநிலத்திற்குப் பொறுப்பானவர் "வாலி" என்றும் மாவட்டத்திற்கு பொறுப்பானவர் ஆமில் எனும் பெயரிலும் அழைக்கப்பட்டனர். கலீபா அபூபக்கர்(ரலி) காலத்தில் மக்கா, தாயிப், சன்ஆ, ஹழர மவ்த், கஸ்வான், ஸபீத், நிம:., ஜன்தல், நஜ்ரான், ஜரஸ், பஹ்ரைன் ஆகிய மாநிலங்களில் கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர்.

கலீபா உமர்(ரலி) காலத்தில் இஸ்லாமிய உலகு வியாபித்ததால் அவ்வப் பிரதேசங்களிலும் கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர். அஹ்வாஸ், சஜஸ்த்தான், தபரிஸ்தான், குராஸான், கூபா, பஸரா, ஹிம்ஸ், டமஸ்கஸ், எகிப்து போன்ற பிரதேசங்களில் கவர்னர்கள் நியமனமாகினர்.

இக்கவர்னர்கள் அம்மாநிலத்தின் ஆட்சித் தலைவராக, தொழுகையில் இமாமத் செய்பவராக, தீர்ப்புக் கூறுபவராக நிதி வசூலிப்பவராக படைகளுக்கு தலைமை தாங்குபவராக கடமை புரிந்தனர்.

ஹஜ்ஜுகாலத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து வரும் மக்களிடம் அவர்களது கவர்னர்கள் பற்றியும் அவர்களது பதவிகள் பற்றியும் விசாரிப்பார். உங்கள் அமீர் உங்கள் நோயாளிகளைச் சென்று பார்க் கின்றாரா பலவீனர்களோடு எவ்வாறு பழகுகின்றார் எனறெல்லாம் அவர் விசாரிப்பார்.

## *அரசாங்க வருமானம்*

அரசாங்க நிதியின் காப்பகம் பைத்துல் மால் எனும் பெயரில் அழைக்கப்பட்டது. அதற்கு ஸகாத், ஜிஸ்யா, கறாஜ், கனீமத், பைஉ, உஷ்ர் போன்ற வழிகளில் நிதி பெறப்பட்டன.

## ஸகாத்

முஸ்லிம் செல்வந்தர்களிடமிருந்து இந்நிதி வசூலிக்கப்பட்டது. கால்நடைகள், தங்கம், வெள்ளி, விவசாய உற்பத்தி, வர்த்தகப் பண்டங்கள் போன்றவற்றிலிருந்து குறிப்பிட்ட அளவு வரியாக பெறப்பட்டதுடன் அல்-குர்ஆன் விதியாக்கியவாறு அதன் விநியோகமும் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜிஸ்யா

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழும் முஸ்லிம் அல்லாதவர்கள் அரசுக்குச் செலுத்தும் பாதுகாப்புவரி ஜிஸ்யா என அழைக்கப்பட்டது.

### கராஜ்

அரசாங்க நிலத்தில் விவசாயம் செய்தவர்களிடமிருந்து அறவிடப்பட்ட நிலவரி கராஜ என அழைக்கப்பட்டது.

### உஷ்ர்

அந்நிய நாடுளிலிருந்து இஸ்லாமிய நாட்டில்வந்து வியாபாரம் செய்யும் வர்த்தகரிடமிருந்து இவ்வரி அறவிடப்பட்டது இதற்கு சுங்கவரி என்றும் பெயரிடலாம். மொத்த வர்த்தகப் பொருட்களிலிருந்து 1:10வீதம் வரியாகப் பெறப்பட்டது. வருடத்தில் ஒருமுறையே இது அறவிடப்படும்.

கலீபா உமர்(ரலி) காலத்தில் கவர்னராக இருந்த அபூமுஸல்அஸ்அரி(ரலி) அவர்கள் முஸ்லிம் வியாபாரிகள் அந்நிய தேசத்திற்கு வியாபாரத்திற்குச் செல்லும் போது அவர்களிடமிருந்து வரி அறவிடப்படுவதாக அறிவித்தார். அவ்வாறாயின் அந்நியர் இஸ்லாமிய நாடுகளுக்கு வரும் போதும் அவ்வாறு அறவிடுமாறு கட்டளை பிறப்பித்தார்; கலீபா உமர்(ரலி) அவர்கள்.

### அல்பைஉ

எவ்வித சண்டையுமில்லாமல் அந்நியர்களிடமிருந்து முஸ்லிம்களுக்கு வந்துசேர்ந்த நிதி பைஉ என அழைக்கப்படும். இதில் 1:5 பங்கு பைத்துல் மாலை வந்து சேர்ந்தது.

### கனீமத்

அந்நியர்களுடன் நடந்த போரில் எதிரிகள் விட்டுச் சென்ற பொருட்கள் கனீமத் என அழைக்கப்படும். இதில் 1:5 அரசுக்கும் ஏனைய 4:5 படையினருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணயம்

இஸ்லாத்திற்கு முன் அறபிகள் பாரசீக, ரோம தங்க நாணயங்களையே உபயோகத்தில் கொண்டனர். அவர்களுக்கென்று தனியான நாணய அமைப்பு இருக்கவில்லை. நபி(ஸல்) அவர்கள் காலம் முதல் உமர்(ரலி) காலம் வரை இந்நாணய முறையே தொடர்ந்தது. கலீபா உமர்(ரலி) காலத்தில் ரோம. பாரசீக பிரதேசங்களில் ஏற்பட்ட இஸ்லாமிய வெற்றிகளைத் தொடர்ந்து ரோம, பாரசீக நாணயங்களுக்கிடையிலான வித்தியாசங்களைச் சமப்படுத்த முயன்றனர். ஏனெனில் பாரசீக திர்ஹத்தின் (வெள்ளி நாணயம்) நிறைகள் 10,12, 20கீராத்களாக இருந்தன. கலீபா உமர்(ரலி) அவர்கள் இம்முன்று நிறைகளையம் சமப்படுத்தி 42÷3=14 கீறாத் கொண்ட தங்க நாணயங்களை உருவாக்கினார்.

ஹிஜ்ரி 18ல் கலீபா உமர்(ரலி) அவர்கள் பாரசீக அமைப்பில் திர்ஹத்தை அடித்து அதில் சிலவற்றில் அல்ஹம்துலில்லாஹ் என்ற வசனத்தையும் சிலவற்றில் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் என்றும் இன்னும் சிலவற்றில் லாயிலாக இல்லல்லாஹுவஹ்தஹுஎன்ற வசனத்தையும் பொறித்தார்.

உதுமான்(ரலி) பதவியேற்ற பின் அடிக்கப்பட்ட வெள்ளி நாணயங்களில் அல்லாஹுஅக்பர் எனும் வாசகம் பொறிக்கப்பட்டது.

# . பாதுகாப்பு, சட்டம், ஒழுங்குகள்

## (அ) இராணுவம்

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் இராணுவம் ஓர் ஒழுங்கமைப்பில் காணப்படவில்லை. மார்க்கத்திற்குச் சேவை செய்வதற்காக நபி தூதர்(ஸல்) அவர்களின் அழைப்பின் பேரில் மக்கள் போருக்குத் தயாராகினர்.

உமர்(ரலி) அவர்கள் காலத்தில் இராணுவத்துக்கென தீவான் (திணைக்களம்) உருவாக்கப்பட்டு அவர்களின் பெயர்கள், சம்பளங்கள் என்பன பதியப்பட்டன. கலீபா உமர்(ரலி) காலத்தில் ஈராக், சிரியா, பலஸ்தீன், எகிப்து போன்ற பிரதேசங்களில் ஏற்பட்ட இஸ்லாமிய வெற்றியைத் தொடர்ந்து அங்கெல்லாம் புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. மேலும் பிரதான மார்க்கங்களில் இராணுவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வெடுப்பதற்கான நிலையங்கள், முகாம்கள், கோட்டைகள் நிறுவப்பட்டன.

இராணுவம், குதிரை வீரர்கள், காலாட்படை வீரர்கள் எனக் காணப்பட்டனர். இவர்கள் கவசங்கள், வாள்கள், ஈட்டிகள் என்பனவற்றை ஆயுதமாகப் பாவித்தனர்.

தக்பீர் சொல்லியவர்களாக குர்ஆன் வசனங்களை ஓதியவர்களாக வீரர்கள் போர்க் களம் புகுந்தனர். பெண்களும் படைகளில் இணைந்து வந்தனர். அவர்கள் பாதுகாப்பான இடங்களில் அமர்த்தப்பட்டனர். போர் நடைபெறும்போது றபான் அடித்து வீரர்களைத் தூண்டவும் நோயுற்றவர்களுக்கு உதவவும் இவர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

ஓர் இராணுவ வீரர் தனது குடும்பத்தைப் பிரிந்து நான்கு மாதங்களுக்கு மேல் இராணுவ சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை. நபி(ஸல்) அவர்களின் காலத்தில் அவர்களே பெரும்பாலும் படைத்தளபதியாகவும் கடமையாற்றினார்கள். ஆனால் கலீபாக்கள் காலத்தில் யுத்தங்களும் பிரதேசங்களும் வியாபித்ததை அடுத்து திறமைமிக்கவர்கள் தளபதிகளாக நியமனம் பெற்றனர்.

காலித் பின் வலீத்(ரலி), அபூஉபைதா பின் ஜர்ராஹ்(ரலி), ஸஃது பின் அபீவக்காஸ்(ரலி), முதன்னா பின் ஹாரிதா(ரலி) போன்றவர்கள் தளபதிகளாக நியமனம் பெற்றனர்.

## (ஆ) கடற்படை

கடல் கடந்து படைவீரர்களை யுத்தத்திற்கு அழைத்துச் சென்ற பெருமை கலீபா உமர்(ரலி) காலத்தில் பஹ்ரைனில் கவர்னராகவிருந்த அல்-அலாஉ பின் ஹழ்ரமி அவர்கட்கே சேரும். கலீபாவின் அனுமதியின்றி சுமார்12000 போர் வீரர்களை இவர் பாரசீக யுத்தத்திற்காக அழைத்துச் சென்றிருந்தார். பெரும் கனீமத்களுடன் இவர்கள் பஸரா திரும்பிய போதும் தாங்கள் சென்ற கப்பல்களை இழந்தே பஸரா திரும்பினர். இதைக் கேள்வியுற்ற கலீபா உமர்(ரலி) கடல் பயணத்தை நிறுத்தியதுடன் தனது அனுமதியின்றி படையை நடத்திச் சென்ற கவர்னரையும் பதவிநீக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷாம் யுத்தத்தின் போது உரோமர்கள் கப்பல்களைப் பயன்படுத்தியதனால் முஸ்லிம்களுக்கும் இவ்வாறு ஒரு படை தேவை என்பதை சிரியாவின் கவர்னராகவிருந்த முஆவியா அவர்கள் கலீபா உமருக்கு எழுதினார்கள். எனினும் அதன் ஆபத்தை உணர்ந்திருந்த கலீபா அவர்கள் அனுமதிக்கவில்லை.

பின்னர் உதுமான்(ரலி) அவர்கள் கலீபாவாகப் பதவியேற்றபின் முஆவியா அவர்கள் கடற்படையின் அவசியத்தை வலியுறுத்தவே அதனைக் கலீபா உதுமான் ஏற்று கடற் படையை நிறுவுமாறும் அனுமதியளித்தார். அப்துல்லாஹ் பின் கைஸ் இதன் தளபதியாகக் கடமையாற்றி சுமார் ஐம்பது கடல் கடந்த சண்டைகளில் ஈடுபட்டார். எகிப்தின் கவர்னர் அப்துல்லாஹ் பின் ச∴து பின் அபீ சறஹ் ரோமர்களுடன் சண்டையிட்டு பாரிய வெற்றியீட்டினார். சைப்ரஸ் தீவு போன்றவை கடற்படையினால் கிடைத்த வெற்றியின் பேறாகும்.

## (இ) பொலிஸ் பிரிவு

பொது மக்களின் உயிர், உடைமை, மானம் என்பவற்றை பாதுகாப்பதற்கும் சட்டம், ஒழுங்கைப் பேணவும், பாதுகாப்பு வழங்கவும் பொலிஸ் பிரிவு இக்காலத்தில் உருவாக்கப்பட்டது. கலீபா உமர்(ரலி) அவர்கள் இரவில் ஊர் சுற்றித்திரிந்து மக்கள் குறைகளை கவனிக்கக்கூடியவராக இருந்தார். ஆனால் உதுமான்(ரலி) அவர்கள் காலத்தில் பொலிஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட போதும் அலி(ரலி) அவர்கள் காலத்திலேயே இது ஒழுங்கமைக்கப்பட்ட பிரிவாக செயற்பட்டது. இதன் அதிகாரி "சாஹிபுஸ்ஸுர்தா" எனும் பெயரில் அழைக்கப்பட்டார்.

## (ஈ) கண்காணிப்புப் பிரிவு: (தாறுல் ஹிஸ்பா)

நன்மையை ஏவி தீமையை தடுத்தல், வாங்கல், விற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல், பொது ஒழுங்குக்கு குந்தகமாக நடப்பவர்களை நெறிப்படுத்தல், மிருக வதையை தடுத்தல், அளவை, நிறுவைகளில் மோசடி செய்வோருக்குத் தண்டனை வழங்குதல், தொழுகையை நிறைவேற்றுவதைக் கவனித்தல் போன்ற வேலைகளைச் செய்த தாறுல் ஹிஸ்பா எனப்படும் கண்காணிப்புப் பிரிவு கலிபாக்கள் காலத்தில் செயற்பட்டது. கலீபா உமர்(ரலி) அவர்களே இதனை உண்டாக்கியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி அமைப்பு

நபி(ஸல்) அவர்கள் காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு அவர்களே விசாரித்து தீர்ப்புக் கூறுபவராக இருந்தார்கள். இஸ்லாம் விரிவடைந்ததைத் தொடர்ந்து அங்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு குர்ஆன், ஹதீஸ், இஜ்திஹாத் அடிப்படையில் தீர்ப்புக்கூறுமாறு சில சஹாபாக்களுக்கு நபி(ஸல்) அவர்கள் அனுமதியளித்தார்கள்.

கலீபாவாக அபூபக்கர்(ரலி) பதவியேற்றபின் உமர்(ரலி) அவர்கள் நீதி விடயத்திற்கு நியமிக்கப்பட்ட போதும் நீதிபதி என்ற பெயரில் அவர் அழைக்கப்பட வில்லை. இரண்டு வருடங்கள் அவர் அப்பதவியில் இருந்த போதும் அவரிடம் எவரும் நீதி கேட்டு வரவுமில்லை. ஏனெனில் உமர்(றழி) மிகவும் கடுமையானவர் என்ற பயம் மக்களிடம் இருந்தது.

உமர்(ரலி) அவர்கள் கலீபாவாகப் பதவியேற்றபோது இஸ்லாமிய உலகு வியாபித்து இருந்ததால் அங்கெல்லாம் நீதிபதிகளை நியமிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்தது. எனவே அவர் அபூதர்தாஉ(ரலி) அவர்களை மதீனாவுக்கும் சுறைஹ் பின் ஹாரிஸ் அல் கின்தி அவர்களை கூபாவுக்கும் அபூமூஸல் அஸ்அரி அவர்களை பஸராவுக்கும் உதுமான் பின் கைஸ் பின் அபில்ஆஸ் அவர்களை எகிப்துக்கும் நீதிபதிகளாக நியமித்தார்கள்.

அறிவு, இறையச்சம், பேணுதல், நீதி ஆகிய தகைமைகளுடையவர்களே நீதிபதியாக நியமிக்கப்பட்டனர். குர்ஆன், ஹதீஸ், இஜ்திஹாத் அடிப்படையில் தீர்ப்புக் கூறுமாறு பணிக்கப்பட்டனர்.

இந்த நீதிபதிகளுக்கு எவ்வித செயலாளர்களும் நியமிக்கப்படவில்லை. வழக்குப் பதிவேடுகளும் ஏற்படுத்தப்படவில்லை. நீதிபதிகளே அவ்வழக்கை முதலில் தமது வீட்டிலும் பின்னர் மஸ்ஜிதிலும் விசாரித்து தீர்ப்பு வழங்கினர்.

### சம்பளம்

நீதிபதிகள் ஒவ்வொருவருக்கும் பொதுநிதியிலிருந்து சம்பளம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் 10தீனார்களை அவர்கள் சம்பளமாகப் பெற்றனர். பின்னர் அது தினந்தோறும் 7தீனார்கள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றப்பட்டது. கூபாவின் நீதிபதியாக இருந்த சுறைஹ் அவர்களுக்கு மாதாந்தம் 100தீனார்களை கலீபா உமர்(ரலி) சம்பளமாக வழங்கியதாக கூறப்படுகிறது.

## நகரங்கள் உருவாகுதல்

குலபாஉர் றாஷிதீன்களின் ஆட்சிக் காலப்பகுதியில் இஸ்லாமிய நாகரிகம் கண்ட பெரும் வளர்ச்சியில் நகரங்கள் உருவானதைக் குறிப்பிடலாம்.

இஸ்லாத்தின் ஆரம்பகாலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு பெரிய மாடா மாடி வீடுகள் இருக்கவில்லை. பெரும்பாலும் ஒரு தட்டு வீடு! அதற்குமுன் ஒரு முற்றவெளி! நடுவிலே கிணறு போன்ற சாதாரண அமைப்புக்களிலே வீடுகள் காணப்பட்டன. கலீபா உமர்(ரலி) காலத்தில் நாடுகள்பல வெல்லப்பட்டு செல்வங்கள் குவிந்த போது மதீனாவை நோக்கி வந்த பல கட்டிடக்கலைஞர்கள் பாரிய வீடுகளை அமைப்பதில் முனைப்புக் காட்டினர். கலீபா உதுமான்(ரலி) அவர்கள் கூட அழகும் விசாலமும் கொண்ட பாரிய ீடொன்றைக் கட்டினார். உதுமானின் காலத்தில் பல சஹாபாக்கள் பாரிய வீடுகளைக்கட்டியதாகவும் சுபைர் பின் அவாம் என்ற சஹாபி மதீனா, கூபா, புஸ்தாத், இஸ்கந்தரியா போன்ற நகரங்களில் தமக்கு வீடுகளை அமைத்துக் கொண்டதாகவும் சஃத் பின் அபீவக்காஸ்(ரலி) அவர்கட்கு மதீனாவில் வாதி அகீக் பகுதியில் பாரிய கோட்டை ஒன்று இருந்ததாகவும் வரலாற்றாசிரியர் மஸ்ஊதி குறிப்பிடுகிறார்.

நகரங்களைப் பொறுத்தவரை பாதுகாப்பு கருதி அந்நகரங்களைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டது. மதீனாவில் இவ்வாறான வேலிகள் அமைக்கப்பட்டு வாசல்களில் பாதுகாவலன் காவல் புரிந்தான

## பஸரா நகர் உருவாக்கம்

கலீபாக்கள் காலத்தில் அமைக்கப்பட்ட நகரங்களில் பஸரா முதன்மையானதாகும். கலீபா உமர் அவர்களின் அனுசரனையுடன் அமைக்கப்பட்ட இந்நகரத்திற்கான திட்டமிடல் வரைபடத்தை உத்பா பின் ஹஸ்வான் என்பவர் ஹிஜ்ரி 16ல் மேற்கொண்டார். பாலைவன வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட அரபிகளுக்கு ஏற்றால் போல் சுத்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று, விசாலமான வெளி, ஆடு, மாடு, ஒட்டகங்கள் புல் மேய்வதற்கான வசதிகளுடன் இந்நகர் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டது.

இங்கு முதன் முதலில் செங்கல், களிமண் கொண்டு மஸ்ஜித் நிர்மாணிக்கப்பட்டது அதன் பக்கத்தில் அரசாங்கச் செயலகம் அமைக்கப்பட்டது. பின்னர் ஒவ்வொரு கபீலாக்களுக்கும் (கோத்திரங்களும்) ஏற்றாற்போல் பிரதேசங்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கபீலாக்களுக்கும் தனித்தனி மஸ்ஜிதுகள், மையவாடிகள் நிறுவப்பட்டன. வீடுகள் மூங்கில்களால் அமைக்கப்பட்டன. பின்னர் செங்கல், களிமண்ணால் உறுதியான வீடுகள் கட்டப்பட்டன.

பஸரா நகரம் உருவாகி 20ஆண்டுகளுக்குள்ளே இஸ்லாமிய உலகின் முக்கிய வர்த்தக மையமாக அது திகழ்ந்தது. யூப்ரடிஸ் அருகில் அது அமைந்ததால் இந்தியா சீனாவுக்கிடையே கடல் மார்க்க வியாபாரத்திற்கு கேந்திர நிலையமாகவும் அமைந்தது.

பஸராவில் ஆரம்பத்தில் றபீஆ, முளர் கோத்திரத்தினரே வாழ்ந்தனர். பின்னர் அங்கு இந்தியா, சீனா, சிந்து மக்கள் குடியேறினர்.

## கூபா நகர்

கலீபா உமர்(ரலி) காலத்தில் உருவாக்கப்பட்ட மற்றொரு நகரம் கூபா வாகும். ஹீறா என்ற பழம் பெரும் நகரத்திற்கு அண்மையில் யூப்றடிஸ் நதியின் மேற்குப்புறத்தில் அமைக்கப்பட்டது. தளபதி ஸஃது பின் அபீவக்காஸின் பணிப்பின் பேரில் சல்மானுல் பாரிஸ், ஹுதைபதுல் யமான் ஆகிய இருவருமே இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்து நகர நிர்மாணத்துக்குப் பரிந்துரை செய்தனர். இவ்விடத்தைக் கலிபா அங்கீகரித்ததைத் தொடர்ந்து மதாயினில் நிலை கொண்டிருந்த தளபதி ஸஃதின் தலைமையில் 40000 பேர் கொண்ட படை ஹிஜ்ரி 17 முஹர்ரம் மாதம் கூபாவுக்கு வந்து முகாமிட்டு முதலில் கம்புகளினால் வீடுகள் அமைக்கப்பட்டன. அவ்வீடுகள் ஏற்பட்ட நெருப்பினால் எரியுண்டதைத் தொடர்ந்து கற்களினால் வீடுகள் அமைக்க கலீபா உமர்(ரலி) உத்தரவிட்டார்.

அபுல்ஹியாஜ் பின் மாலிக் அஸதி என்பவர் பாதைகளைத் திட்டமிட்டார். நடுவில் மஸ்ஜித் அமைக்கப்பட்டு அனைத்து வீதிகளும் மஸ்ஜிதிலிருந்து பிரிவதாக திட்டமிடப்பட்டது. ஒரு பாதையின் முடிவில் ஸஃது பின் அபீவக்காஸ் அவர்கட்கு வீடு அமைக்கப்பட்டது அவ்வீட்டிலேயே பைத்துல்மால் எனும் திறைசேரியும் அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரசீக கட்டிடக்கலைஞர்களைக் கொண்டு மஸ்ஜித் அரச செயலகம் என்பன நிறுவப்பட்டன. சுத்தமான காற்றைச் சுவாசிக்க வசதியாக வீதிகள் விசாலமாக அமைக்கப்பட்டன.

கூபா நிர்மாணத்துடன் அது மிகச்சிறந்த கேந்திர நிலையமாக மாற்றப்பட்டது கலீபா அலி(ரலி) அவர்கள் தனது ஆட்சியில் இஸ்லாத்தின் தலைநகரமாக இந்நகரத்தையே மாற்றினார். இவ்வாறு அவர் மாற்றியமைக்கு அந்நகரில் அவரது ஆதரவாளர்கள் நிறைந்திருந்ததும் அப்பூமியின் செழிப்பும் உலகின் பல பாகங்களுக்கும் தொடர்பு கொள்ளக்கூடிய மையத்தில் அந்நகரம் அமைந்திருந்ததும் காரணங்களாகும். கலீபா அலி(றழி) அவர்கள் இப்பூமியை ஈமானின் பொக்கிஷம் என்றும் அல்லாஹ்வின் வாள் என்றும் புகழ்ந்துள்ளார்.

## புஸ்தாத் நகர்

எகிப்தின் அலக்ஸாந்திராவை வெற்றிகொண்டு அங்கிருந்து ரோமர்களை விரட்டியடித்த அம்று பின் ஆஸ்(றழி) அவர்கள் அலக்ஸாந்திரியாவில் உள்ள கட்டிடங்களை மனதிற்கொண்டு அதனை எகிப்தின் தலை நகரமாக மாற்ற விரும்பி கலீபா உமர்(றலி) அவர்களின் அனுமதி கேட்டு எழுதினார். அம்று பின் ஆஸ் அவர்களின் தூதர் கலீபாவிடம் சென்ற போது அந்நகரிற்கும் மதீனாவிற்குமிடையே நீர் குறுக்கிடுகின்றதா? எனக் கேட்க ஆம் நைல் நதி ஓடும்போது நீர் குறுக்கிடும் என்றார் தூதர். அப்போது கலீபா உமர்(றழி) அவர்கள் எனக்கும் மக்களுக்குமிடையில் நீர் குறுக்கிட்டு என்னையும் அவர்களையும் அது பிரிப்பதை நான் விரும்பவில்லை நான் விரும்பும் போது தரை வழியால் சென்று மக்களைச் சந்திக்க வேண்டும் என எழுதினார் கலீபா. மேலும் அலக்சாந்திரியா ஒரு தலை நகருக்குப் பொருத்தமான இடமாகவும் இருக்கவில்லை.

எனவே கவர்னர் அம்று பின் ஆஸ் அவர்கள் அரபு நாடுகளுடன் இலகுவாகத் தொடர்பு கொள்ளக் கூடிய புஸ்தாத் என்ற இடத்தை தமது தலை நகரமாகத் தெரிவு செய்தார்.

புஸ்தாத் சமவெளியாகவும் வயல் நிலங்கள் நிறைந்ததாகவும் காணப்பட்டது. அங்கே பாபிலோனிய கோட்டையைத் தவிர வேறுஎவ்வித கட்டிடங்களும் காணப்படவில்லை. கோட்டையின் வடக்கிலும் கிழக்கிலும் மரங்கள், பேரீத்தம், திராட்சைத்தோட்டங்கள் நிறைந்திருந்தன. நைல்நதி, மலைகள் நிறைந்திருந்த புஸ்தாத் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தையே கவர்னர் தேர்ந்தெடுத்தார். புஸ்தாத் என்றால் பாதுகாப்பான நகரம் என்பது பொருள். அதன் பொருளிலேயே அந்நகருக்கும் புஸ்தாத் என்றும் பெயரிடப்பட்டது.

கவர்னரின் முடிவின் பேரில் நான்கு தளபதிகள் அங்கு நகர நிர்மாணப்பணியில் ஈடுபட்டனர். கபீலாக்கள் அடிப்படையில் மக்கள் குடியமர்த்தப்பட்டனர். ஆரம்பத்தில் ஒரு மாடியாகவிருந்த வீடுகள் பின்னர் பல மாடிகள் கொண்டதாக மாற்றம் பெற்றன.

## மஸ்ஜித்கள் நிர்மாணம்

முஸ்லிம் சமூக அமைப்பில் முக்கியமாக இடம்பெறுவது மஸ்ஜிதாகும். நபி(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் வந்து குபாவில் தங்கிய சில நாட்களில் அங்கே ஒரு மஸ்ஜிதை நிறுவினார்கள்

பின்னர் மதீனா வந்த நபி(ஸல்) அவர்கள் மஸ்ஜிதுன் நபவியை நிறுவினார்கள். இம்மஸ்ஜித் இஸ்லாமிய அரசாங்கத்தின் செயலகமாகச் செயற்பட்டது. கலீபாக்களான அபூபக்கர்(ரலி), உமர்(ரலி), உதுமான்(ரலி) ஆகியோரின் ஆட்சிக்காலத்திலும் இம்மஸ்ஜிதே அரசாங்க செயலகமாக செயற்பட்டதால் இம்மஸ்ஜிதுக்கு அவர்களும் அளப்பெரிய சேவைகளைச் செய்துள்ளனர்.

கலீபா உமர்(ரலி) காலத்தில் அவர் அப்பாஸ்(ரலி) அவர்களின் வீட்டைவாங்கி மஸ்ஜிதாக இணைக்க விரும்பினார். உடனே அப்பாஸ்(ரலி) தனது வீட்டை மஸ்ஜிதுக்கு அன்பளிப்புச் செய்தார்கள்.

ஏழு முளம் உயரமாக இருந்த மஸ்ஜிதின் முகட்டை பதினொரு முளமாக உயர்த்திய கலீபா உமர்(ரலி) அவர்கள் மஸ்ஜிதின் பரப்பை 18200முளம் கொண்டதாக விஸ்தரிப்புச் செய்தார்கள். உதுமான்(ரலி) அவர்களின் ஆட்சியின் போது மஸ்ஜித் 160150முளத்தில் விஸ்தரிப்புச் செய்யப்பட்டது.

## ஜாமிஉ அம்றுப்னுல் ஆஸ்

கலீபா உமரின்(ரலி) ஆட்சியின்போது எகிப்தின் கவர்னராக இருந்த அம்றுப்னுல் ஆஸ்(ரலி) அவர்களால் கட்டப்பட்ட மஸ்ஜித் ஜாமிஉல் அதீக் என அழைக்கப்பட்ட மஸ்ஜித் அம்றுப்னுல் ஆஸ்(ரலி) ஆகும். இது ஹிஜ்ரி 21ல் அமைக்கப்பட்டது. இன்று இது பிரமாண்டமான மஸ்ஜிதாக உள்ள போதும் ஆரம்பத்தில் 50முளம் நீளமாகவும் 30முளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலமாகவும் கட்டப்பட்டது. எகிப்தில் கட்டப்பட்ட முதல் ஜாமிஉல் மஸ்ஜித் இதுவாகும்.

## இலக்கியம்

ஜாஹிலிய்யாக்காலத்தில் பெருவளர்ச்சிகண்டிருந்த இலக்கியம் அல்-குர்ஆனின் வருகையோடு அதனோடு போட்டிபோட முடியாத நிலையில் ஸ்தம்பித நிலையையடைந்தது. எதையும் பொருளாகக் கொண்டுபாடிய ஜாஹிலிய்யாக் கவிஞர்களுக்கு இஸ்லாம் வரையறை போட்டு இப்படித்தான் பாட வேண்டும் என்று விதிகளை வகுத்தது.

இதனால் நபி(ஸல்) அவர்கள் காலப்பகுதியிலும் குலபாஉர் ராஷிதீன்கள் காலப்பகுதியிலும் இலக்கியம் பெருவளர்ச்சி காணவில்லை. எனினும் இலக்கியம் இஸ்லாமிய வரையறைக்குட்பட்டு இஸ்லாமிய த.:.வாவை மையமாகக் கொண்டு ஓரளவு வளர்ச்சிப்பாதையில் சென்றது.

முதல் கலீபாவாக அபூபக்ர்(ரலி) பதவியேற்ற போதும் ஸகாத் வரி தரமாட்டோம் என சில குழுக்கள் மறுத்தது பற்றி ஏலவே படித்திருக்கிறீர்கள்.

இது தொடர்பாக எச்சரிக்கை செய்தல், பயம் காட்டுதல், உபதேசம் செய்தல் போன்றவிடயங்களில் கவிஞர்கள் கவனம் செலுத்தினர்.

கவிஞர் ஹாரிஸ் பின் முர்ராஹ் பனீ ஆமிர் கிளையாருக்கு உபதேசம் செய்கிறார்.

“ஆமிர் கிளையினரே, இறைவனுக்கு உதவி செய்தால்
உதவி செய்யப்படுவீர்கள்.
அல்லாஹ்வுக்கும் சமயத்துக்கும் நீங்கள் துரோகமிழைத்தால்
இழிவு படுத்தப்படுவீர்கள்
நீங்கள் தோற்கடிக்கப்பட்டால் உங்களுக்கு
விமோசனம் கிடையாது”

எனக் கவிதைமூலம் எச்சரிக்கை விடுத்தார்.

அக்காலத்தில் மதம்மாறியோரும் தங்கள் கருத்துக்களை கவிதைகளில் வடித்தனர்.

கலீபா உமர்(ரலி) காலத்தில் பல இஸ்லாமிய யுத்தங்கள் நடைபெற்றன. பாரசீகத்துக்கான போரும் அதில் ஒன்று. கவிஞர் நாபிஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஜு·.தீ தனது மனைவியிடத்தில் தனது பயணம் பற்றி கூறுகிறார்.

"என் சாச்சாவின் மகளே!
இறைவேதம் என்னை யுத்தத்திற்காய் அழைக்கிறது
அவ்வழைப்பை என்னால் ஏற்காமல் முடியாது.
நான் மீண்டு வந்தால் என்னை இறைவன்
இங்கு கொண்டு சேர்த்துவிட்டான்.
நான் மரணித்து விட்டால் நீ வேறொருவரைத் தேடிக்கொள்.
யுத்தம் செய்யாமல் இருக்க நான் முடவனுமல்ல! குருடனுமல்ல!
நோயாளியுமல்ல! இயலாதவனுமல்ல!

இவ்வாறு கவிதை வடிக்கிறார் நாபிஆ. உமர்(ரலி) கொலை செய்யப்பட்டபோதும் அதேபோல் உதுமான்(ரலி) கொல்லப்பட்ட போதும் அலி(ரலி) அவர்கள் கொல்லப்பட்ட போதும் கவிஞர்கள் இரங்கல் கவிபாடினார்கள். இதேபோல் ஜமல் யுத்தம், ஸிப்பீன் யுத்தத்தின் போதும் அவரவர் தரப்புக்காகவும் கவிதைகள் பாடினர்.

"நாங்கள் ஒட்டகைக்காரர்கள்!
உதுமானின் கொலைக்காக கண்ணீர் வடிப்பவர்கள்
மரணத்தை நாம் வரவேற்கிறோம்
அது தேனைவிட எமக்கு இனிப்பானது.

இவ்வாறு ஒவ்வொரு தரப்பினரும் தமது தரப்புக்காக பாடிய கவிதைகளும் குலபாஉர் ராஷிதீன்கள் கால இலக்கியமாகப் பதிவு செய்யப்பட்டது.

மேலும் இக்காலத்தில் நடைபெற்ற அந்நிய படையெடுப்புக்கள் பாரசீகர்களுக்கும் ரோமர்களுக்குமெதிரான சண்டைகளில் முஸ்லிம்களைத் தூண்டும் வகையில் இஸ்லாமிய கவிஞர்கள் பல கவிதைகளைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.
கலீபாக்கள் காலத்திலும் அதற்கு முந்திய நபி(ஸல்) அவர்கள் காலத்திலும் கவிதைகள் ஜாஹிலிய்யாப் போக்கிலிருந்து விடுபட்டன. காதல் கவிதைகள், பிறரை நிந்தித்துப்பாடல், பொய்யாகப் புகழ்தல், மதுபானம் பற்றிய வர்ணனை போன்ற பண்புகள் மாறி ஜிஹாதின் பக்கம் அழைக்கும் கவிதைகளும் எதிரிகளை நிந்திக்கும் கவிதைகளும் இக்கால கவிதைப் பொருட்களாக மாறின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரை நடை இலக்கியம்

கலீபாக்கள் காலத்தில் செய்யுள் இலக்கியம் காலத்தின் தேவைக்கேற்ப வளர்ச்சி கண்டதுபோல் உரைநடை இலக்கியம், குத்பாக்கள், றஸாயில்கள், வஸிய்யத்கள் போன்றவைகளும் வளர்ச்சி கண்டன.

அபூபக்கர்(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்கள் வபாத்தான போது அவர்கள் வபாத்தாக வில்லை. வபாத்தானார்கள் எனக் கூறுவோரை எனது வாளுக்கு இரையாக்குவேன்; என்று உமர்(ரலி) கர்ச்சித்த போதும் உஸாமாவின் படையை யுத்தத்திற்கு அனுப்பிய போதும் ஸகாத்தை மறுத்தோருக்கு எதிராகவும் கிலாபத் பதவியை ஏற்றபோதும் அவர் ஆற்றிய பிரசங்கங்களும் வரலாற்று முக்கியமானவை.

மேலும் கலீபாக்களான உமர்(ரலி), உதுமான்(ரலி), அலி(ரலி) சஹாபாக்களான இப்னு மஸ்ஊத்(ரலி) போன்றவர்கள் காலத்திற்கும் நிகழ்வுக்கும் ஏற்றவகையில் ஆற்றிய பிரசங்கங்கள் வரலாற்றில் புகழ்பெற்றன.

## கடிதங்கள்

றிஸாலாக்கள் எனப்படும் கட்டுரைகள், கடிதங்கள் கலீபாக்கள் காலத்தில் வளர்ச்சி பெற்ற உரைநடை இலக்கியத்தில் ஒரு பகுதியாகும். ஸகாத் தர மறுத்தோர் கூடும் இடங்களில் வாசிப்பதற்கு கலீபா அபூபக்கர்(ரலி) தயாரித்து அனுப்பிய நிருபமும் கலீபா உமர்(ரலி) பஸராவின் கவர்னர் அபூமூஸல் அஸ்அரி(ரலி)க்கு நீதி தொடர்பாக எழுதிய கடிதமும் ஜெருஸலத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு அவர் அளித்த பாதுகாப்பு உறுதிக் கடிதமும் கலீபா உதுமான்(ரலி) அவர்கள் தமது கவர்னர்களுக்கு அனுப்பிய கடிதங்களும் கலீபா அலி(ரலி) கவாரிஜிகளுக்கும் முஆவியாவிற்கும் எழுதிய கடிதங்களும் இலக்கியத்தில் முக்கிய இடம் பிடித்துள்ளன.

## கல்வி

கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மார்க்கம் இஸ்லாமாகும். ஆண், பெண் இருபாலாரும் கல்வி பெறுவதைக் கட்டாயமாக்கிய மார்க்கம் இதுவே! கலீபாக்கள் காலத்திலும் மக்களுக்கு மார்க்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUB

போதிப்பதில் பெரும் கவனம் செலுத்தப்பட்டது. புதிதாக இஸ்லாத்திற்கு வரும் பிரதேசங்களுக்கு சஹாபாக்கள் அனுப்பப்பட்டு மார்க்க அறிவுகள் அவர்களுக்கும் போதிக்கப்பட்டன. கற்றல், கற்பித்தல் இடம்பெறுமிடமாக மஸ்ஜித்கள் காணப்பட்டன. சிறுவர்களுக்கு பாடம் போதிக்கவென "கதாயிப்" எனப்படும் மத்ரஸாக்கள் உமர்(ரலி) காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

அல்-குர்ஆனை மக்களுக்கு கற்றுக் கொடுக்கும் விடயம் முக்கியமானதாகக் கருதப்பட்டது. கலீபா அபூபக்கர்(ரலி) காலத்தில் பெண்கள், பிள்ளைகள், எல்லோருக்கும் இது கற்பிக்கப்பட்டது. கலீபா உமர்(ரலி) காலத்தில் அல்-குர்ஆனை மனனம் செய்பவர்கட்கு நிறைய ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. உபை பின் க.்.பு(ரலி), முஆத் பின் ஜபல்(ரலி), ஸெய்த் பின் தாபித்(ரலி) போன்றோர் சிறந்த ஹாபிஸ்களாகப் பேணப்பட்டனர். இப்னு அப்பாஸ்(ரலி), இப்னு மஸ்ஊத்(ரலி) ஆகியோர் சிறந்த விரிவுரையாளரர்களாக மதிக்கப்பட்டனர்.

சிறந்த ஹதீஸ் அறிவிப்பாளர்களாக அபூஹுறைறா(ரலி), ஆயிஷா(ரலி), இப்னு உமர்(ரலி), அனஸ் பின் மாலிக்(ரலி) போன்றோர் கருதப்பட்டனர்.

நபி(ஸல்) அவர்கள் வாழ்க்கை, யுத்தங்கள் சிறந்த பாடங்களாகப் படிக்கப்பட்டன சிறந்த கவிதைகளும் வளர்ச்சி பெற்றன.

பாரசீகம் வெற்றி கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து ஹீராப் பிரதேசத்தில் எழுத்தறிவுள்ள மக்கள் அதிகம் காணப்பட்டனர். அவர்கள் மதீனா கொண்டு வரப்பட்டு அவர்கள் மூலம் மதீனாவில் எழுத்தறிவு போதிக்கப்பட்டது. கலீபாக்கள் காலத்தில் எழுத்தறிவுள்ளவர்கள் அதிகம் காணப்பட்டனர். கலீபாக்கள் அனைவரும் எழத்தறிவுள்ள வர்களாகவே இருந்தனர். அல்-குர்ஆனை பலர் எழுதுவதில் ஈடுபாடு காட்டியதும் ஹதீஸ்களை எழுதுவதில் அவர்கள் பெரும் கவனம் செலுத்தவில்லை. நஹ்வு எனப்படும் இலக்கணக் கலை கலீபா அலி(ரலி) அவர்களின் வேண்டுகோளின் பேரில் அபுல் அஸ்வதுத்துவலி என்பவரால் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக நிலை

குலபாஉர் ராஷிதூன்கள் ஹிஜ்ரி 11ல் அரேபிய தீபகற்பத்தில் தங்கள் ஆட்சியை அமைத்த போது அதன் பக்கத்தில் இரு பெரும் வல்லரசுகள் மிகப்பலத்துடன் ஆட்சியில் அமர்ந்திருந்தனர்.

1- பாரசீகப் பேரரசு:
இதன் அரசன் கிஸ்ரா என அழைக்கப்பட்டான். பாரசீகம் (ஈரான்), ஈராக், ஷாமின் கிழக்குப் பிரதேசங்கள், அறபு தீபகற்பத்தின் வட பகுதிகள், ஆர்மேனியா போன்ற பிரதேசங்கள் இவனது ஆட்சியின் கீழ் இருந்தன. மதாயின் தலைநகராக இருந்தது.

2- ரோமப் பேரரசு:
இதன் ஆட்சியாளன் கைசர் என அழைக்கப்பட்டான். பலஸ்தீன், சிரியா, ஜோர்தான், லெபனான், துருக்கி, எகிப்து, வடஆபிரிக்கா, போன்ற பரந்த பிரதேசங்கள் இவனது கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன.

பாரசீகத்தை முழுமையாக தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த கலீபாக்கள் உரோம ராஜ்யத்தையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

எமன், ஷாம், ஈராக், பைத்துல் முகத்தஸ், எகிப்து போன்ற பிரதேசங்கள் வெற்றி கொள்ளப்படும். கிஸ்ராவின் பொக்கிஷங்ளை முஸ்லிம்கள் வெற்றி பெறுவார்கள் என்ற நபி(ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கள் இங்கு நிரூபிக்கப்பட்டன.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

கிஸ்றா அழிந்தால் மீண்டும் ஒரு கிஸ்றா வரமாட்டார். அதேபோல் கைசர் தோற்றால் மீண்டும் ஒரு கைசர் வரமாட்டார். அவர்கள் இருவரினதும் பொக்கிஷங்களை அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் செலவு செய்வீர்கள்.

இந்த ஹதீஸ் உண்மைப்படுத்தப்பட்டது.

இவ்வெற்றிகளால் இஸ்லாமிய இராஜ்யம் விரிவடையவும், இஸ்லாமிய ஒளியில் அதிக மக்கள் இணைந்து கொள்ளவும் இஸ்லாமிய சட்டங்கள் அமுலாகவும் அல்-குர்ஆனின் மொழியான அறபு மொழி பரவவும் வழிவகுத்தன.

றோம, பாரசீக மன்னர்களின் கொடுங்கோல் ஆட்சியினாலும் தாங்கமுடியாத வரிச்சுமையாலும் வதைக்கப்பட்ட மக்கள் இஸ்லாமிய ஆட்சியின் நீதி, நேர்மை, சமத்துவம் கண்டு மகிழ்ந்தனர். அநியாயமும், ஆதிக்கமும் தம்மை விட்டு நீங்கிய தென்பதை எண்ணி மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய ஆட்சியின் இத்தன்மையினால் பிடிக்கப்பட்ட நாடுகளிலிருந்த மக்கள் இஸ்லாத்தைத் தழுவ ஆரம்பித்தனர்.

இதனால் நபி(ஸல்) அவர்கள் காலத்தில் அறபிகளாக இருந்த இஸ்லாமிய சமூகம் கலீபாக்கள் காலத்தில் அறபிகள், பாரசீகர்கள், எகிப்தியர்கள், பர்பர்கள், றோமர்கள் போன்ற பல்வேறு இனங்களையும் உள்ளடக்கியது.

கலீபாக்களின் ஆட்சியின் போது அறபு மொழியே பெரும்பாலும் பேச்சு மொழியாகவும் நிருவாக மொழியாகவும் இருந்த போதும் அறபிகள், அறபி அல்லாதவர்கள் என்ற பாகுபாடு இருக்கவில்லை. முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்களே என்ற வாஞ்சையுடன் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழ்ந்த யூதர்கள், கிறிஸ்தவர்கள் அரசாங்கத்திற்கு "ஜிஸ்யா" எனும் வரி செலுத்தியதுடன் பூரண மத சுதந்திரத்தை அனுபவித்தனர். அவர்களை இஸ்லாத்தில் இணையுமாறு வற்புறுத்தப்பட வில்லை. ஆனால் அவர்கள் இஸ்லாத்திற்கு வந்தால் "ஜிஸ்யா" எனும் வரி செலுத்தத் தேவையில்லை. ஒரு முஸ்லிம் அனுபவிக்கும் அனைத்து சுதந்திரங்களையும் அவர்கள் அனுபவிப்பர்.

இஸ்லாமிய வெற்றிகளைத் தொடர்ந்து அறபிகள் அல்லாத நாட்டுக்கு இஸ்லாம் சென்ற போது மொழி வேற்றுமை பாராட்டப்பட வில்லை. ஆட்சி செய்யும் கவர்னர் அறபு மொழி பேசும் முஸ்லிமாகவிருந்தார். நாளடைவில் மக்கள் அறபு மொழி பேசுபவர்களாக மாறினர்.

## உணவு

உணவு வழக்கத்தைப் பொறுத்தவரை அதிக உணவு உட்கொள்பவர்களாக அவர்கள் இருக்கவில்லை. "நாங்கள் பசிக்கும் வரை புசிக்காத வயிறார உண்ணாத சமூகத்தினர்" என்ற நபி மொழிக்கேற்ப அவர்கள் வாழ்ந்தனர். றொட்டியும் இறைச்சியும் அவர்களின் உணவில் பிரதான பங்கை வகித்தன. றொட்டியில் கறியை ஊற்றி நனையவைத்து அதன் மேல் இறைச்சியை வைத்து உண்பார்கள். சிலர் றொட்டியுடன் நெய்யைச் சேர்த்துண்பர். நெய்யுடன் சேர்த்து கோதுமை, பேரீச்சம் பழத்தை சமைத்தும் உண்பர். உண்பதற்கு முன்னும், பின்னும் கையை கழுவுவோராக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளாலேயே உண்டனர்.

நாட்டறபிகள், நகர அறபிகள் என இரு வகையாக வாழ்ந்தனர். நாட்டுப்புறத்தில் வாழ்ந்த அறபிகள் இரவு வேளைகளில் தங்களது வீட்டுக்கு விருந்தினரை வரவழைப்பதற்காக விளக்கேற்றி வைப்பார்கள். அவர்கள் விவசாய சமூகமாக இல்லாத காரணத்தினால் மரக்கறி உண்பது அவர்கள் வழக்கமாக இருக்கவில்லை.

## உடை

கலீபாக்கள் நபி(ஸல்) அவர்களைப் போன்று மிக எளிமையாகவே உடுத்தார்கள். கலீபா அபூபக்ர்(ரலி) அவர்கள் மேலங்கியும் போர்வையும் அணியக்கூடியவராக இருந்தார்கள். ஒரு முறை ஹிம்யரீன்களின் அரசன் மதீனா வந்தபோது கலீபா அபூபக்ர் (ரலி) அவர்கள் தோளில் ஆட்டின் தோலைப் போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரிமடைந்தான்.

கலீபா உமர்(ரலி) அவர்கள் கம்பளியிலான ஒட்டுப்போட்ட ஜுப்பாக்களை அணிந்தவராக இருந்தார்கள்.

அவர்களின் வாகனம் பெரும்பாலும் ஒட்டகையாகவே இருந்தது. உமர்(ரலி) அவர்களின் கவர்னராக மதாயினில் இருந்த சல்மானுல் பாரிஸ்(ரலி) அவர்கள் கம்பளி ஆடையை அணிந்தவராகவும் கழுதையில் பயணம் செய்பவராகவும் கோதுமை றொட்டியை உண்பவராகவும் இருந்தார். மதாயின் பாரசீக ஆட்சியாளர்களின் தலைநகரமாக திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. தளபதி அபூஉபைதா பின் ஜர்ராஹ்(ரலி) அவர்கள் சிரியாவில் கம்பளி ஆடையையே அணிந்தார்கள். அப்போது அவரது நண்பர்கள் நீங்கள் ஷாமில் உள்ளீர்கள். இங்கே எதிரிகள் எம்மைச் சூழ உள்ளனர். உங்கள் உடைகளை மாற்றிக் கொள்வது நல்லதெனக் கூற "நான் நபி(ஸல்) அவர்கள் காலத்தில் உடுத்தது போன்றே உடுப்பேன் என்றார்கள்.

நாட்டறபிகள் நடுவிலே பிளந்த நெடிய சட்டையை அணிந்து அதற்கு மேல் மேலங்கியைப் போடுவார்கள். சிர்வால் எனப்படும் களிசனையும் அணிவார்கள்.

இக்காலத்தில் தலைக்கு தலைப்பாகை அணியும் வழக்கம் இருந்தது. வயது, கல்வி, பதவிக் கேற்ப அதன் அளவு வேறுபடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலுக்கு செருப்பு போடும் வழக்கமும் அவர்களிடமிருந்தது. பெண்கள் சிர்வால், சட்டை, போர்வை என்பவற்றை அணிபவர்களாக இருந்தனர். வெளியே போகும் போது உடம்பை முழுமையாக மூடக்கூடிய கறுப்பு மேலங்கியை அணிவர். தலையை மூடக்கூடியவர்களாகவும் இருந்தனர்.

## பெண்கள்

கலீபாக்கள் காலத்தில் பெண்கள் பூரண சுதந்திரத்தை அனுபவித்தனர். மஸ்ஜிதுக்கு வரக்கூடியவர்களாக கலீபாக்களின் பிரசங்கங்களைக் கேட்கக் கூடியவர்களாக அவர்கள் இருந்தனர். ஆயிஷா(ரலி) அவர்கள் சிறந்த மார்க்க அறிஞராகவும் ஹதீஸ் அறிவிப்பாளராகவும் திகழ்ந்தார்கள். யுத்தங்களிலும் பெண்கள் கலந்து படையினருக்கு உதவி செய்தனர்.

* * * * * * * * * * * * * * * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை

LENDING SECTION

| | | | |
|---|---|---|---|
| 01 | சஹீஹுல் புஹாரி | | |
| 02 | சஹீஹு முஸ்லிம் | | |
| 03 | இமாம் இப்னுகதீர் | அல்பிதாயா வந்நிஹாயா | தாறுல். பிக்ரில் அறபி |
| 04 | இப்னுல் அதீர் | அல் காமில் பித் தாரீஹ் | தாறுல் குத்தாபில் அறபி லெபனான் |
| 05 | காழி அபுபக்கர் இப்னுல் அறபி | அல்-அவாஸிம் மினல் கவாஸிம் | மக்தபத்துல் இல்மிய்யா லெபனான் |
| 06 | இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி | முஸ்னத் அபீபக்கர் | தாறுல் ஸலபிய்யா பம்பாய் |
| 07 | மஹ்மூத் ஷாக்கிர் | தாரீகுல் இஸ்லாமி | மக்தபுல் இஸ்லாமி |
| 08 | முஹம்மத் ஹுழ்ரிபேக் | தாரீகுல் உமமில் இஸ்லாமிய்யா | தாறுல் பிக்ரில் அறபி |
| 09 | அப்துல் வஹாப் நஜ்ஜார் | குலபாஉர் ராஷிதூன் | தாறுல் குத்தாபில் இல்மிய்யா லெபனான் |
| 10 | ஹஸன் இப்றாஹீம் ஹஸன் டாக்டர் | தாரீகுல் இஸ்லாம் | மக்தபதுல் நஹ்ழதில் மிஸ்றிய்யா |
| 11 | ஷவ்கீ ழைப் டாக்டர் | தாரீகுல் அதபில் அறபி (அல்-அஸ்றுல் இஸ்லாமி) | தாறுல் மஆரிப் |
| 12 | முஹம்மத் ஸுப்ஹி டாக்டர் | உதுமான் பின் அப்பான் | இஸ்லாமியப் பல்கலைக் கழகம் - மதீனா |
| 13 | டாக்டர் முஹம்மத் பின் சாமில் சுல்மி | அபூபக்கர் சித்தீக்(ரலி) | தாறுல் வதன் |
| 14 | டாக்டர் முஹம்மத் பின் சாமில் சுல்மி | அலீ பின் அபீதாலிப்(ரலி) | தாறுல் வதன் |
| 15 | டாக்டர் முஹம்மத் பின் சாமில் சுல்மி | உமர் பின் கத்தாப்(ரலி) | தாறுல் வதன் |
| 16 | ஏ.எம். அபூபக்கர் | இஸ்லாமிய வரலாறு | முனீரா பப்ளிகேஷன் |
| 17 | எம்.ஐ.எம். அமீன் | இஸ்லாமிய நாகரிகம் | அல்-கலம் பதிப்பகம் |

MARUTHAMUNAI
PUBLIC LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L10910

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் ஏனைய நூல்கள்




ISBN: 978-955-1407-03-2

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org